ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வாரஇதழாக மக்கள் கருத்துக்களுடன்!

☆ தருகை - 10 ரூபா

# முஸ்லிம் குரல்

☆ சுவடு -04

Muslim Kural

මුස්ලිම් කුරල්

☆ 14 மார்ச் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 10 - முஹர்ரம் - 1424 ☆ Registered as a Newspaper in Srilanka

## அன்பான நமது மக்களே!

13 ஏப்பிரல் 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூ".ப் ஹக்கீமுக்குமிடையே வன்னியில் பேசி உடன்பாடு காணப்பட்டு, இரு தரப்பாலும் இணக்கம் கண்டு, வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு நடந்தது என்ன என்று கேட்காமல் நாம் வாய் மூடி மௌனமாக இருக்கலாமா? இப்படிக் கேட்பதன் ஊடாக யாருக்கும் கோபம் வந்தால் நாம் என்ன செய்யலாம்? அதுபற்றி நாம் கவலைப்படவே முடியாது!

கடந்த 11 மாதங்களாக இக் கூட்டறிக்கையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை அமுலுக்குக் கொண்டு வருவதில் விடுதலைப் புலிகளின் தரப்பு எந்தவிதமான அரசியல் முயற்சிகளையும் இதுவரை எடுக்கவில்லை. மாறாக இக்கூட்டறிக்கையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை உதாசீனம் செய்து, முற்று முழுதாகப் புறக்கணித்து கூட்டறிக்கையை மீறும் வகையிலேயே விடுதலைப்புலிகள் பகிரங்கமாகவே செயற்பட்டு வருகின்றனர்..

இக்கூட்டறிக்கைக்கு பெரும் அரசியல் முக்கியத்துவத்தை வழங்கிய நமது அரசியல் தலைமையானது இக்கூட்டறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் அழுத்தங்களை விடுதலைப் புலிகளுக்கு கொடுப்பதில் ஏன் தயக்கம் காட்டுகிறது என்கின்ற சிந்தனைகள் முஸ்லிம் அரசியலில் அதிக அக்கறையுள்ள நமது மக்களிடம் ஏற்பட்டு வருகின்றன.

மாறி மாறி ஆட்சிக் கட்டிலில் வீற்றிருக்கும் சிங்கள அரசுகள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றியே வருகிறது என குரல் எழுப்பும் விடுதலைப் புலிகள், சர்வதேச சமூகமே பார்த்துக் கொண்டிருக்க முஸ்லிம் தலைமையுடன் செய்து கொண்ட அரசியல் உடன்பாட்டை பகிரங்கமாகவே மீறிவருவது எந்த வகையில் நியாயமானதாகும்? இக்கூட்டறிக்கையை "முஸ்லிம் மக்களுக்குள் சந்தைப்படுத்துவதில்" காட்டிய அக்கறையை முஸ்லிம் தலைமை ஏன் அமுல்படுத்துவதில்" காட்டவில்லை?

தாய்லாந்து, ஒஸ்லோ, பேர்லின் என பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு வரும் முஸ்லிம் தலைமை, சர்வதேச சமூகத்திடம் இக்கூட்டறிக்கை தொடர்ந்தும் மீறப்படுவதன் ஊடாக முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்படும் அநியாயம், அதர்மத்தை சுட்டிக் காட்டி குரல் எழுப்பாது ஏன் மௌனமாக உள்ளது? "அரசியல் பேச்சுவார்த்தை என்பது சும்மா போய் சும்மா திரும்பி வருவதுதானா?"

இக்கூட்டறிக்கை தொடர்பான முஸ்லிம் தலைமைகளின் இன்றைய அரசியல் நிலைப்பாட்டை உடனடியாக நமது மக்கள் முன் வைக்க வேண்டியுள்ளது. எதிர்வரும் 13, ஏப்ரல் 2003 ஆம் நாள், இக்கூட்டறிக்கைக்கு ஒரு வருடமாகிறது.

# பிரபா - ஹக்கீம் கூட்டறிக்கை

# முஸ்லிம் அரசியலில் வெற்றுக் காகிதத் துண்டுதான்!

(நமது அரசியல் செய்தியாளர்)



வரலாற்றில் நமது மக்கள் அரசியல் ரீதியாக ஏமாற்றப்பட்ட தருணங்களில் இதுவுமொன்று. விடுதலைப் புலிகளின் தலைமை முஸ்லிம்களை வஞ்சிக்கும் நோக்கில் - சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு ஆடிய அரசியல் நாடகத்தில் ஒரு மோசமான கட்டத்தின் அரசியல் சாட்சிதான் இக்கூட்டறிக்கை.

முஸ்லிம்களின் அரசியல், அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் செய்யாத கபடத்தனம் கொண்ட இக்கூட்டறிக்கையைக் கூட, விடுதலைப் புலிகளால் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நடைமுறைப்படுத்திக் காட்ட முடியவில்லை. உடன்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட 7 அம்சங்களில் ஒன்றுதானும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அனைத்து உடன்பாடுகளுமே பகிரங்கமாக மீறப்பட்டுள்ளன என்பதை நாமறிவோம்!


கீழுள்ள உடன்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனேயே முஸ்லிம் அரசியல் தலைமையினால் மேற்கொள்ளப்பட்டது. நம்மை ஏமாற்றியதை, ஏமாற்றி வருவதை இப்படி பட்டியல் போட்டு நாம் காட்ட வேண்டியுள்ளது.

| கூட்டறிக்கையில் உடன்பாடு காணப்பட்ட விடயங்கள் (13 ஏப்ரல் 2002) → | இதுவரையான நிலைமை (14 மார்ச் 2003) | நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது ✓ / நடைமுறைப்படுத்தப்படவில்லை X |
|---|---|---|
| 1. வடகிழக்கு மாகாணத்தில் செய்கை பண்ணப்படாமல் இருக்கும் முஸ்லிம்களின் விவசாய நிலங்களை மீண்டும் முஸ்லிம்கள் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்த வசதிசெய்து கொடுப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது. | அறுபதாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் பயிர்ச் செய்கை பண்ணப்படாமல் புலிகளினால் தடுக்கப்பட்டுள்ளது. இதுவரை இக்காணிகளில் சுமார் ஆயிரம் ஏக்கருக்குள்ளேதான் பயிர்ச்செய்கைக்கு வழிவிடப்பட்டுள்ளது. | X |
| 2. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடமிருந்து போராட்டத்திற்காகப் பணம் பெறும் நடைமுறையை உடனடியாக நிறுத்துவதென்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் தீர்மானிக்கப்பட்டது. | இக்கூட்டறிக்கையின் பின்னும் இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்கிறது. ஓரளவு கப்பம் பெறும் நடவடிக்கை குறைந்தது போல் தென்பட்டாலும், அண்மையில் சம்மாந்துறை முஸ்லிம் வர்த்தகர்களிடமும், தனவந்தர்களிடமும் கப்பம் பெறும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. | X |
| 3. வடகிழக்கில் மாவட்டம் தோறும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மூத்த தளபதிகளுடன் பேசித் தீர்க்கும் நோக்கிலும் தமிழ் முஸ்லிம் புரிந்துணர்வை வலுப்படுத்துவதற்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. | வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் நியாயமான அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான எவ்விதமான சந்திப்புகளும் நடைபெறவில்லை. தமிழ் முஸ்லிம் மக்களிடையே மோதலையும் விரோதத்தையும் உண்டுபண்ணும் திட்டமிட்ட செயற்பாடுகளே மேற்கொள்ளப்படுகின்றன. | X |
| 4. இவ்வாறான மேல்மட்டச் சந்திப்புக்களை தொடர்ந்தும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. | இக்கூட்டறிக்கைக்குப் பின்னும் உத்தியோகபூர்வமாக இரு தலைமைகளின் மேலிடமும் சந்தித்துக் கொள்ளவேயில்லை. முஸ்லிம் தலைமை சந்திப்பதற்கான ஆவலை பல முறை வெளிப்படுத்தியும் சந்திப்புக்கான உடன்பாடு இதுவரை எட்டப்படவில்லை. | X |
| 5. அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் மக்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் ஒரு தரப்பாகப் பங்குபற்றுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. | பேச்சுவார்த்தை தொடங்கி (16.09.2002) 6 மாதங்கள் கடந்தும் 5 சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடந்து விட்டன. இதுவரை முஸ்லிம்கள் சார்பாக தனித்தரப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. | X |
| 6. வடகிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் அடிப்படை, அரசியல் பிரச்சினைகளை கோட்பாட்டு ரீதியாக அணுகி, அவர்களின் அரசியல், கலாசார தனித்துவ உரிமைகளைப் பேணுவதற்கு முடிவு செய்யும் பொருட்டு தொடர்ச்சியாகப் பேசுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. | முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளை கலாசார, தனித்துவ உரிமைகளை மதித்து ஏற்றுக் கொள்ளும் அரசியல் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் தரப்பு இதுவரை வெளிப்படுத்தவில்லை. இப்படியான சந்திப்புக்களும் நடைபெறவில்லை. | X |
| 7. முஸ்லிம்களின் அதிகபட்ச ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுள்ளதால் வடகிழக்கு முஸ்லிம்கள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுடன் பேசுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. | இடையே எம்.எச்.முஹமத், ஏ.எச்.எம்.அஸ்வர், அலிசாஹிர் மௌலானா போன்றோர்களுடனும் பேசப்பட்டு - முஸ்லிம் காங்கிரஸுடன் மட்டும் பேசுவது பிழை என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. அதன்பின்பு முஸ்லிம் காங்கிரஸுடன் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளும் நடைபெறவில்லை. | X |

# அமெரிக்க அடிவருடி முஷாரபின் காட்டிக் கொடுப்பு!

அமெரிக்காவை மட்டுமல்ல, முழு உலகையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கி உறைய வைத்த செப்டம்பர் 11 தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி என அமெரிக்காவினால் குற்றம் சாட்டப்பட்டு தேடப்பட்டு வந்த அல்காய்தாவின் முக்கிய தளபதிகளில் ஒருவரான காலித் ஷேக் முஹம்மட் கடந்த 1ஆம் திகதி பாகிஸ்தானில் வைத்து காட்டிக் கொடுக்கப்பட்டு அமெரிக்க உளவுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கையின் பின்னாலிருந்த பாகிஸ்தான் அரசாங்கத்தின் துரோகத்தனம் சர்வதேச முஸ்லிம்கள் மத்தியில் மிக வெளிப்படையாகவே அம்பலப்படுத்தப்பட்டு விட்டது. கடந்த காலங்களில் பாகிஸ்தானில் வைத்து அல்காய்தாவின் பல்வேறு மூன்றாம் நிலைத் தளபதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை கைது செய்தவுடன் உடனடியாக அமெரிக்காவுக்கு கையளிப்பதே பாகிஸ்தான் அரசாங்கத்தின் கைங்கரியமாக இருந்து வருகிறது. காலித் ஷேக் முகம்மத் கைது செய்யப்பட்டவுடன் உலக ஆதிக்க அரசான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் பிரிவின் அனைத்து தரப்பினரினதும் சந்தோசத்திற்கு மட்டில்லை என்கின்றனர் வெளிநாட்டு செய்தியாளர்கள். அந்தளவிற்கு காலித் ஷேக் முகம்மத் முக்கியமானவராக உள்ளார்.



காலித் ஷேக் முகம்மத் கைது செய்யப்பட்டதன் பின் வெள்ளை மாளிகையின் பேச்சாளர் அரி பிளிச்சர் மட்டட்ட மகிழ்ச்சியில் திளைத்தவாறு இப்படிக் கூறினார். "காலித் ஷேக் முகம்மத் கைது செய்யப்பட்டது பாகிஸ்தான் அரசின் அண்மைய சாதனைகளில் பிரதானமானது" என்றார். புஷ் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "நான் மிக மகிழ்ச்சியுடன் காணப்படுகிறேன். பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும், அமெரிக்க சி.ஐ.ஏ.யின் பாகிஸ்தான் பிரிவான எப்.பி.ஐக்கும் எனது பாராட்டுக்கள்" என பாகிஸ்தான் அரசுக்கு மீண்டுமொரு சபாஷ் போட்டுள்ளார் ஆதிக்க வெறியன் புஷ். துரோகத்தனத்திற்கு இதுவொரு செட்டிபிகேட் என பாகிஸ்தான் பத்திரிகைகள் புஷ்ஷின் பாராட்டை விமர்சித்துள்ளன.

இவரை கைது செய்வதற்கு தகவல் தருவோருக்கு இருபத்தைந்து மில்லியன் அமெரிக்கா டொலர்கள் சன்மானம் வழங்கப்படுமென அமெரிக்க

→ 04

# எதிர்க்கட்சிகளின் மக்கள் போராட்டம் ரணிலை அச்சுறுத்தும் அரசியல் களம்!



கடந்த 10ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் கூட்டினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி, பொதுக்கூட்டம் என்பனவற்றால் அன்றைய தினம் கொழும்பின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்தது. ஆயிரக்கணக்கில் மக்கள் அணி திரண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திற்கெதிராக தங்களது எதிர்ப்பினை தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் கூட்டு 10 இலட்சம் மக்களை கொழும்பில் அன்றைய தினம் அணி திரட்டப் போவதாக ஏலவே சூளுரைத்திருந்தது. எதிர்பார்த்த 10 இலட்சம் மக்களை அவர்களால் திரட்ட முடியவில்லை. அன்றைய தினம் இலங்கை - இந்தியாவுக்கிடையிலான கிரிக்கட் போட்டி நடைபெற்றமை மக்களை எதிர்பார்த்தளவு திரட்ட முடியாமல் போனதற்கு காரணமாக இருக்குமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜே.வி.பி.யின் பெருமளவிலான ஆதரவாளர்கள் இவ் எதிர்ப்பு போரணியில் கலந்து கொண்டனர். பொது முன்னணியிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் இப்பேரணியில் கலந்து கொள்ளவில்லை. பேரியல் அஷ்ர.்.ப்பும், தினேஷ் குணவர்த்தனாவுமே பொது முன்னணிக் கூட்டிலுள்ள பிற கட்சிகளின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்களாவர்.

அக்குரஸ்ஸ தேர்தல் முடிவு தென்னிலங்கை அரசியலில் ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதை காண முடிகிறது. அத்துடன் இதுவரை நடைபெற்ற அரசாங்க எதிர்ப்பு மக்கள் பேரணியில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற பேரணி அதிக உத்வேகத்தை பொது முன்னணி, ஜே.வி.பி கூட்டுக்கு வழங்கியுள்ளது.

ஸ்திரமற்ற ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிக்கு பலத்த சவால்கள் தென்னிலங்கையில் உருவாகி வருகிறது. ஆறுமுகன் தொண்டமானின் அரசியல் போக்கு சந்திரிகாவின் அரசியல் வியூகத்திற்கு சாதகமாக மாறி வருகிறது. முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சந்திரிகாவுடன் ஏலவே பேச்சுவார்த்தைகளை தொடங்கி விட்டனர். ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், ரிஸாட் பதியுதீன் போன்றவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் உறவினை வலுப்படுத்தி வருவதாக பொது முன்னணி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள பல சிரேஷ்ட அமைச்சர்கள் சந்திரிகாவை ஆதரிப்பதற்கு முன் வந்துள்ளதாக அறிய முடிகிறது. அதாவுல்லா அணியினருக்கும் வேறு மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா, ரணிலின் அமைச்சரவையைக் கலைத்து தனக்குச் சார்பான புதிய அமைச்சரவையை உருவாக்குவதே அவரின் உடனடித் திட்டமாகும். இந்த புதிய அமைச்சரவையை வைத்துக் கொண்டு தனது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின்னரே பாராளுமன்றக் கலைப்புக்கு அவர் செல்லக் கூடும்.

உண்மையில் தென்னிலங்கையில் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கி விட்டது. ஸ்திரமில்லாத அரசியல் சூழலும் ஜனாதிபதி - பிரதமமந்திரி முரண்பாடுகள்மிக்கதுமான ஒரு அரசாங்கத்தை ரணில் விக்ரமசிங்காவினால் முன்னெடுப்பது நீண்டகால அடிப்படையில் சாத்தியமற்றது என்பதை பிரதமர் ரணில் அதிகமாகவே உணர்ந்திருக்கின்றார். இரு தரப்பினரும் அரசியல் வியூகங்களை வகுத்து வருகின்றனர்.

இவ் அரசியல் போக்குக்கு மத்தியில் குறிப்பாக முஸ்லிம், மலையக அரசியல் தலைமைகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. ஒரு முடிவு எடுக்க வேண்டிய இறுதித் தருணம் இதுவென்பதை இத்தலைமைகள் புரிந்தும் விட்டன. எப்படியிருப்பினும் மீண்டுமொரு பொதுத் தேர்தல் குறிப்பிட்ட மாதங்களுக்குள் நம்மை எதிர் கொள்வது தவிர்க்க முடியாததாகவே உள்ளது.

முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சில் கலந்து கொள்ள அரசும் புலிகளும் அங்கீகாரம் தராவிடில் முஸ்லிம்களின் ஆதரவுடன் ஹர்த்தால், ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவோம்.

02.03.2003 நவமணி தலைப்புச் செய்தி

**மன்னிக்க வேண்டும்!**

7ஆம் கட்ட பேச்சுவார்த்தையிலேயே முஸ்லிம்களுக்கு சமத்துவ தனித்தரப்பு.

09.03.2003 நவமணி தலைப்புச் செய்தி



**இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக...

## நியமனம் வழங்குவதில் பாரபட்சம்

அண்மையில் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட நியமனங்களில் இனப்பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக 200 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் இரண்டு முஸ்லிம்களே நியமனம் பெற்றுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது முதல் இன்று வரை வழங்கப்பட்ட நியமனங்களில் முஸ்லிம்கள் தங்களது விகிதாசாரத்திற்கேற்ப நியமனம் பெற முடியாது பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது.

முஸ்லிம்களில் நியமனம் பெற்ற இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் பெண்கள். இவர்கள் அம்பாரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு வவுனியா, முல்லைத்தீவு போன்ற தூர இடங்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவை தொடர்பான நடவடிக்யை உரியவர்கள் எடுப்பது அவசியமாகும்.

*நஸீர் ஹாஜி, கல்முனை.*

## ஏறாவூர் முஸ்லிம்களின் இன்றைய நிலை!

மக்கள் நலன் விரும்பிகளின் நீண்டகால முயற்சியின் பயனாக ஏறாவூர் முஸ்லிம் பிரதேசம் தன்னகத்தே கொண்ட பல சொத்துக்கள் உள்ளூர் அரசியல்வாதிகளின் கபடத்தனமான நடவடிக்கைகளினாலும், இயலாமைகளினாலும் பயன்தரமுடியாத மற்றும் பறிபோகும் நிலை காணப்படுகின்றமை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த பொதுச்சந்தை கடந்த காலத்தில் ஏற்பட்ட இன வன்முறையின் போது அழிக்கப்பட்டது.

அழிக்கப்பட்ட சந்தையை புனர்நிர்மானம் செய்வதற்கென அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவின் வேண்டுகோளுக்கிணங்க அந்நாள் புனர்வாழ்வு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் நாற்பது இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்திருந்தார். கட்டடத்தொகுதி மீளமைக்கப்பட்டு கடந்த ஐந்து வருடத்துக்கு மேலாக திறப்பு செய்யப்படாது காடு மண்டிக்கிடக்கிறது.

பதிவு செய்யப்பட்ட எழுபத்திரெண்டு கடை உரிமையாளர்களும் சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட தற்காலிக கடை சொந்தக்காரர்களும் இருக்கும் நிலையில், நாற்பத்தி நான்கு கடைகள் மாத்திரமே புனரமைப்பின் போது கட்ட முடியுமாக இருந்ததால் சந்தையை திறக்க முடியாத நிலைக்கு உள்ளூராட்சி நிருவாகம் தள்ளப்பட்டது.

மேலும் பொலிஸ் A.S.P. காரியாலயம் அமைந்துள்ள புதிய சந்தை வீதி திறக்கப்பட வேண்டும்; பிரதான வீதிக்கடைகள் மீளமைக்கப்படுவதுடன் வியாபாரத்திற்கு ஏதுவாக அயல்பாகத்தில் உள்ள தமிழ் கிராமங்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளையும், வர்த்தகர்கள் முன்வைத்ததால் சந்தை கட்டடத் தொகுதியை இயங்கச் செய்வதில் பிரதேச சபையினருக்கு சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில் புதிய நிருவாகம் பதவியேற்றதை தொடர்ந்து பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் அவசரம் அவசரமாக திறப்பு விழாவை நடத்தினார். இந்த வைபவத்திற்கு ஏறாவூர் முஸ்லிம்களின் பணம் பல ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. ஆனால், வியாபாரிகளின் ஒத்துழைப்பின்றி சந்தை திறக்கப்பட்டதால் வியாபாரிகள் எவரும் அங்கு போகவில்லை. இதனால் திறப்பு விழா செய்த அதே தினம் பொதுச் சந்தை மூடப்பட்டது. தொடர்ந்தும் ஏறாவூர் பொதுச் சந்தை பயன்படாமை உள்ளமை வேதனை தருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் நகரில் முஸ்லிம் பிரதேசத்தில் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாப்புடன் இயங்கி வந்த இலங்கை மின்சார சபை உப அலுவலகம் பல்வேறு பிரயத்தனத்தின் பயனாக வாடிக்கையாளர் மத்திய நிலையம் என்ற அந்தஸ்துக்கு அண்மையில் உயர்த்தப்பட்டது. இந்த நிலையத்தை திறப்பு விழா செய்வதற்கென பிரதியமைச்சர் சாகல ரத்னாயக்க ஏறாவூருக்கு விஜயம் செய்திருந்த வேளை தற்போதைய பிரதேச சபை நிருவாகம் அதற்கு தடை விதித்தது. பிரதேச சபைக்கு சொந்தமான கட்டடத் தொகுதியில் இயங்கி வரும் மின்சார சபை அலுவலகத்தை பசீர் சேகுதாவூதின் பிரசன்னமின்றி அலி ஸாஹிர் மௌலானாவின் பங்களிப்புடன் திறக்கவிடக் கூடாது என்பதுவே பிரதேச சபையின் வாதமாக இருந்தது. இதையடுத்து மின்சார சபை உயரதிகாரிகள் நன்கு திட்டமிட்டு சபையினை தமிழ் கிராமத்துக்கு கொண்டு சென்றனர். இதனை அறிந்த முஸ்லிம்கள் ஏக்கப் பெருமூச்சுடன் கண்ணீரும் வடித்தார்கள்; மனம் குமுறினார்கள்.

இதேவேளை ஏறாவூர் பிரதேசம் செங்கலடி செயலகத்தின் கீழ் நீண்ட காலமாக இருந்து வந்தது. இதனால் முஸ்லிம்கள் மீது காட்டப்பட்ட பாராபட்சம் தாங்க முடியாது இருந்ததன் காரணமாக பிரிந்து சென்று தனியான செயலகம் அமைக்கப்பட்டது. இக்காரியாலயம் கடந்த பல வருட காலமாக கூட்டுறவுச் சங்க கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றது. இதற்கென தனியான கட்டடத் தொகுதி ஒன்றை தேடிக் கொள்ள முடியாமல் உள்ளூர் அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள்.

எனவே அடுத்த கட்டமாக ஏறாவூர் பிரதேச செயலகம் அண்மையில் உள்ள தமிழ் கிராமத்துக்கு கொண்டு செல்லப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதை அப்பாவி முஸ்லிம் மக்கள் அறியாமல் இருக்கிறார்கள். ஏறாவூர் முஸ்லிம்கள் சகோதர இன உறவை சீர்தூக்கி ஜனநாயக வழியில் சிந்திப்பவர்கள் என்பது தெளிவான ஒரு விடயம். இவர்கள் எவரிடமும் பலாத்காரம் செய்யமாட்டார்கள் என்ற சாந்தமான சிந்தனையைப் பயன்படுத்தி சந்தர்ப்பவாதிகள் ஏறாவூர் முஸ்லிம்களின் சொத்துக்களை அபகரித்து வருகின்றார்கள். இதற்கு இங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளும் துணை போகின்றார்கள்.

-எம்மார். ஏறாவூர்

## நீங்களும் எழுதலாம்

இந்தாண்டில் மீண்டுமொரு பொதுத் தேர்தல் வரலாம் என்கின்ற எதிர்வு கூறலை பல்வேறு ஊடகங் களும் தெரிவித்து வருகின்றன. அந்த வரிசையில் "முஸ்லிம் குரல்" தனது முதலாமிதழின் முன்பக்கத்தில் "பொதுத் தேர்தலுக்குத் தயாராகி றார் சந்திரிகா!" என்ற தலைப்பிலான செய்தியையும் வெளியிட்டிருக்கிறது.

மீண்டுமொரு பொதுத்தேர்தல் வருவதன் மூலம் நமது நாட்டின் தேசிய அரசியல் அரங்கில் பாரிய மாற்றம் வருகிறதோ இல்லையோ நமது சமூகத்தின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில் மாற்றம் வருமென்பது மட்டும் உறுதியானதாக இருக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை யாகும்.

இன்று நமது சமூகத்தின் அரசியல் நிலைப்பாடு நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கணிசமாக ஒன்றிணைந்திருந்த மக்கள் படிப்படியாக தமது திசைகளை மாற்றிக் கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று பிளவுண்டு இருக்கும் நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று வருமாயின் முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் சிதறுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும். அதுமட்டுமன்றி பல கட்சிகளும் முஸ்லிம்களுக்குள்ளிருந்து போட்டியிடும் நிலையும் காணப்படுகின்றது. இது இன்னும் நிலைமையை பூதாகரமாக்கி வைக்கும்.

பேரினவாதக் கட்சிகளுக்கும் நமது வாக்குகள் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் சிதைவடைவதற்கும் வாய்ப்புகள் உண்டு. எப்படிப் பார்த்தாலும் இன்றைய பாராளுமன்றத்தில் இருக்கின்ற முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகளின் மொத்த தொகையின் 26 இலிருந்து குறைவடைவதற்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதித்துவம் 12 இலிருந்து குறைவதற்கும் சந்தர்ப்பங்கள் அநேகமுள்ளன.

இந்நிலையில் நாம் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திப்பதன் மூலம் அடைகின்ற மிகப் பெரிய பாதகமானது முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதித்துவத் தொகையின் இழப்பு என்பதில் சந்தேக மில்லை.

சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்றப் பலம் நமக்குத் தேவையாக இருக்கும். அப்போது அதிகரித்த நமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்தான் உதவக் கூடியதாக அமைய முடியும். இது கட்சி அரசியலுக்கு அப்பாலான ஒன்றிணைவில் சாத்தியமாகும் நிலையாகும். பேரினவாதங்களின் அழுத்தங்கள் முஸ்லிம் அரசியலை நசுக்குவதால் கூட்டிணைந்து தொழிற்படும் காலகட்டத்தில் நாம் பிரிந்து நின்று தேர்தலைச் சந்திப்பதன் மூலம் நன்மைகள் பெறுவோமா? என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

அ.முஹமட் ஜபார்,
அக்கரைப்பற்று

## கர்பலா தரும் பாடம்!

நாம் இன்று நமது புனித தினங்களில் ஒன்றான ஆஷுரா தினத்தில் வீற்றிருக்கின்றோம். இந்நாள் நமக்கு பல்வேறு அறிவுரைகளை போதிக்கும் நாளாகவும் இருக்கின்றது.

நபி மூஸா (அலை) அவர்களையும், அவர்களது சமூகத்தினர்களையும் எதிரிகளின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றுக் கொடுத்த நிகழ்வு இத்தினத்தில் நிகழ்ந்ததாக ஆதார பூர்வமான வரலாறு கூறுகின்றது.

இஸ்லாத்தினையும், அல்லாஹ்வையும், சத்தியத்தையும் நம்பும் கூட்டத்தினர்களை என்றுமே அல்லாஹ் கைவிடுவதில்லை என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு தக்கசான்று. அதேநேரம் சத்தியத்திற்கு எதிரான கூட்டம் பெரும்பாலானதாக இருந்த போதிலும் இறைவிசுவாசிகளே வெற்றி பெறுவர் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இதனை நமது நபிகளுக்கரசர் முஹம்மது (ஸல்) அவர்களின் சமூகத்தினர்களுக்கு அல்லாஹ் வேறொரு தினத்தில் அதாவது பத்ருக் களத்தில் நிருபித்துக் காட்டியுள்ளான்.

அதுமட்டுமன்றி இந்த ஆஷுரா தினத்தில் நடைபெற்ற கர்பலா கள நிகழ்வும் நமக்கு இன்னொரு பாடத்தைப் புகட்டுகின்றது.

நாட்டைக் கெடுத்துச் சீர்குலையச் செய்யும் கொடுங்கோல் ஆட்சியை ஒழித்துக்கட்டி, இஸ்லாமிய குடியாட்சியை நிலை நிறுத்துவதற்குப் போராடிய வரலாறுதான் கர்பலா களமாகும்

இஸ்லாமிய வரன் முறைகளை உடைத் தெறிந்து விட்டு, முடியாட்சி முறைமையின் கீழ் ஆட்சியினை நடத்துவதற்கு எத்தகைய படைப்பலமும், ஆள் பலமும் கொண்டு முற்பட்டாலும் அல்லாஹ்வின் நேசர்கள் அதனை முறியடிக்கத் துணிய வேண்டும்.

நம்மிடையே பெரும்பான்மை இல்லை, பலமில்லை, என்று சத்தியத்திற்காகப் போராடாது இருந்து விடக் கூடாது என்பதையும் இந்தக் கர்பலா களம் நமக்கு உணர்த்துகின்றது.

"சத்தியத்திற்காக எதிரிகளுடன் போராடி மடிவது புண்ணிய மரணமாகும்" என்கின்ற தத்துவத்தையும் நமக்கு கர்பலா களம் நினைவூட்டுகின்றது. இதனால்தான் மௌலானா முஹம்மதலி "ஒவ்வொரு கர்பலாவிற்குப் பிறகும் இஸ்லாம் புத்துயிர் பெறுகிறது" எனக் கூறிச் சென்றார்.

இன்று நமது நாட்டில் நமது அரசியலை முன்னெடுத்துச் செல்வதாகக் கூறிக் கொண்டோர், நமது மக்களைப் புறக்கணித்து இருப்பதோடு, தம்முடனே பெரும்பாலான முஸ்லிம்கள் கைகோர்த்து இருக்கின்றனர் என்ற மயக்கத்திலும் இருந்து வருகின்றனர்.

இதனைப் புரிந்து கொண்டோரும் இத்தகைய தலைமைத்துவங்களை நிராகரிப்போர்களும் சிறு தொகையினர்களாக இருக்கின்றோம் என்பதற்காக வேண்டி நமது கையாலாகத் தலைமைகளை எதிர்க்கத் துணிய முடியாது என ஒதுங்கி இருந்து விடுவது முறையல்ல என்பதனையும் இந்தக் காபலா களம் நமக்குப் போதிக்கின்றது.

*முஸ்லிம் குரலின் முஹர்ரம் செய்தி...*



1990 ஆம் ஆண்டு வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்பு செய்து வெளியேற்றியதன் பின், மன்னார் சிலாபத்துறையில் அமைந்திருந்த பள்ளிவாசலின் சிதைக்கப்பட்ட நிலையே இது. இன்றுவரை இப்பள்ளிவாசல் புனரமைக்கப்படவில்லை.


## பிராயச்சித்தம்

இன்றுமென் கிராமத்திற்கு
நரிகள் வந்தன
ஆங்கிலத்தில்
ஊளையிடும் கொழுத்த நரிகளின்
அறிக்கைகளில்
சிறு நீர் கழித்தபடி
என் குடி மகளை கடித்துச்சப்பின

வேட்டை பல் முறிந்த
தனித்துவச் சிங்கங்களோ
சிம்மாசனப் பித்தனாவில்

நாணிச்சிறுத்ததென்
போர் நெஞ்சு.
ஒரு முட நரியை எதிர்க்கவியலா
என்னினத்தின் துயர்கண்டு
வெட்கமேவக்கேவினேன்

சல்லடையாக்கப்பட்ட
என் சகோதரனே
என்னை மன்னித்து விடு.
மறுநாள் உன் மாமாவையும்
கொன்று விட்டார்கள்
எனினும்
நாம் மௌனமாகத்தான் இருந்தோம்.



ஓட்டமாவடி அறபாத்.

காவத்தமுனை 2002 ரமழான் 27 ஆம் இரவு சுட்டுக் கொலலப்பட்ட எஸ்.எம். ஏ.அஸீஸ் என்ற அப்பாவி இளைஞனின் நினைவாக........

தமிழ்ப் பத்திரிகைத் துறையில் மாற்றுப் பத்திரிகை வெளிவராத காலகட்டத்தில் "முஸ்லிம் குரல்" வெளிவந்தது முஸ்லிம்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

சுவடு 1 இல் : மக்களுடன் பேசியது வரவேற்கத்தக்கது. இலங்கையின் அனைத்து முஸ்லிம் பிரதேசங்களிலும் "முஸ்லிம் குரல்" ஓங்கி ஒலிக்க வேண்டும். இப்பத்திரிகையின் இலக்கு உயர்வானதொன்றாகும். நமது சமூகத்தின் மத்தியில் சில கோடாரிக்கம்புகள் அரச துறைகளிலும், அரசியலிலும் சமூகத்திற்கு சேவை செய்யாது ஊழல் புரிவதைத் தட்டிக் கேட்போம். அவர்கள் திருந்த வழி செய்வோம் அல்லது எழுத்தால் திருத்துவோம்.

சுவடு 2 இல் : அலி உதுமானின் திறந்த மடல் சமூகத்தின் பால் எனக்கிருந்த ஆதங்கத்தைப் பங்கு போட்டுக் கொண்டது. அண்மையில் அட்டாளைச்சேனையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் ஜனாப் காதரின் உரையை செவிமடுத்தேன். ஏதோ ஒரு பெரும் சுயநலத்தை மனதில் போட்டுக் கொண்டு காலம் கடத்துதலுக்காக (Time Pass) உளறுவது போல தென்பட்டது அவரின் கருத்துக்கள். திறந்த மடலையும் இந்த உரையையும் ஒப்பிடுகையில் குரலின் தேவை இன்று இங்கு உணரப்படுகின்றது. முஸ்லிம் குரல் போசாக்கான செய்திகளை உண்டு திடகாத்திரமாக வளர வேண்டுமென்பதே எனது அவா.

- ஏ.எச்.ஏ. ழாஹிர்,
மருதமுனை.

பத்திரிகை பார்த்தேன். புரட்சிகரமான கருத்துக்களை கொண்டிருக்கிறது. சுபஹு தொழுத பாயிலிருந்தே எழுதுகிறேன். நமது அரசியல்வாதிகளின் கவனத்திற்கு என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அமிர்தலிங்கம் அண்ணனையும் கோடி காட்டியுள்ளீர்கள். நானும் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப 1949 காலத் தொண்டன். தமிழீழக் கருத்தாடல் வரும் வேளையில் அதனை வெறும் நீர்க்குமிழி என்று சாடி வந்ததினால்தான் என்னையும் ஓரம் கட்டினார்கள்.

அஷ்ரஃப் அவர்களை 1975 இல் அரசியலுக்குள் முடுக்கி விட்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்த வேளையில் எனது பங்களிப்பு 1981 - 1986 வரை ஏராளம்! உளறுவாய் அஸ்வர் பற்றி எழுதியது உண்மையாகும். அஸ்வர் 1956 இல் இருந்து எனது நண்பர். பதியுத்தீன் மஹ்மூத் மந்திரியாக இருந்த காலம் 66 இல் இஸ்லாமிய சோசலிச முன்னணியை நாடெல்லாம் மூடு விழா செய்யுமளவிற்கு எழுதியதால் 68 இல் தொழில் மந்திரி முஹம்மதுடன் மருதமுனை வந்து அல் மனாரில் எனக்கு மாலை போட்டு ஜிஹாத் பத்திரிகைக்கு என்னை முன்மாதிரி எழுத்தாளராக்கியதன் உள்நோக்கம் இப்போது புரிகிறது. அஸ்வர் ஒரு கூஜாத் தூக்கி. உங்கள் பத்திரிகை தொடர்ந்து வர எனது வாழ்த்துக்கள்!

-மருதூர் வாணன்,
மருதமுனை.

இலங்கையில குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் எமது சமூகம் சமகால நிலமையில் சிந்திக்கின்ற கருத்துக்களை, எதன் மூலம் எமது மக்களுக்குள்ளும் பிற சமூகங்களுக்குள்ளும் கொண்டு செல்ல வேண்டி நின்ற வேளை, அவை முஸ்லிம் குரலாகப் பிறந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இன்நாட்டில் முஸ்லிம் குரல் நம் சமூக மேம்பாட்டுக்கு உழைப்பதோடு சமூகப்பற்று மிக்க சிந்தனையாளர்களையும் செயல்வீரர்களையும் உருவாக்கி என்றும் உழைக்கவும் நிலைபெறவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டுகிறேன். இன்ஷா அல்லாஹ் எனது பங்களிப்பு என்றும் தொடரும்.

-எம்.எம். ஜமால்தீன்
ஏறாவூர்

## 3 நமது ஆளுமைகள்

### மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும்.

அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழகால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

அகில இந்திய முஸ்லிம் லீக்கில் சேராமல் இருந்த ஜின்னா அவர்கள் பின் நாளில் முஸ்லிம் லீக்கில் சேர்ந்து கொண்டார். ஆனாலும் அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகவும் இல்லை. இந்தியாவின் விடுதலைக்கான இறுதிப் போராட்டத்தை ஆற்றல் வாய்ந்ததாக்க இரு சமூகங்களையும் ஒன்றிணைக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். அக்காலத்திலேயே இலங்கை முஸ்லிம்களின் சட்ட சபை பிரதிநிதித்துவம் தொடர்பாக பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் ஜின்னா அவர்களைச் சந்தித்தார்கள். 1931 ஆம் ஆண்டில் பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு 27 வயதாக இருக்கும் போது இச்சந்திப்பு நிகழ்ந்தது. அவருக்கு வழங்கப்பட்ட உயரிய பணியை அவர் செவ்வன செய்து முடித்தார். உயரிய கொள்கைகளைக் கொண்ட உத்தமர் ஒருவரை சந்தித்ததன் பின்தான் அலிகார் சர்வகலாசாலைக்குச் சென்றார் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள். அலிகார் சர்வகலாசாலையில் அவர் காண இருந்த வெற்றிக்கு முன்னோடியாகவே ஜின்னாவின் சந்திப்பு பதியுத்தீன் மஹ்மூத் அவர்களுக்கு இருந்தது.

#### அலிகார் காலம்

அலிகார் சர்வகலாசாலை அன்று இந்தியாவில் மட்டுமல்ல முழு முஸ்லிம் உலகத்திலுமே புகழ் பெற்று விளங்கியது. இந்தியாவின் முழு வரலாற்றைப் பார்க்கும் போதும் கூட, அலிகார் சர்வ கலாசாலையின் தோற்றமும் வளர்ச்சியும் முக்கியமான ஒரு இடத்தை வகித்திருப்பதைக் காணலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கீழைத்தேசங்களில் படிப்படியாக ஆங்கிலேயரின் ஆட்சி வலுவடைந்து கொண்டு வந்தது. ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் நேரத்திலே அவர்களது கலை, கலாசாரங்களை மக்களுக்குள் புகுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

இந்தியாவின் மூலை முடுக்குகளிளெல்லாம் ஆங்கிலக் கல்வியைப் புகுத்த ஆங்கிலேயர் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டனர். பணம் படைத்த செல்வந்தர்கள் பலர் தமது பிள்ளைகளை மேலை நாடுகளுக்கு அனுப்பி ஆங்கிலத்தில் படிப்பிக்கவே ஆவல் கொண்டிருந்தனர். மேலைநாடு சென்று உயர் கல்வி பெற்றவர்கள் மேல்நாட்டு கலாசாரத்தில் மூழ்கடிக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். அப்படிப்பட்ட காலத்திலேயே இந்தியாவிலும், சில சர்வகலாசாலைகள் இருந்தன. எனினும் அவை இஸ்லாமியர்களின் வாழ்க்கைக்கு பயன்படக் கூடியதாக அமையவில்லை. எனவே இஸ்லாமியர்களின் இலட்சியங்களையும் பண்பாடுகளையும் பிரதிபலிக்கக் கூடியவாறு ஒரு உயர் கல்வி நிறுவனமொன்றை அமைக்க வேண்டிய தேவை இருந்து வந்தது. முஸ்லிம்களை கல்வித் துறையிலே இஸ்லாமிய பின்னணியிலே ஊக்குவிக்க வேண்டிய அவசியத்தின் அடிப்படையில் கீழைத்தேய மக்களின் தேவைக்கேற்ப சகல வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டியிருந்ததை அக்கால முஸ்லிம் பெருமக்கள் உணர்ந்திருந்தனர்.

ஆங்கிலயோ புகுத்திக் கொண்டிருந்த புதுக் கல்வி முறை காரணமாக இஸ்லாமியர்கள் கல்வித் துறையில் மேலும் பின்னோக்க வேண்டிய பயங்கர சூழ்நிலையும் ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்களின் [illegible] சென்ற அரும் பெரும் கலைப் பொக்கிசங்களுக்கு அழிவு காலமும் வரத் தொடங்கியது. முஸ்லிம்கள் மீதான நசுக்குதல்களும் தொடரப்பட்டன.



செய்யத் அஹமத் கான் என்ற பெரியவரால் 1875 ஆம் ஆண்டு "முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கொலேஜ் அலிகார்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. அலிகார் கலாசாலை வளர்ந்து விரைவிலேயே உலகப் புகழ் பெற்ற சர்வ கலாசாலையாக மாறியது. தென் கிழக்காசியாவிலே பல அறிஞர்களைத் தோற்றுவிக்க காலாக இருந்துள்ளது.

அலிகார் சர்வ கலாசாலை பற்றி பதியுதீன் மஹ்மூத் அவர்களின் சொந்தக் கருத்தை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். "முஸ்லிம் மக்கள் தங்கள் அந்தஸ்த்தை காப்பாற்றிக் கொண்டு சுயமரியாதையுடன் வாழ வேண்டுமாயின் நவீன கல்வி முறைகளைக் கையாள வேண்டுமென்ற தீர்க்க தரிசனத்தை செயல்முறையில் காட்டியவர்தான் செய்யத் அஹமத் கான் அவர்கள். அவர் தமது ஆயுளின் பெரும் பகுதியை சமுதாயப் பணிக்காகவே அர்ப்பணித்தவர். பல நூல்களையும் பத்திரிகைகளையும் வெளியிட்டவர்."

அலிகாரில் ஆண், பெண் இருபாலாரும் கல்வி பயில்கின்றனர். இஸ்லாத்தின் போதனைக்கமைவாக அவர்களது கல்வியும், வாழ்க்கை முறையும் அமைந்துள்ளது. முஸ்லிம் அல்லாதவர்களும் அங்கு பயில்கின்றனர். அவர்களது மத உரிமைகளும் அங்கு பாதுகாக்கப்படுகின்றன.

கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் போன்றே அலிகாரும் சர்வதேச ரீதியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அலிகார் அதன் தனித்துவத்தை பேணிப் பாதுகாக்கும் இஸ்லாமிய கலைச் சின்னமாக நிலைத்து நிற்கிறது. சர்வ கலாசாலை நடவடிக்கைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் எவ்விதமான உயர்வு தாழ்வும் கற்பிக்கப்படுவதில்லை. அலிகார் சர்வ கலாசாலையின் மாணவர் இயக்கம் பூரண சுதந்திரமுடையதாக இருக்கிறது. நிர்வாகத்தை மாணவர்கள் சுயமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

தனிப்பட்டவர்களது செல்வாக்கையோ, வெளியார் தலையீட்டையோ மாணவர் இயக்கம் கௌரவிப்பதில்லை. சமூக வாழ்க்கை, கட்டுப்பாடு, ஒழுங்கு இவற்றை பேணிப் பாதுகாக்கிறது. எமது கட்டுப்பாட்டுத் திட்டங்களில் ஒன்றை இங்கு குறிப்பிடல் வேண்டும். எம்மை நாடி வரும் ஒருவர் அவர் புதிய மாணவராக இருந்தால் என்ன, பழைய மாணவராக இருந்தால் என்ன வந்தவர் அமர்வதற்கு ஆசனத்தை வழங்கி அவர் அமர்ந்த பின்பே நாம் அமர்ந்து கொள்வோம். இதுவொரு சிறிய உதாரணம் மட்டுமே இதுபோன்ற ஒழுக்க முறைகள்தான் அங்கு கையாளப்படுகின்றன என்கிறார் பதியுத்தீன் மஹ்முத் அவர்கள். அக்காலத்தில் முழு இஸ்லாமிய உலகிலும் இருந்த ஒரேயொரு சிறந்த உயர்ந்த பல்கலைக்கழகம் அலிகார் மட்டுமேயாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கான தனியலகுக் கோரிக்கையும்
# புலிகளின் உத்தியோகபூர்வமான நிலைப்பாடும்

வடக்கு-கிழக்கில் வாழும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கையான 'முஸ்லிம்களுக்கான தனியான அதிகார அலகுக் கோரிக்கையை. அது தேவையற்றது. எங்களினால் முஸ்லிம்களின் உரிமைகளையும். நலன்களையும் பாதுகாக்க முடியும் என்று புலிகள் தங்கள் அமைப்பின் கொள்கையை அண்மையில் உத்தியோக பூர்வமான வகையில் வெளியிட்டிருந்தனர். முஸ்லிம்களுக்கான தனியலகு பற்றிய புலிகளின் கடந்தகால மௌனங்களும். இந்த நிகழ்கால உளறல்களும் எதிர்பார்த்தவைகளே.

தாங்கள் திருந்தியதாக, மனம் வருந்தியதாக எந்த நல்ல சமிக்ஞையையும் காட்டாத. மூதூர். வாழைச்சேனை சம்பவங்களின் மூலம் இன்னும் தங்களின் கோரக் குணத்தைக் காட்டிய புலிகள் இன்னும் எங்களை நம்புங்கள் என்று கூறுவது அபத்தமாகும்.

முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையின் வடிவமே தனியலகுக் கோரிக்கையாகும். இதைப் புலிகளினால் மறுக்கவே முடியாது. முஸ்லிம்களின் தனியலகின் அடைவுக்கு தற்காலிக தடையாக வேண்டுமானால் புலிகள் இருக்கலாம்.



வடக்கு கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகமே. முஸ்லிம்களுக்கும் சம உரிமை உண்டு என்று கூறியபோதே எதிர்பார்த்தோம் புலிகள் மொழியரசியல் ஊடாக. முஸ்லிம் சமூகத்தின் கண்ணைப் பிடுங்குகின்றது என்று. அடிமைத்துவத்தின் கொடுமைபற்றிப் பேசிப் போராடியவர்கள் முஸ்லிம்களை நாகரீக அடிமைகளாக்க முனைவது அவர்களின் போராட்டத்தின் ஆதிக்கத்தனத்தைச் சித்தரிக்கின்றது. அத்துடன் இக்கூற்றின் மூலம் முஸ்லிம் விரோத போக்கிலும், தமிழ் மேலாதிக்கப் போக்கிலும் இவர்கள் சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் தீவிரவாரிசுகள் என்பதை நிரூபித்துள்ளனர்.

"முஸ்லிம்களினதும் உரிமைக்கும். நலனுக்குமான போராட்டமே தமிழீழ விடுதலைப் போராட்டமாகும். இதில் முஸ்லிம்களுக்கான தனியான அதிகார அலகு அவசியமற்றது" என்று அன்டனும். ரமேஸும் கூறியுள்ளனர். இவர்கள் கடந்த காலங்களில் முஸ்லிம்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் நடந்திருக்கின்றார்களா? அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னோ. பிரபா-ஹக்கீம் ஒப்பந்தத்தின் பின்னோ

இதுவே நிரந்தரத் தீர்வாக முடியாது! இதைத் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் முஸ்லிம் தேசப் பிரகடனம் தெளிவாகவே விளங்கப்படுத்தி உள்ளது. அத்துடன் முஸ்லிம் தேசப் பிரகடனத்தின் போது முஸ்லிம் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிப்பிராயத்தைப் பெற்றதும். வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளினால் அழுத்திப் பேசப்படுவதுமான இத்தனியலகுக் கோரிக்கையை நாலுபேர் மூடிய அறைக்குள் அல்லது நாடுகளுக்குள் கூடி சர்வசாதாரணமாக நிராகரிக்க முடியாது.

தங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்ற எல்லோருக்கும் இருக்கும் நியாய உரிமையுணர்வு முஸ்லிம்களுக்கு இருக்கக்கூடாது. அனுமதிக்கப்படாது என்ற வாதம் அரசியல் அடாவடித்தனமானதாகும். அதை 'முஸ்லிம்களுக்கு அவர்கள் (தமிழர்கள்) மறுக்கக் கூடாது' என்ற பண்பட்ட தமிழ் பெருமகன் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கூற்றை புலிகள் புரிந்து கொள்ளவும், ஜீரணிக்கவும் முன்வரவேண்டும்.

இலங்கை அரசாங்கமும் ஒரு விடயத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும் U.N.P. ஆட்சி ஏற்படும் போதெல்லாம் முஸ்லிம் சமூகத்திற்கு அது ஒரு சாபக்கேடான ஆட்சியாகவே இருந்து வந்துள்ளது. இதே தவறை பிரதமர் ரணிலும் செய்ய முற்படக்கூடாது. இதய சுத்தியுடன் பிரதமர் சமாதானம் பற்றிச் சிந்திப்பாரானால் ஒரே மேசையில் எல்லோருக்குமான தீர்வுகள் முன்வைக்கப்படல் வேண்டும். அதற்கான உடனடிச்சூழலை ஏற்படுத்த முன்வரல் வேண்டும். எல்லோருக்குமான தீர்வு என்பது புலிகளுக்கான தீர்வு மட்டுமே என்ற எடுகோலில் அரசின் முயற்சி அமையுமானால் அது நாட்டுக்கு ஆபத்தான தீர்வாக அமைந்துவிடும். ஒரு யுத்தத்தின் முடிவு இன்னொரு யுத்தத்திற்கான தொடக்கமாகிவிடக்கூடும் என்ற எதார்த்தத்தை அரசு அவசியம் உணரமுற்பட வேண்டும்.

முஸ்லிம்களை இந்தளவு நடுத்தெருவில் நிறுத்தியதில் பாரிய பங்கு முஸ்லிம் தலைவர்களுக்குண்டு. புலிகளினதும், அரசினதும் தொடரான போலிவார்த்தைகளுக்குள் முஸ்லிம் தலைவர்களின் அரசியல் வீரம் அடங்கிப் போனதும், வெகுண்டெழுந்த முஸ்லிம்களின் உரிமையுணர்வுகள் அடக்கப்பட்டதையும் காண்கிறோம். இருண்ட யுகத்துள் இருந்தும்கூட இன்னும் சந்தர்ப்பவாத, சலுகைவாத அரசியலை முஸ்லிம் தலைமைகள் தொடர்ந்தும் செய்வார்களேயானால் அவர்களை சமூகம் தண்டிக்கும் காலம் வெகுதூரத்திலில்லை என்பதை இத்தலைவர்கள் உணர வேண்டும்.

கடைசியாய் சகலருக்கும் ஒரு செய்தியைச் சொல்ல முடியும். 'வேண்டும் என்றால் புலிகள் ஆள்வதற்கு ஒரு மண்ணைக் கேட்கட்டும் ஒரு மக்கள் கூட்டத்தை (முஸ்லிம்களை) அல்ல. என்ற மறைந்த தலைவர் அஷ்ரஃப்பின் வார்த்தைகளுடன் நாங்கள் இன்னும் இரண்டறக் கலந்துள்ளோம் என்பதை எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**எம்.எம்.முஹம்மது இத்ரீஸ்**
**செயலாளர்**
**மாணவர் பேரவை**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

## பாவம் ஏறாவூர் அலிமுகம்மட் காக்கா

அலி முகம்மட் காக்காவுக்கு கடந்த மாதம் 55 வயது முடிவடைந்து விட்டது. ஒரு ஏழைத் தொழிலாளி இவர். 84ஆம் ஆண்டு தொழில் நிமித்தம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சமையற்காரராக, கூட்டித் துடைக்கும் தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். கடந்த மாதத்தில் ஒரு நாள் திடீரென "உனக்கு இங்கு வேலை இல்லை" எனச் சொல்லப்பட்டது. இடி விழுந்தது போலிருந்தது அலி முகமட் காக்காவுக்கு.

ஏன் ஐயா என்று கேட்டார் அலி முகமட் காக்கா "உனக்கு 55 வயதாகி விட்டது. ஆகவே ஓய்வு பெற்றுவிட்டாய் போய் வா என்றது பொலிஸ் நிர்வாகம். - காக்காவை வேலையிலிருந்து ஒதுங்குமாறு மட்டக்களப்பு பொலிஸ் திணைக்களத்திலிருந்து கடிதம் வந்தது. காக்காவின் வேலை நிரந்தரமாக்கப் படவுமில்லை. காக்கா 21 வருடமாக தினக் கூலியாகவே அங்கு பணியாற்றியுள்ளார்.

காக்கா 84 இல்லிருந்து தனது வேலையை நிரந்தரமாக்குவதற்கு ஏறி இறங்காத அரசியல்வாதிகளின் வீடில்லை. அலி சாஹிர் மௌலானா, ஹிஸ்புல்லாஹ், பசீர் சேகுதாவூத் எல்லாப் படிகளும் ஏறி இறங்கி விட்டார்! யாருமே காக்காவின் வேலையை நிரந்தரமாக்கவில்லை.

காக்கா 22 வருடமாய் ஓடாய் உழைத்து எதுவுமில்லாமல் வீட்டுக்கு போக வேண்டி வந்தது. மீண்டும் அரசியல்வாதிகளின் வீட்டுப் படியேறல்கள், பசீர், அலிசாஹிர் மௌலானா என, எதுவுமே நடைபெறவில்லை.

அழுத கண்ணோடு இருந்த அலி முகமட் காக்காவுக்கு யாரோ கொழும்பு போய்; ஒரு அன்பரை சந்திக்கச் சொல்லி முழு விபரங்களுடன் அனுப்பி வைத்தார்.

காக்கா கொழும்பிலுள்ள அன்பரின் வீடு தேடி தனது ஏழை மனைவியுடன் வந்தார். அன்பரும் நடைபெற்ற அநீதி கண்டு மனம் வருந்தினார். முழுவிபரங்களையும் கேட்டறிந்து கொண்டார். நீங்கள் இன்றே ஏறாவூர் சென்றுவிடுங்கள். கொழும்பில் அலையத் தேவையில்லை. உங்களுக்கு உரிய நீதி கிடைக்க வழி செய்கிறேன் என்றார். ஏழைத் தொழிலாளியான அலி முகமட் காக்காவும் அவர் மனைவியும் அன்றைய தினமே ஏறாவூர் திரும்பினர்.

1 வாரத்திற்குள் அக்கூலித் தொழிலாளியின் தொழில் நிரந்தரமாக்கப்பட்டது. அவர் பணியும் தொடர வழியும் செய்யப்பட்டது! அனைத்திற்கும் நாம் அரசியல்வாதிகளை நம்பி இருக்கத் தேவையில்லை. பாதிக்கப்பட்ட நாமும் போராடத்தான் வேண்டும். நாம் போராடாதவரை நமக்கு நீதி கிடைக்காது.

நமது மக்களுக்கு நாட்டின் எப்பாகத்திலாவது உரிமை மீறல்கள் ஏற்பட்டால், நீதி வேண்டிப் போராட இலவச சட்ட ஆலோசனை உதவி வழங்கப்படவுள்ளது.

முஸ்லிம் குரல் பத்திரிகையின் ஊடாக
அரச நிருவனங்கள்,
திணைக்களங்களில், பொதுவாழ்வில் நமது மக்களின் அடிப்படை உரிமை மீறல்கள் மீறப்பட்டால் உடன் உங்கள் விபரங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.
நடவடிக்கைக்காக தொடர்பு கொள்கிறோம்,
எங்கள் உடனடி அழைப்புக்காக காத்திருங்கள்!



அல்ஹஸனிதா சஞ்சிகை வெளியீட்டு விழாவின் போது இஸ்லாமிய உயர்கல்வி நிறுவனப்பணிப்பாளர் அலி அலிசாதே அவர்கள் ஓட்டமாவடி முகைதீன் ஜும்மாப்பள்ளி வாசல் நம்பிக்கையாளர் அல்ஹாஜ் லெப்பைத்தம்பி அவர்களுக்கு விசேட பிரதியை வழங்கினார். அருகில் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் மௌலவி யு.எல். எம்.ஸபீர் ஹாபிஸ், நிர்வாக ஆசிரியர் வை.எல். எம்.றிஸ்வி ஆகியோர் காணப்படுகின்றனர்.

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

*பிரதம ஆசிரியர்*

# அரேபிய அடிமைகளாக ஆசியப் பெண்கள்



சாரா - பாலபகன் - 15 வயதேயான இளம் பெண் - இல்லை வயது வந்த சிறுமி. வெகுளித்தனமும் சூதுவாதும் அறியாத அவளது முகத்தைக் காணும் மனித இதயம் கொண்ட எவரும் "இவளா? இவளுக்காக இந்தக் கொடூரமான நிலைமை ஏற்பட வேண்டும்" என்று எண்ணுவர்.

ஆம்! இன்றைய உலகின் போக்குகளைப் புரிந்து கொள்ளவும் திறனற்ற அந்தப் பேதைப் பெண்தான் மரண தண்டனை வழங்கப்பட்டு துப்பாக்கிப் படையின் எதிரே நிறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். காரணம்; தெற்கு பிலிப்பைன்சில் உள்ள மிண்டனோவா தீவில் பிறந்த அவள் ஒரு சின்ன ஆசைப்பட்டாள்; பட்டினியிலும் வறுமையிலும் வாடிய தன் குடும்பத்தை அவற்றிலிருந்து மீட்க ஆசைப்பட்டாள். அதற்காகத் திருடவோ, விபச்சாரம் செய்யவோ, போதைப் பொருள் கடத்தவோ - விற்கவோ முனையவில்லை. சொற்ப அளவே எழுதவும் தெரிந்த அவள், உழைத்து வாழ விரும்பினாள். அதற்கு தாய்நாட்டில் வழியில்லை. குடும்பத்தினர் தடுத்தும் கேளாமல் 4000 மைல்களுக்கு அப்பால் உள்ள பாலைவன நகரான அபுதாபிக்குப் போய் வீட்டு வேலைக்காரியாகச் சேர்ந்தாள்.

அங்குதான் இந்தக் கொடூரம் அவளுக்கு நேர்ந்தது. அவளது சின்னச் சின்ன ஆசைகள் நொறுங்கிச் சிதைந்தன. ஒவ்வொரு நாளும் பயங்கர சோதனைகளாகவே கழிந்தன. 17 மாதகால நரக வாழ்க்கைக்கு முடிவு கட்டத் துணிந்த அந்தப் பேதைப் பெண் தனது எஜமானன் கற்பழித்த கொடூரத்துக்குப் பழிதீர்க்க அவனைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டாள். அந்தக் "குற்றத்திற்காகத்தான்" அவளுக்கு அபுதாபி நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பேராசையினால் அல்ல; வறுமையில் இருந்து மீளும் கனவுகளோடு அபுதாபிக்கு வந்து இறங்கியவள் சாரா. அங்கிருந்து தொலைதூரத்திலுள்ள பாலைவனச் சோலை நகராகிய அல் - அயினுக்குத் தரகர்களால் அனுப்பப்பட்டாள். அந்நகர ஷேக் ஜாயித்தின் அரண்மனைக் காவல் அதிகாரியாக இருந்த முகமது பலெசி என்பவனது வீட்டு வேலையாளாகச் சேர்ந்தாள்.

அந்தக் கிழவனது பாலியல் சீண்டல்களைச் சமாளிப்பதே அவளது அன்றாடப் போராட்டமானது. அவளது கன்னித் தன்மைக்கு ஒரு தங்க நகை விலைபேசினான் பலெசி.அவள் அவனது கொடுமைகளைத் தாளாமல் ஒருநாள் தப்பி ஓடினாள். வேலை வாங்கித் தந்த ஏஜெண்டிடமே ஓடித் தஞ்சம் கோரினாள். ஒரு ஆட்டுக்கொட்டிலில் அடைத்து வைத்திருந்த அவன், மீண்டும் அதே கொடூர பலெசியிடம் சாராவை ஒப்படைத்தான். மீண்டும் அவளது நரக வாழ்வு துவங்கியது. ஒருநாள் திடீரென படுக்கை அறைக்குள் சாராவைத் தள்ளிய பலெசி, அவளது கழுத்திலே கத்தி வைத்து மிரட்டிக் கொண்டே கற்பழித்தான். அவனிடமிருந்து மீண்ட சாரா தரையில் கிடந்த அதே கத்தியை எடுத்து 33 முறை மாறி மாறி, ஆத்திரம் பொங்க அவனைக் குத்திக் கொன்றாள்.

கொடூரமான ஒரு குற்றவாளிக்குத் தகுந்த தண்டனைதான் கொடுத்தாள் என்றே மனித நாகரிகமுள்ள எவரும் கருத வேண்டும். ஆனால் அடிமைக்காலச் சட்டமல்லவா அங்கே கோலோச்சுகிறது! அராபிய பதூயின் இனக்குழுவின் "நீதி மன்றம்" மனிதவதை புரிந்து விட்டாள் என்று கூறி அதற்காக ஏழு மாத சிறையும், அழித்தொழிக்கப்பட்டவன் குடும்பத்துக்கு ஐம்பதாயிரம் டாலர் இரத்தப் பணமும் தரவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதே சமயம் கற்பழிப்புக்காக அவள் குடும்பத்திற்கு 33 ஆயிரம் ஈடு தரவேண்டும் என்றது. இது வொரு உதாரணம் மட்டுமே.

வாரத்தில், ஏழு நாட்களும் அதிகாலை முதல் நளளிரவு வரை உழைக்கும்படி பணிப்பெண்கள் நிர்ப்பந்திக்க[illegible] மீந்து போனதையும் எச்சில் உணவையுமே உண்டு உயிர் பிழைத்திருக்கிறார்கள். அடி - உதை, ஏச்சுப் பேச்சு, பாலியல் சித்திரவதை - கற்பழிப்பு, படுகொலைகள் ஆகியவை அவர்கள் சந்திக்கும் ஈவிரக்கமற்ற கொடுமைகள். மிக மிக அப்பட்டமான, மறைக்கவே முடியாத விவகாரங்களிலேயே பாலியல் வன்முறைகள் வெளிக்கு வருகின்றன.

ஆண்களின் கொடுமை தாங்காமல் பணிப் பெண்கள் தப்பி ஓடுவதும் அரபு நாடுகளின் குடியேற்றச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும். இருப்பினும் பிலிப்பைன்ஸ், இலங்கை, வங்களதேசம், பாகிஸ்தான் மற்றும் இந்திய தூதரகங்களில் ஒவ்வொரு நாளும்நூற்றுக்கணக்கானோர் தஞ்சமடைகின்றனர். அரபு ஷேக்குகள், சுல்தான்கள் அளிக்கும் விருந்துகளில் குடித்துக் கும்மாளமிடும் இந்நாடுகளின் தூதுரக அதிகாரிகளோ இப்பிரச்சினையை அலட்சியமாகவே அணுகுகின்றனர்.

## பிறந்த மண்ணிலிருந்து வறுமை துரத்துகிறது புகுந்த நாட்டில் ஷேக்குகள் வதைக்கிறார்கள்

உலகின் பலநாடுகளும் கூடி, ஈராக்குக்கு எதிராகப் போரிட்டு மீட்ட குவைத் நாடு தான், மிக மோசமான அட்டூழியங்கள் நிறைந்ததாக உள்ளது. குவைத் நகரில் தான் மிக அதிகமான பணிப்பெண்கள் தமது தாய்நாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் தேடி வருகின்றனர். "இங்குள்ள பலவீடுகளிலும் ஆசியப் பணிப்பெண்களை முறைகேடாக நடத் துவதும், அடித்து உதைப்பதும் கற்பழிப்பதும் உரிமையோடும், ஒரே வழமையாகவும் நிகழ் வதை எங்களது ஆய்வுகளின் போது கண் டோம்" என்று பெய்ஜிங் மகளிர் மாநாட்டின் போது சமர்ப்பித்த மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அறிக்கை குவைத் பற்றி கூறுகிறது.

இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த பல பணிப் பெண்களின் கண்ணீர்க் கதை தெளிவான சித்திரத்தை தரக்கூடியவையாக உள்ளது. பாத்திமா, 21 வயது இஸ்லாமிய பெண். இலங்கையின் குருநாகலையைச் சேர்ந்தவர். பென்சில், தாள் வைத்து எழுதித்தான் மற்றவருடன் தன் எண்ணத்தைச் சொல்ல முடியும். வேலை வாங்கித் தரும் தரகனால் கற்பழிக்கப்பட்ட அதிர்ச்சியால் அவரது நாக்கு அவளது மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டு பேசும் சக்தியை இழந்தாள் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அவள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்ததும் வரவழைக்கப்பட்ட பொலிஸ் மருத்துவர் "அவள் கன்னி [illegible] என்பதை ஏற்க முடியாது" என்று பொய்யான சான்றிதழ் அளித்தார். குற்றவாளி தப்பியதோடு அந்தப் பெண் மீதே பொய்யான புகார் தந்ததாக பழிபோடப்பட்டது.

உம்மூசித்தி 26 வயதுப் பெண், இலங்கை அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்.. இவளுக்குப் பாலியல் சித்திரவதைகள் கிடையாதுதான். ஆனால், வேலையால் அதிகாலை முதல் நள்ளிரவு வரை கசக்கிப் பிழிகிறார்கள். வீட்டில் குழந்தைகளைப் பராமரிப்பது முதல் எல்லா வேலைகளையும் செய்து கொண்டு அராபியின் மனைவி நடத்தும் அழகு நிலைய த்திலும் வேலை செய்ய வேண்டும். ஆனால், முறைப்படி ஊதியம் தருவதில்லை. சிறு தவறு செய்தால் கூட அராபியின் மனைவி உம்மூசித்தியின் வயிற்றில் ஓங்கிக் குத்து வாள். இந்தக் கொடுமை தாளாமல் தப்பிவந்து தஞ்சமடைந்த உம்மூசித்தி கசப்போடு சொன்னாள், "நான் இலங்கைக்கே திரும்பிப் போக விரும்புகிறேன். இங்கே இருப்பதே வெறுப்பாக உள்ளது. அவர்கள் பணக்காரர்கள்; நாங்களோ பரம ஏழைகள்; அதுதான் எங்களை பிராணிகளைப் போல நடத்துகிறார்கள்."

குவைத்தில் இருந்து இந்தக் கொடூரங்கள் வெளிவருகின்றன. இதே அளவு மோசமான நிலை சவூதி அரேபியாவிலும் இருந்தாலும், அந்த அரசு அவற்றை மூடி மறைத்துவிடுகிறது. அங்குள்ள 43,000 பிலிப்பைன்ஸ் பணிப் பெண்களில் ஆண்டுதோறும் 4000 பேர் தமது தாய்நாட்டுத் தூதரகத்தில் தஞ்சமடைகின்றனர். அவர்களின் 110 பேர் கற்பழிக்கப்பட்டவர்கள்; இதற்கும் மேலாக கற்பழிப்புச் சம்பவங்கள் இருக்கலாம்; புகார் கொடுத்தால் தானே விசாரிக்க முடியும் என்கிறது தூதரகம்.

"ஏதோ சில சம்பவங்கள் நடக்கின்றன; அவற்றைப் பிரசுரித்துப் பெரிதுபடுத்தும் அளவுக்கு ஒன்றுமில்லை. இதைக்கூட சகித்துக் கொள்ள முடியாவிட்டால் உங்கள் பெண்களை வெளியே ஏன் அனுப்புகிறீர்கள்; பூட்டிவைத்துக் கொள்வதுதானே; இதுவே தொல்லையாகப் போய்விட்டது" என்று திமிரோடு பேசுகிறார் ஒரு குவைத் அதிகாரி.

அராபிய நாடுகளின் வேலையாட்கள் தொடர்பான சொந்தச் சட்டத்தின் யோக்கியதை என்ன? ஆயிரக்கணக்கான பணிப்பெண்கள் அங்கே உழைத்தாலும் அவர்கள் சட்டப்படி அங்கே இருப்பவர்கள் அல்ல. அவர்களை அச்சட்டம் மனிதர்களாகவே கருதி அங்கீகரிப்பதில்லை. ஒரு அரபுப் பெண்ணுக்கு மானபங்கம் ஏற்பட்டாலோ, ஒரு அரேபியனின் உயிருக்கு ஆபத்து என்றாலோ மரணதண்டனை தரப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு பணிப்பெண் தனது எஜமானியைத் திருப்பி அடித்தாள் என்பதற்காக வழங்கப்பட்ட தண்டனையோ ஐந்தாண்டு சிறைவாசம். ஆனால், உழைக்க வந்தவள் கற்பழிக்கப்பட்டாலோ, ஆண் கொலை செய்யப்பட்டாலோ, அங்கோ சட்டப்படியே குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியும். ஜனநாயகப் பண்பும், மனித நேயமும் போற்றும் இஸ்லாமியர்களாகிய நாம் மக்களை இப்படி நடத்தலாமா? நமது பெண்களை தொடர்ந்தும் பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கலாமா? சற்று யோசியுங்கள். இவற்றுக்கு நாம் அனைவரும் சேர்ந்து உடனடியாக தீர்வு கண்டேயாகவேண்டும்.

**முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்**

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் -
(12 இதழ்கள்) - 120/-

6 மாதங்கள் -
(24 இதழ்கள்) - 240/-

1 வருடம் -
(48 இதழ்கள்) - 480/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Puplication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வாராந்த ஜும்ஆ பேருரைகளால் சமுதாயம் எழுச்சிப் பெருவதெப்போ?

இப்படியொரு கேள்வியை நமக்குள் நாமே கேட்டுக்கொள்ளும்போது, வாரந்தோறும் வெள்ளிக்கிழமை நண்பகலில் நடைபெற்றுவரும் ஜும்ஆத்தொழுகையை ஒட்டி, நிகழ்த்தப்படும் "குத்பா" பேருரைகளால் நமது சன்மார்க்க சமுதாயம் எழுச்சி பெற வேண்டும், விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பது புரிகிறதல்லவா? அதே வேளை - இது நாள்வரை சமுதாயம் எழுச்சிபெறவில்லை என்ற மறுபக்க கருத்தும் உண்மையும் தெரிய வருகிறதல்லவா?

உண்மையில் ஜும்ஆ குத்பா பேருரைகளால் நம் சமுதாயம் எழுச்சிபெறவில்லையா? ஏன்றால், சமுதாயம் காத்திரமான விழிப்பு பெற்று, பெற்றவிழிப்பின் வெளிச்சத்தில் தொடர்ந்து நின்று நிலைக்கும் ஆரோக்கியமான எழுச்சிபெறவில்லை என்றே சொல்லவேண்டும். இஸ்லாமிய வரலாற்றில் முக்கியமான, புனிதமான, நன்நாட்களை, இரவுகளைப் பற்றி மிம்பர்களில் விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றனவே தவிர, சமுதாய மறுமலர்ச்சிக்கான எழுச்சியுரைகள் ஆற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டையே "முல்லா" சமூகத்து மஜ்லிஸில் முன்வைக்க விரும்புகின் றேன்.

சன்மார்க்க நெஞ்சங்களே! என்று இந்நாட்டில் முஸ்லிம்கள் அடியெடுத்து வைத்தார்களோ, அன்றிருந்து ஐங்காலத் தொழுகைகளும், ஜும்ஆத் தொழுகையும் நம்நாட்டில் நடைபெற்றே வருகின்றன. ஆரம்பகாலத்திலிருந்து ஜும்ஆகுத்பாக்கள் அரபியில் மட்டுமே ஆற்றப்பட்டு வந்திருக்கின்றன. தாய்மொழி தமிழிலும் குத்பா உரை நிகழ்த்தப்படும் வழக்கம், சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைமுறைக்கு வந்ததென்பது நம் சிந்தனைக்குரியது. சிங்கள மொழியில் குத்பா உரை நிகழ்த்தப்படும் பாரம்பரியம், அண்மைக்காலமாக ஆங்காங்கே ஓரிரு பள்ளிவாசல்களில் பரீட்சாத்தமாக நடை பெற்று வருவதும் கவனிப்புக்குரிய விடய மாகும்.

ஒரு பகுதிவாழ் முஸ்லிம்கள் பக்கத்தேயுள்ள பள்ளிவாசலில் ஐங்காலத் தொழுகைக்காக ஒன்று கூடுவதுபோல், பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நண்பகல்வேளை ஊர்மக்கள் அனைவரும் ஒரே (பெரிய) பள்ளிவாசலில் ஒன்று கூடி ஜும்ஆத்தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்பது சரீஆவின் சட்டமாகும். ஊர் மக்கள் எல்லோரும் ஒரே இடத்தில் ஒன்றுகூடி அந்தப்பெரிய சனக்கூட்டத்தின் நடுவே குறிப்பிட்ட விசயத்தை முன்வைத்து குத்பாஉரை நிகழ்த்தப்படுவதை இஸ்லாம் கட்டாயப்படுத்துகின்றது. நண்பகல் வேளைக்குரிய "லுஹர்" தொழுகையில் 4 ரக்காயத்து தொழும்முறையை, அதே நண்பகலில் வெள்ளிக்கிழமை மட்டும் ஜும்ஆத் தொழுகை 2 ரக்காயத்தாக தொழவேண்டும் என்ற விதிமுறை குத்பா உரையில் நிகழ்த்தப்படுவதையும் அதனை முஸ்லிம்கள் செவிசாய்த்துக்கேட்பதையும் வலியுறுத்தவேயாகும்.

மேலும் குத்பா உரையில் சமுதாயத்தின் சமகால எரியும் பிரச்சினைகள் தொட்டுப் பேசப்படவேண்டும். சமய உண்மைகளை, சமய ரீதியிலான கட்டளைகளை, விளக்கங்களை, குத்பா உரையில் பேசுவதோடு சமுதாயப்பிரச்சின்னகளையும் அவசியம் பேசியாக வேண்டும். அது குறித்து முஸ்லிம்களை விழிப்படை யச் செய்யவேண்டும்.

ஊர் மக்களை ஓரிடத்தில் ஒன்று கூடச் செய்து, குத்பா உரையை அவசியப்படுத்தி, சமகால சமுதாயப் பிரச்சினைகளை தொட்டுப்பேசும்படி இஸ்லாம் வற்புறுத்துகிறது என்றால் இந் குத்பாஉரையின் முக்கியத்துவத்தையும் - தேவையையும் புரிந்து கொள்ள முடிகிறதல்லவா? உலகத்தில் வேறு எந்த சமயமும் ஏற்படுத்தாத ஒன்றை, இஸ்லாம் ஏற்படுத்தி, ஏற்புடையதாக்கி, சமூகத்தின் சமாச்சாரங்களில் ஒவ்வொருவரையும் பங்காளியாக ஆக்கிவிடும்இந்த சமூகக் கட்டமைப்பு, எண்ணி எண்ணி பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

இத்தகைய சிறப்புக்குரிய குத்பா உரைகள் நம்நாட்டில் நம்மவரிடையே கடந்த காலங்களிலும் சரி; தற்காலத்திலும் சரி... எந்த வகையான எழுச்சியையும் ஏற்படுத்தியதற்கான எந்தவொரு தடயத்தையும் காணமுடியவில்லையே... இது ஏன்? இதிலிருந்து ஒன்று தெட்டத் தெளிவாகப் புரிகிறது. குத்பா உரைகளை நிகழ்த்தும் நம் உலமாப் பெருமக்கள், சமூகப் புரட்சியை ஏற்படுத்திய ரஸூலுல்லா (ஸல்) அவர்கள் நின்று உபந்நியாசம் புரிந்த மிம்பர் மேடைகளை சரிவரப் பயன்படுத்தவில்லை என்பது தான்!

உண்மையாகவே - நம் பேஷ் இமாம்களும், கத்தீப்மார்களும் மிம்பர் மேடைகளை சரிவரப் பயன்படுத்தவில்லையா? இல்லை... இல்லை... இல்லவேயில்லை. அரைத்த மாவையே திருப்பித் திருப்பி அரைக்கும் பாணியிலேயே பயான் பண்ணுகின்றனர். இதனால் குத்பா உரைகளை செவிமடுக்க அமர்ந்திருக்கும் சன்மார்க்கத் திருக்கூட்டத்தில், தூங்கி வழியும் ஒரு பிரிவினரும் எப்போதும், எந்தப் பள்ளியிலும் இருந்தே வருகின்றனர்.

தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் போன்ற சமயக் கட்டளைகளையும், நபிகள் நாயக (ஸல்)த்தினதும், ஸஹாபாத் தோழர்களினதும் ஜீவிய சரித்திர சங்கதிகளையும் திரும்பத் திரும்ப பேசி வருகின்றனரே தவிர, புதிய சிந்தனை வெளிச்சத்தில் இஸ்லாமிய சமய விழுமியங்களை - சமகால சமூகப்பிரச்சினைகளை இஸ்லாமிய உரைகல்லில் உரசிப் பார்த்து, குறிப்பிட்ட விவகாரத்தில் சன்மார்க்க உடன்பிறப்புக்கள் பெறவேண்டிய விளக்கங்களை சொல்வதாக இல்லை. கேட்போர் பிணிக்கும் வகையில் உணர்வுகளைத் தொட்டுத் தடவும் வழியில் குத்பா உரைகள் அமைவதுமில்லை. தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக தூக்கத்தையே பெரும்பாலான குத்பாக்கள் ஏற்படுத்துகின்றன.

இப்படியான குத்பாக்களே தொடருமேயானால், நம் நாட்டில் குத்பாக்களால் எந்தக் காலத்திலும் எழுச்சி ஏற்படப் போவதேயில்லை. "ஏதோ வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆவுக்குப் போகிறோம்; பேசுகிறார்கள்; கேட்கிறோம்; தொழுகிறோம்; வருகிறோம்" என்ற நிலையிலேயே விஷயம் இருக்கும். மற்றபடி துளியளவுகூட மாற்றமோ ஏற்றமோ சமூதாய மட்டத்தில் ஏற்படப் போவதேயில்லை. பல்லின மக்கள் வாழும் நம் தாயகத்தில் சிறுபான்மையிலும் சிறுபான்மை இனத்தவர்களாக வாழும் நம் சமூகத்திற்கு எந்த லாபமுமில்லை என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் நம் சமூகம் எல்லா வளமும் - நலமும் - பலமும் பெற்று, எவ்வித பிரச்சினையுமின்றி சந்தோஷமாக - சமாதானமாக வாழ்ந்து வருமேயானால், ஜும்ஆக்களால் எவ்வித பயன்பாடும் கிடைக்காவிடினும் பரவயில்லை என வாளாவிருந்து விடலாம்.

நம்மில் எவரும் சும்மா இருந்து விடும் நிலைமையிலா நம் சமூகம் இருக்கிறது? எத்தனை பிரச்சினைகள்? எத்தனை சவால்கள்? எந்தெந்த உருவத்தில் அச்சுறுத்தல்கள் - கெடுபிடிகள் - சமாளிப்புகள் - புறக்கணிப்புகள் - நிராகரிப்புகள் அப்பப்பா...! இவற்றை எல்லாம், இவற்றின் உட்பொருள் - உள்நோக்க நுட்பங்களை எல்லாம், நம் சமுதாயத்தவருக்கு விளக்கி, தெளிவை ஏற்படுத்தி, ஒரு சமூகப் புரிந்துணர்வை - சமூக கருத்துருவத்தை ஏற்படுத்த... நமக்கென வேறு வழியுண்டா?

ஊடகங்களின் காலமிது என்பார்கள். அந்தளவுக்கு ஊடகங்கள் வளர்ச்சி பெற்று வியாபித்துள்ளன. இவற்றுள் நம்மவர்களுக்கென தேசிய மட்டத்தில் முஸ்லிம் பத்திரிகைகளோ, (இப்போதுதான் முஸ்லிம் குரல் பிறந்துள்ளது) வானொலி - தொலைக்காட்சிகளில் 'செனல்'களோ இல்லை. நம்மவர்களின் விவகாரங்களை விளக்கி ஒரு சமூக சிந்தனைத் தெளிவை ஏற்படுத்த இந்தப் பொது ஊடகங்கள் எதுவும் தயாராகவுமில்லை.

இன்னொரு வழியில் சிந்தித்தால், நம்மில் எல்லோருமே பத்திரிகைகள் படிப்பதில்லை; வானொலி கேட்பதில்லை; தொலைக்காட்சி பார்ப்பதில்லை. ஆனால் தொழுகைக்கு நம்மில் அனைவருமே பள்ளிவாசலுக்கு செல்லக் கூடியவர்கள்; வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு நாம் அனைவருமே கட்டாயம் பெரிய (ஜும்ஆ) பள்ளிவாசலுக்கு செல்வோம். இப்படிச் செல்வது கட்டாயக் கடமையாகும்.

ஆகவே, ஜும்ஆ - மிம்பர் மேடை - குத்பா உரை போன்றவைதாம், நம் சமூகத்தின் கூட்டு மொத்த சிந்தனையைத் தட்டி எழுப்பக் கூடிய கருத்துருவத்தை உருவாக்கக் கூடிய நம்மவரின் விஷய ஞானத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய ஒரே இடம்; ஒரே வாய்ப்பு; ஒரே வழி என்பதை மறுக்க முடியாது.

ஆகவே, இந்த ஜும்ஆ பேருரைகளை இனிமேலாவது திட்டமிட்டு அமைப்போம். சமய சாற்றினை வடித்துத் தருவதுடன், சமூகத்தின் தேவைகளையும் குறைகளையும் பிரச்சினைகளையும் தொட்டுப் பேசி, சமுதாயத்து நெஞ்சங்களை நேர்வழியின் பால் வழிநடத்திச் செல்வதுகுறித்து சிந்திப்போம். தூங்கி வழியும் விதமான பயான்களை நிகழ்த்தாமல், எல்லோரும் சிந்தித்துணரும் வண்ணம், சீர்தூக்கிப் பார்த்து தெளியும் வண்ணம் காத்திரமான பயான்களை நிகழ்த்துவோம். ஊர் விஷயங்களையும் உலக நடப்புகளையும் தெரிந்து, நம்மவர்களை உரிய வழியில் இட்டுச் செல்ல, பயன்தரும் பயான்களை முன்வைப்போம்.

இவ்வாறு ஆக்கபூர்வமான பயான்களை நிகழ்த்துவதற்கு, ஜும்ஆவையும், மிம்பரையும் எல்லா கத்தீப்மார்களும் வாராந்தம் பயன்படுத்தினால், நம்சமுதாயம் எழுச்சி பெறும் நன்னாள் வெகுதூரத்திலில்லை என்பதை "முல்லா" இப்போதே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு
அனுசரணையாளர்களாக
விளம்பரம் செய்யுங்கள்




*புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து குறிப்பிடாதது பாரிய தவறு!*

தில்லைக் கூத்தன் கட்டுரை
தினக்குரல் 04-03-2003

அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருடக் கணக்கில் சிறையில் வாழும் நிலை குறித்த உண்மையை அவர்கள் சிறைக்குள்ளிலிருந்து நடாத்தி வரும் போராட்டங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அந்த அப்பாவிகளின் நிலை குறித்து பேசாதது கண்டிக்கப்படத்தக்கது. இந்த விடயத்தில் தவறு நடைபெற்றிருப்பதை உணரும் நீங்கள், ஏன் முழு முஸ்லிம் சமூகமும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புறக்கணிக்கப்பட்டதை ஒரு முக்கிய விடயமாகக் கருதவில்லை "நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம்" என்று சொல்லும் போதெல் லாம் உங்கள் பத்திரிகை தினக்குரல் சமாதானத்திற்கு எதிரானவர்கள் என்று எங்களைச் சொல்கிறது? எப்படி ஐயா உங்களுக்கு ஒரு நியாயம் எங்களுக்கு ஒரு நியாயம்?



*எதிர்காலத்தில் புதுவிதமான அரசியல் கூட்டுக்களும், புதுவிதமான அரசியல் உறவுகளும் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானிக்கும் சக்தி இன்னும் அதிகரிக்கும் நிலை ஏற்படும். இதனால் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு முன்பைவிட கூடுதலாகத் தேவைப்படுகிறது.*

திஹாரியில் அமைச்சர் ஹக்கீம்

கடந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த 12 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை விட எதிர்காலத்தில் கூடக் கிடைக்கும் என்றா நம்புகிறீர்கள்? உங்கள் நம்பிக்கையில் நாங்கள் மண் அள்ளிப் போட விரும்பவில்லை. முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிர திநிதித்துவமும், பேரம் பேசும் தன்மையும், அதிகரித்தால் அதிக மகிழ்ச்சி எமக்கும்தான். அதுசரி; இன்றைய அரசில் நீங்கள் என்ன செல்லாக்காசா? இல்லையே. அப்படி இருக்கும் போது ஏன் முழு முஸ்லிம் சமுகமும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இரண்டு மூன்று அமைச்சுப் பதவியை விட, கோடி கோடி பணத்தை விட இன்னும் அதிகம் பெறலாம் என்பதா உங்கள் எதிர்பார்ப்பு. இதனால் நமது சொந்த மக்களுக்கு என்ன நன்மை என்று இப்போதாவது சொல்லுங்கள்!

*அரசியல் நடாத்துவதற்கு கட்சிகள் உள்ளன, மக்களுக்கு சேவை செய்வதற்கான அமைப்புகள் நாட்டில் போதுமானதாக இல்லை. அதற்காகவே அஷ்ரஃப் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.*

அமைச்சர் அதாவுல்லா
பத்திரிகையாளர்களிடம்.

நமது மக்களுடைய பிரச்சினைகள் அரசியல் ரீதியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய தருணத்தில் சமூக சேவைக்கு அஷ்ரஃப் காங்கிரஸை உருவாக்குவதாகச் சொல்கிறீர்கள். சமூக சேவையை விட அரசியல் ரீதியாக நமது மக்களின் உரிமைக்காக போராடுபவர்களே இன்று நமது மக்களுக்குத் தேவைப்படுகின்றனர். உங்கள் கருத்தைப் பார்த்தால் விரைவில் அரசியலை விட்டு சமூக சேவைக்கு போகப் போகிறார்கள் போலிருக்கிறது. ஒரு தரம் மக்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு எது முக்கியம் என்று. ரோம் எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனின் கதை போல தான் இருக்கிறது இது!

*இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகவும், செயலாளராகவும் ஆறுமுகன் தொண்டமான் பதவியேற்பு*

பத்திரிகை அறிக்கை

உங்கள் முன்மாதிரி கண்டு நமது தலைவர்களும், நமது கட்சிகளின் தலைவரும் செயலாளருமாக ஆகப் போகிறார்கள் என்ற பயம் எமக்கு ஏற்பட்டுவிட்டது. அதற்கு அவர்கள் உங்களை முன்மாதிரியாகக் கூட காட்டலாம். கட்சியில் சர்வ அதிகாரம் என்றால் இதுதான் போலும்....

## அமெரிக்க அடிவருடி...

அரசு அறிவித்திருந்தது. இருபத்தையாயிரம் அமெரிக்க டொலர்கள் மட்டுமல்ல, பல்லாயிரம் அமெரிக்க டொலர்களின் ஏவலாளனாக முஷாராப் அமெரிக்காவின் கையாளாக மாறியது எப்போதோ நடந்துவிட்ட செய்தி. முஷாராபின் துரோகத்தனத்திற்கு பாகிஸ்தான் மக்களிடையே பலத்த எதிர்ப்பு நாளுக்கு நாள் உருவாகிவருகிறது. காலித் ஷேக் முகம்மத் காட்டிக் கொடுக்கப்பட்ட துரோகத்தனம் காரணமாக முஷாராவின் இராணுவச் சர்வாதிகாரம் மக்களால் தூக்கி எறியப்படும் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டதாக பாகிஸ்தானின் சுதந்திரப் பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஈராக் மீதான யுத்தம் தொடங்குமானால் பாகிஸ்தானில் முஷாரபிக்குக்கு சமாதி கட்டப்படும் என அப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு உள்ளன. அல் கய்தாவின் சிரேஷ்ட தளபதிகளில் ஒருவரும் மூத்த உறுப்பினருமான காலித் ஷேக் முகம்மத் "இஸ்லாமிய வரலாறு கண்ட இறைவன் மீது அதிபக்தி கொண்ட மாமனிதர்களில் ஒருவராகவே இருக்கிறார். ஷேக் முஹம்மத் ஒரு போதும் இறைவன் மீதான நம்பிக்கையை இழந்து விடுபவரல்ல" என பொஸ்தன் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறை, சர்வதேசப் பிரிவின் துணைத் தலைவரான, ஸகபியா அயூபுப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வரும் ஜமாஅத்தே இஸ்லாமியக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரின் வீட்டில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் இன்னும் இருவரும் கைதாகியுள்ளனர். காலித் ஷேக் முகம்மத் குவைத் நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் கைதுக்கு மூன்று தினங்களுக்குப் பின், பின்லேடனின் இரு மகன்மார் அமெரிக்க புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெளிவந்த தகவல் அமெரிக்க அரசின் பொய்களில் விளைந்த கனவு எனத் தெரிய வந்துள்ளது.

காலித் ஷேக் முகம்மத் கைது செய்யப்பட்டதன் பின் ஒசாமா பின்லேடனை கைது செய்து விடலாம் என்ற ஆசையில் அமெரிக்காவும் பாகிஸ்தானும் தீவிர இராணுவ நடவடிக்கையில் இறங்கி உள்ளது. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஈரான் எல்லைகளைக் கொண்ட கிந்து குஷ் மலைப் பிராந்தியமொன்றின் 400 கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பிரதேசத்தை சுற்றி வளைத்து ஒசாமாவைத் தேடி வலை விரித்துள்ளது.

ஆக்கிரமிப்புப் படையின் பலத்தோடு யுத்த விமானங்கள், பீரங்கிகள், நவீன ஏவுகணைகள் சகிதம் புஷ்ஷின் படைகள் நடவடிக்கையில் இறங்கி உள்ளன. பின்லேடன் இப்பிராந்தியத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டு விட்டால், அப்பிராந்தியத்தையே பூண்டோடு அழிக்க அமெரிக்க அரசு தயாராக இருக்கிறது என அமெரிக்க அரசு கர்ஜிக்கிறது. அப்பிராந்தியத்தில் வாழும் லட்சக் கணக்கான மக்களின் உயிர் பற்றிய எதுவித அக்கறையுமின்றி.

பாகிஸ்தானைச் சேர்ந்த பேராசிரியர் தாரீக் அலி அவர்கள் - "பாகிஸ்தானை அமெரிக்கா ஒரு ஆணுறை போல் பாவிக்கிறது. விடயம் முடிந்தவுடன் கழற்றி வீசிவிடும்" என குறிப்பிட்டுள்ளதை நாம் ஒரு தரம் நினைவுபடுத்திக் கொள்வோம்!

-அபூநிதால்




## குழந்தைகள் பொய் பேசுவார்களா?

பெரும்பாலான தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் ஒன்றும் தெரியாத பாப்பா - அவர்களுக்கு பொய் சொல்லவே தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் குழந்தைகளுக்குப் பொய் சொல்லத் தெரியாது என்பது உண்மையல்ல. குழந்தைகள் பொய்யும் சொல்வார்கள். குழந்தைகள் மீது நடத்தப்பட்ட ஒரு ஆய்விலிருந்து நான்கு வயதுக்கு மேல் குழந்தைகள் பொய் சொல்லுவார்கள். அது பெரும்பாலும் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக குழந்தைகளால் சொல்லப்படும் பொய்யாக இருக்கிறது. அவர்கள் பொய் சொல்லுவதற்கு மற்றொரு காரணம் சரி தவறு என்பதன் பேதத்தை புரிந்து கொள்ள முடியாத நிலைமையினாலுமாகும்.

சில குழந்தைகள் ஏதாவது ஒரு கதையை உண்மை போல, பார்த்தது போல சொல்லுவார்கள். இதற்கு காரணம் "உண்மைக்கும்" "கற்பனைக்கும்" இடையிலுள்ள வித்தியாசத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமையாகும்.

ஒரு குழந்தை தனது நண்பன், தம்பி, தங்கைகள் மீது ஏற்படும் பொறாமையும் குழந்தைகள் பொய் பேசுவதற்கு இன்னொரு காரணமாகிறது. உண்மையில் அவ்வாறு செய்ய முடியாததால், பொய் சொல்வதன் வழி அக்குழந்தை தனது நண்பர் அல்லது, தம்பி தங்கைகளைவிட வார்த்தைகளில் சிறப்பானவராக காட்டிக் கொள்ள முனைகிறது.

தன்னுடைய தாழ்வு மனப்பான்மையை ஈடு கட்டுவதற்காக பொய் சொல்லி ஈடு கட்டப் பார்க்கின்றனர். இப்படிச் செய்வதன் வழியாக தனது சொந்தத் தன்மையை நிலைநாட்ட விரும்புகின்றனர்.

பள்ளிக்கூடத்தில் மோசமான தேர்ச்சியை பெறும் போதும் குழந்தை இதே முறையை நாடுகிறது. சிறப்பாக தேர்ச்சி பெற்ற குழந்தையைப் பார்க்கும் இந்தக் குழந்தை மனதளவில் பாதிப்படைகிறது.

## கணிதப் புதிர் போட்டி இல - 04

ஒவ்வொரு நாடுகளிலும் தொன்று தொட்டு வழங்கி வரும் கணிதப் புதிர்களில் பெரும்பாலானவை தெரியாத ஒரு எண்ணைக் கண்டு பிடித்தலை அடிப்படையாகக் கொண்டவை. பொதுவாகத் தெரியாத ஒரு எண்ணை x என்று வைத்துக் கொண்டு அதனால் வரும் சமன்பாட்டைத் தீர்த்து அந்த எண்ணைக் கண்டு பிடித்து விடலாம்.

நமது மாணவ மாணவிகளே! நீங்களும் கண்டு பிடியுங்கள்.

ஒரு கூடையிலிருந்த ரோஜா மலர்களில் 1/3 பாகத்தை சாமிலாவுக்கும், 1/5 பாகத்தை சமீருக்கும் 1/6 பாகத்தை றபீசுக்கும் 1/4 பாகத்தை ஆயிஷாவுக்கும் மிகுதியிருந்த 6 யை ஆசிரியருக்கும் கொடுத்தால், மொத்தமிருந்த ரோஜா மலர்கள் எத்தனை ? (பெற்றோர், ஆசிரிய, சகோதர - சகோதரிகளே பிள்ளைகள் சுயமாக விடை எழுத உதவுங்கள்)

மாணவ, மாணவிகளே! மேலே உள்ள கணிதப்புதிருக்கு விடை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். 12 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களே இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியும். கீழ் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 21.03.2003 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியரின் உறுதியுடன் பாடசாலை இலச்சினையும் பொறிக்கப்படல் வேண்டும். சரியாக விடை எழுதியவருக்கு சிறுவர் நூல்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

பெயர்: ------------------------------------------------

வயது: ------------------------------------------------

வகுப்பு: ------------------------------------------------

பாடசாலை முகவரி: ------------------------------------------------

------------------------------------------------

அதிபர் / ஆசிரியர் கையொப்பம்:

------------------------------------------------

பாடசாலை முத்திரை:

------------------------------------------------

## மனிதனும் சுற்றுச் சூழலும் – தண்ணீர்

மாணவ, மாணவிகளே!

ஆறுகளின் தூய்மைக்கேடுகளுக்கு மற்றொரு முக்கிய காரணமாய் இருக்கும் மனிதர்கள் வீசி எறியும் குப்பைகளைப் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ளப் போகிறோம்.

1990ம் ஆண்டுகளில் ஒரு தனிமனிதர் சராசரி நாள் ஒன்றுக்கு 760கிராம் அல்லது வருடத்திற்கு 277 கிலோகிராம் குப்பையை உருவாக்கி இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் வசிக்கும் பகுதியில் ஒரு வாரத்திற்குக் குப்பை அகற்றும் வண்டி வர வில்லை என்று வைத்துக் கொள்ளுங்களேன். வார இறுதிக்குள் அப்பகுதி நிச்சயம், குப்பைக் கூளங்கள் நிறைந்து துர்வாடை வீசும். இதிலிருந்து நாம் எவ்வளவு குப்பைகளை உற்பத்தி செய்கின்றோம் என்பதை உணரலாம்.

சரி, குப்பைகள் எப்படி நமது ஊர்களிலுள்ள ஆறுகளை தூய்மைக் கேடாக்குகின்றன?

1. வீட்டு குப்பையும் ஆறுகளும்

மனிதர்கள் அவர்களது வீட்டுக் குப்பைகளை ஆற்றில் கொட்டும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றார்கள். உங்களுக்கும் கூட இந்தப் பழக்கம் இருக்கலாம். உங்கள் வீட்டு கானில் அல்லது பள்ளிக் கூடத்தில் இருக்கும் கானில் நீங்கள் வீசி எறியும் மிட்டாய் தாள்கள், பிளாஸ்டிக் பேப்பர் போன்றவைகள் பல சமயங்களில் கானின் நீரோட்டத்தை அடைத்துக் கொண்டு துர்நாற்றத்தை ஏற்படுத்தும். அதனால்தான் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று ஆசிரியர்களும் பெற்றோர்களும் கூறுகின்றார்கள்.

பலர் தங்கள் வீட்டுக்குத் தேவையில்லாத பலவிதமான குப்பைகளை ஆற்றில்தான் போடுகின்றனர். உதாரணத்திற்குத் தங்கள் வீட்டில் கிழிந்து போன மெத்தை, உடைந்த நாற்காலி, மேசை போன்ற பெரிய பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு அவர்கள் தேர்ந்தெடுக்கும் இடம் ஆறுகளாக இருக்கின்றன.

2. தொழில்துறை கழிவுகள்

நம் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தொழில்துறை முதுகெலும்பாக இருக்கின்றது. இதனால்தான் இப்பொழுது பலவிதமான தொழில்துறைகள் வேகமாக முன்னேறிக் கொண்டு வருகின்றன.

தொழில்துறைகள் மிக துரிதமாக முன்னேறிக் கொண்டு வரும் அதே சமயத்தில், அவை அதிகமான கழிவு மற்றும் குப்பை உற்பத்திகளையும் ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

தொழிற்துறையினால் உற்பத்தி செய்யப்படும் கழிவுகள், திரவமாகவும், திடப்பொருளாகவும் வெளியேற்றப்படுகின்றன. பல சமயங்களில் இரசாயனங்களும், கழிவுகளும் ஆறுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

இப்படிப்பட்ட தொழில்துறை இரசாயனங்கள் ஆற்று நீரை தூய்மைக்கேடாக்கி ஆற்றில் வாழும் உயிரினங்களைச் சாகடிக்கின்றன. இப்படிப்பட்ட தூய்மைக்கேடான ஆறுகளின் நீரும் யாருக்கும் பயனில்லாமல் போய் காலப் போக்கில் இத்தகைய ஆறுகள் செயற்கை மரணம் அடைகின்றன. ஆறுகள் இல்லாமல் மனிதர்கள் வாழ முடியுமா?

## "முஸ்லிம் தேசமும் எதிர்காலமும்"



"முஸ்லிம் தேசம் பற்றிய" புரிதல்கள், அது தொடர்பான கருத்துக்கள் பெருமளவில் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்ற இன்றைய சூழலில் அது பற்றிய அதிக தெளிவுக்கும் வாசிப்பிற்குமான மிக முக்கிய ஆவணம் நமது மக்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.

1996 இல் லண்டனிலிருந்து வெளிவரும் "உயிர்ப்பில்" பிரசுரிக்கப்பட்டு 1997 இல் முதற் பதிப்பாக வெளி வந்தது. 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் இரண்டாம் பதிப்பு கண்டது.

நமது மக்களின் பரந்துபட்ட வாசிப்புக்குள்ளான அரசியல் ஆவணம் இது! இந்நூலை நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா? உங்கள் புத்தக அலுமாரியில் "முஸ்லிம் தேசமும் எதிர் காலமும்" என்ற இந்நூல் இல்லையா? மிகக் குறைந்த விலையில் இந்நூலை உங்கள் கரம் சேர்க்க ஆவலாய் உள்ளோம்!

ரூபா 150க்கான காசுக்கட்டளை அல்லது காசோலையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். நூற்பிரதி தேவையாயின் மேலதிக விபரங்களை இப்பத்திரிகையில் உள்ள சந்தா விபரப் பெட்டியை பார்த்து எமக்கு அனுப்பி வைக்கவும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி நிலவர அறிக்கை

முஸ்லிம் தேசத்தின் புராதன கால இருப்புக்களில் ஒன்றான காத்தான்குடிக்கு தனித்துவமான தொன்மையிருக்கின்றது. தமிழர், முஸ்லிம்களின் உதவியுடன் திமிலரை அழித்த காலத்துடன், காத்தான்குடி முஸ்லிம்களின் வரலாறும் தொடர்புபட்டிருக்கிறது. போர்த்துக்கேய, ஒல்லாந்து முஸ்லிம் இன அழிப்பில் தென்னிலங்கையில் இருந்து வெளியேறி, காத்தான்குடியில் குடியமர்ந்தமைக்கான சான்றுகளும் நிரம்பவே உள்ளன.

காத்தான்குடி மக்கள் தங்களை ஒரு வியாபார சமூகமாக விருத்தியுறச் செய்வதிலும், விவசாய சமூகமாக விருத்தியுறச் செய்வதிலும் நூற்றாண்டு கால பொருளாதார போராட்டமொன்றை மேற்கொண்டதை ஆய்ந்து அவதானித்தால் புரிந்து கொள்ளலாம்.

ஆரம்பகாலம் தொடக்கம் பல நூற்றாண்டுகளாக 1980 ஆம் ஆண்டு வரை விவசாய சமூகமாக இருந்த காத்தான்குடி முஸ்லிம்களுக்கு சொந்தமாக இருந்த, தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அல்லது பறிக்கப்பட்டுள்ள 25 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நெற் காணிகளை இழந்ததன் பின்னர் தன்னை ஒரு முற்றுமுழுதான வர்த்தக சமூகமாக மாற்றிக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை காத்தான்குடி முஸ்லிம் மக்களுக்கு.

பொருளாதார அந்தஸ்த்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு காத்தான்குடி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது. விவசாய சமூகம் சிதைக்கப்பட்டதன் நேரடியான தாக்கமாக முஸ்லிம் பெண்களின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணம் சகல சமூக, சமய கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்த நிலையில் ஆரம்பமாகியது.

கூட்டு முயற்சி இல்லாத தனித் தனியான வியாபார முயற்சிகளில் தனியான, பற்றாக்குறையான மூலதனத்தைக் கொண்டு இலங்கையின் அதிகமான பிரதேசங்களில் 1200க்கும் மேற்பட்ட வியாபார தலங்களை காத்தான்குடி சமூகம் நிறுவியுள்ள போதிலும் வர்த்தக தாபனங்களை கொண்டு நடத்துவதற்காக தேவைப்படும் மூலதனப் பற்றாக்குறையினால் சிங்கள அரச வங்கிகளையும், தனியான வட்டிக் கடைகளையும் நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உலமாக்களை அதிகமாகக் கொண்ட, சன்மார்க்க மணம் வீசும் காத்தான்குடி காணப்படுகின்றது. இந்நிலையில் உழைப்பதில் 70 சதவீத இலாபத்தை வட்டியாக கொடுப்பதனால் மூலதனச் சேமிப்பும், கூட்டு முதலீட்டு வாய்ப்பும் தொடர்ந்து பின்தள்ளப்பட்டுக் கொண்டே வருகின்றது.

முஸ்லிம் தேசத்தின் அங்கமான காத்தான்குடி பலமான முதலீட்டு பலத்தை பெற்றுக் கொள்வதில், சிங்கள தேச வங்கிகளுக்கு கொட்டிக் கொடுக்கும் பாரிய வட்டி, பெரும் பின்னடைவை முஸ்லிம்களின் பொருளாதாரத்தில் ஏற்படுத்துகின்றது. வங்கி முகாமையாளர்கள் முஸ்லிம்களின் பொருளாதாரத்தை வட்டியாக சுரண்டுவதில் பெரும் அக்கறையுடன் செயல்படுகின்றனர். காத்தான்குடி முஸ்லிம்களின் வீடு ஆதனங்களை அடமானமாகப் பெற்று கடன் கொடுக்கும் முகாமையாளர்கள் கடன் கட்ட தாமதிக்கும் வீடுகள், ஆதனங்களை ஏலம் போடுவதில் மிகவும் அக்கறையாக செயல்படுகிறார்கள். 100 வீதமான முஸ்லிம்களைக் கொண்ட கலப்பற்ற காத்தான்குடியில் தமிழ் குடியேற்றங்களை செய்வதற்கு இந்த ஏல விற்பனையூடாக பாரிய முயற்சிகளை மறைமுகமாக தமிழ் வங்கி முகாமையாளர்கள் முன்னெடுக்கின்றனர். சிங்கள பெரு முதலாளித்துவத்தின் சுரண்டல் நிறுவனமான செலான் வங்கி 100க்கு மேற்பட்ட வீடுகளை ஏலம் இடுவதற்கு காத்திருக்கின்றது. சமூக அக்கறையுள்ள பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் இதை தவிர்ப்பதற்கு கடும் பிரயத்தனங்களை எடுத்து வட்டியை அறவீடு செய்து கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சிங்கள தேச வங்கிகளின் சுரண்டல் இவ்வாறு தொடர்ந்து கொண்டிருக்க, காத்தான்குடி சமூகம் கல்வியின் ஊடாக தலையெடுக்க முற்படுவது தமிழ் கல்வியதிகாரிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் முறியடிக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றது.

கல்முனையில் தனியான தமிழ் கல்வி வலயம் அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டன. அதே காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட மட்டக்களப்பு முஸ்லிம் கல்வி வலயக் கோரிக்கை அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது. மட்டக்களப்பு முஸ்லிம் கல்வி வலயம் அமைக்கப்பட்டிருந்தலாவது காத்தான்குடி மக்களின் கல்வியை ஓரளவு சுதந்திரமாக தலை நிமிரச் செய்ய முடியும். இதிலும் முஸ்லிம் தலைமைகள் அசமந்தப் போக்கையே காட்டி நின்றன.

தமிழ் கல்வியதிகாரிகள், காத்தான்குடி முஸ்லிம்களின் கல்விச் சொத்தான மத்திய மகா வித்தியாலயத்தை தரம் தாழ்த்துவதில் முனைப்புடன் செயல்பட்டனர். திறமையற்ற, ஊழல் நிறைந்த, கல்வித் தகுதியில்லாதவர்களை அதிபர்களாக தொடர்ந்து நியமித்தனர். அதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஏகோபித்த ஆதரவை திட்டமிட்டு பெற்றுக் கொண்டனர். தமிழ் பாடசாலைகளில் கழிக்கப்பட்ட, வயது போன, பிள்ளைப் பேறுக்கு காத்திருக்கின்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

முஸ்லிம் பாடசாலைகளில் தமிழ் ஆசிரிய நியமனத்தின் பின்னணியில் ஒரு பெரிய தொடர் சதியும் நிறைவேற்றப்படுகின்றது. காத்தான்குடியில் உள்ள 20 க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் தற்போது ஆசிரியர்கள் நிரப்பப்பட்டு விட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த ஒரு தமிழ் பாடசாலையிலும் (மட்டு நகர் தவிர) ஒரு முஸ்லிம் ஆசிரியர் தானும் நியமிக்கப்படவில்லை. அரசாங்கம் ஆசிரியர் நியமனம் செய்கின்ற போது முஸ்லிம் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம் இல்லையென்று காட்டுவதற்கு கல்வி அமைச்சுக்கு அனுப்பிய பட்டியலில் ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன. முஸ்லிம்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்பு எவ்வாறு தமிழ் கல்வி அதிகாரிகளால் மறுக்கப்படுகின்றன என்பதற்கும், முஸ்லிம் தேசத்தின் கல்வி வளர்ச்சி



தொடர்ந்தும் தமிழ் ஆதிக்க சக்திகளின் கைகளில் தங்கி நிற்க வேண்டும் என்பதற்கும் ஏதுவான தமிழ் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடாகவே இதனை முஸ்லிம் சமூகம் உணர்கின்றது.

காத்தான்குடிக்கெதிரான கல்விச் சுரண்டல் இவ்வாறு திட்டமிட்டு தொடர்ந்து கொண்டிருக்க எமது காத்தான்குடி பொருளாதாரம் எவ்வாறு இலகுவாக தமிழ் தேசத்தால் அள்ளப்பட்டு செல்கின்றது என்பதை உற்றுப் பார்த்தோமானால் இதனை நன்கு அவதானிக்கலாம். காத்தான்குடி முஸ்லிம்களுக்கு சொந்தமான நிலவளம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் அதனூடாக எமக்கு சேர வேண்டிய எமது சொந்த வளங்களுக்கு, பணம் செலுத்திப் பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு 2 சதுர கிலோ மீட்டருக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தமிழ் தேசத்தால் திணிக்கப்பட்டுள்ளோம்.

காத்தான்குடியின் வாழ்க்கை செலவு மட்டும் கொழும்பு நகரத்துக்கு சமமாகவே காணப்படுகின்றது. இங்கு வாழ்கின்ற 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத்தியதர நுகர்வைக் கொண்ட மக்களாகிய நாம் உயர்ந்த விலை நுகர்வையே செய்ய வேண்டியுள்ளது. காத்தான்குடி என்ற மண்ணில் நாம் உண்ணவும், உறங்க வீடு கட்டவுமே இயந்திரத்தனமாக மாற்றப்பட்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் உண்ணவும் வீடு கட்டவும் என எமது பொருளாதாரப் பலத்தை தமிழ் தேசத்திடம் இழந்து கொண்டிருக்கின்றோம். எமக்கான உணவுப் பொருட்களுக்கான விலையும், கட்டடப் பொருட்களான மண், கல்லின் விலையும், கூலியும் தமிழ் தேசத்தால் காத்தான்குடியையும், ஆரையம்பதியையும் பிரிக்கும் பரீனாஸ் வீதியிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. கட்டடத்தேவைக்கான மண்ணுக்கும், முஸ்லிம் தேசத்திற்கென்று தனியான விலை நிர்ணயிக்கப்படுகின்றது. உதாரணமாக மண் 1 கியூப் பரீனாஸ் வீதியில் (ஆரையம்பதி பக்கம்) 300 ரூபா பரீனாஸ் வீதி (காத்தான்குடி பக்கம்) 800 ரூபா. கத்தரிக்காய் 1 கிலோ ஆரையம்பதியில் 15 ரூபா. காத்தான்குடியில் 40 ரூபா. இவ்வாறு அதிகமான விலையை தமிழ் தேசம் முஸ்லிம் தேசத்தின் மீது திணித்து பொருளாதார சுரண்டலை மேற்கொள்கின்றது.

காத்தான்குடி மக்களாகிய நாம் எமது குடும்பப் பிணைப்பு, மாப்பிள்ளைக்கு வீடு சீதனம் கொடுக்கும் முறை, உணவுப் பழக்க வழக்கம் போன்றவற்றால் நமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாத சிக்கலில் மாட்டிக் கொண்டு கடனாளியாக வாழ்க்கையை குறுக்கிக் கொண்டுள்ளோம்.

1990 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் இருந்து தமிழ் தேசமும், புலிகளும் முஸ்லிம் மக்களாகிய எம்மிடம் இருந்து எவ்வளவு பொருளாதாரத்தை சுரண்டியுள்ளது என்பதை அவதானித்து தெளிந்து கொள்ளலாம்.

01. 25 ஆயிரம் ஏக்கர் காணிக்கு 1 ஏக்கருக்கு 1000 ரூபா என்றாலும் வருடத்திற்கு 2 கோடியே 50 லட்சம் சுரண்டப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டுடன் 12 வருடங்களை பூர்த்தி செய்துள்ள நிலையில் புலிகள் 30 கோடி ரூபாவை சுரண்டி ஏப்பம் விட்டுள்ளனர்.

02. காத்தான்குடியில் சராசரி 23 மாடுகள் தினமும் அறுக்கப்படுகின்றன. 1 மாட்டுக்கு 1000 ரூபா புலிகள் வரியாக அறவிடுகின்றனர். ஒரு நாளுக்கு 23 ஆயிரம் ரூபா வீதம் 1 மாதத்திற்கு 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும், 1 வருடத்திற்கு 82 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு 12 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் 9 கோடியே 93 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை எம்மிடம் இருந்து புலிகள் சுரண்டியுள்ளனர்.

இது தவிர எம்மிடமிருந்து மேய்ச்சல் நிலம் பறிக்கப்பட்டதால் கால்நடை வளர்ப்புத் தொழிலை இழந்துள்ளோம். 1990 ஆம் ஆண்டு எம்மிடமிருந்து 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் புலிகளால் சூறையாடப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. இதன் பெறுமதியே 5 கோடி ரூபாவுக்கு மேல் காணப்படுகின்றது.

எமது காத்தான்குடியில் தினமும் அறுக்கும் 23 மாடுகளுக்கு ஒன்றுக்கு குறைந்தது 9 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும், ஒரு மாதத்திற்கு 65 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் 1 வருடத்திற்கு ரு 7 கோடி 45 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் எம்மிடம் இருந்து தமிழ்த் தேசம் உறிஞ்சிக் கொள்கின்றது. இதன் காரணமாகவே மாட்டு இறைச்சி 1 கிலோ 150 ரூபாவுக்கு நுகர்வு செய்ய வேண்டியுள்ளது.

03. காத்தான்குடியில் 8 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. ஒரு குடும்பத்திற்கு 1/2 கிலோ மரக்கறி வீதம் 4000 கிலோ மரக்கறி குறைந்தபட்சம் தினமும் தேவைப்படுகின்றது. 1 கிலோ மரக்கறி 25 ரூபா என்றாலும் ஒரு நாளைக்கு 1 லட்சம் ரூபாவையும் 1 மாதத்திற்கு 30 லட்சம் ரூபாவையும், வருடத்திற்கு 3 கோடி 60 இலட்சம் ரூபாவையும் தமிழ்த் தேசம் மரக்கறிக்காக எம்மிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றது. இதே போன்றே மீனுக்கு கொடுக்கும் தொகை 6 கோடி ரூபாவையும் 1 வருடத்திற்கு இழந்து கொண்டிருக்கின்றோம்.

04. இதே போன்று காத்தான்குடிக்குள் தொழில் வாய்ப்புக்களுக்காக (மேசன், தச்சன், கூலி) என்றும் சுமார் 1000க்கு மேற்பட்ட தமிழ் தொழிலாளர்கள் தினமும் தொழில் வாய்ப்பை பெறுகின்றனர். ஒருவர் குறைந்தது 200 ரூபாவை கூலியாக பெறுகிறார். (500 ரூபா வரை கூலி பெறும் தொழிலாளிகளும் உண்டு.) ஒரு நாளைக்கு 200 ரூபா வீதம் 1000 பேரும் தினமும் 2 லட்சம் ரூபா பணம் முஸ்லிம் தேசத்தில் இருந்து கைமாறுகின்றது. 1 மாதத்திற்கு 60 லட்சம் ரூபா வீதம் 1 வருடத்திற்கு 7 கோடி 20 லட்சம் ரூபாவை முஸ்லிம் தேசம் தனது பொருளாதாரத்தில் இருந்து இழக்கின்றது.

05. இது தவிர கல், மண் இவற்றிற்காக தமிழ் தேசத்திற்கு வருடத்திற்கு 40 கோடி ரூபாவுக்கு மேல் வாரி இறைக்கின்றோம். இந்த கல்லும் மண்ணும் எமது வயல் பிரதேசங்களுக்கு எம்மை செல்லவிடாது தடுத்து விட்டு அங்கிருந்து எடுத்து வந்து எமக்கு விற்பனை செய்கின்றனர்.

மொத்தமாக வருடத்திற்கு 75 கோடி ரூபாவுக்கு மேல் முஸ்லிம் தேச (காத்தான்குடி மாத்திரம்) பொருளாதாரத்தை பலப்படுத்தும் நிதியை எம்மை இன அழிப்பு செய்வதற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றோம். எம்மிடம் இருந்து பெறப்படும் பணம் எம்மை அழிப்பதற்கும், எமது முஸ்லிம் தேசத்தை சிதைப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறு அமெரிக்க பெப்சி, கொக்கா கோலா கம்பனிகள் முஸ்லிம்களிடம் விற்பனை செய்யப்பட்டு கிடைக்கும் பணத்தில் பலஸ்தீனத்தையும், ஈராக்கையும் ஏனைய முஸ்லிம் நாடுகளையும் அழிக்கும் வேலையில் ஈடுபடுகின்றதோ அதே போன்றே தமிழ் தேசப் புலிகளும் எமது நிதியைக் கொண்டே எம்மை சுத்திகரிக்க முயல்கின்றனர்.

**ஏ.யூ.எல்.எம்.ஹாரிஸ்.**

யாழ்ப்பாணம், மன்னார் முஸ்லிம்களிடம் அபகரிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி 1000 கோடியை தாண்டுவதாக மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஏனைய முஸ்லிம் தேசத்தின் (ஏறாவூர், கல்குடா, அம்பாறை மாவட்டம், திருகோணமலை மாவட்டம்) நிதியும் இதே போன்றே தமிழ் தேச புலிகளிடம் சென்றடைகின்றது. மொத்தமாக 820 கோடி ரூபா முஸ்லிம் தேச நிதியை வருடாந்தம் புலிகள் விழுங்கி ஏப்பம் விடுகின்றார்கள் என்ற உண்மையை நாம் உணர்தல் வேண்டும். இவற்றை முஸ்லிம் தேசம் எதிர் கால திட்டமிடலின் ஊடாக பாதுகாக்க வேண்டிய பொறுப்பினையும், முஸ்லிம் தேசம் ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

முஸ்லிம் தேசம் பங்கு மூலதனத்தை திரட்டுவதற்கும் கூட்டுத் தொழிற் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் தொழில்நுட்ப பயிற்சிகளை இளைஞர், யுவதிகளுக்கு வழங்குவதற்கும் ஆக்கபூர்வமான திட்டங்களை புத்திஜீவிகளின் ஊடாக தீட்டுவதற்கு உடனடியாக முன்வர வேண்டும். திட்டங்கள் உடனடியாக செயற்படுத்தப்படவும் வேண்டும். இல்லையேல் முஸ்லிம் தேசம் விழுங்கப்படுவதை பார்த்துக் கொண்டு நிற்பதற்கும் ஆட்கள் இருக்க மாட்டார்கள். முன்னொரு காலத்தில் காத்தான்குடி என்று ஒரு நகர் இருந்தது என்று வரலாற்றில் கூட படிக்க முடியாது போய்விடும்.

## கர்பலாவின் கண்மணிகள்!

முஹர்ரம் மாதம்
முகிழ்த்த - பத்தாம் நாள்;
முஸ்லிம்கள் நினைவேட்டில்
முத்திரை குத்தப்பட்ட
முதன்மை நாளாம்!
ஆம்;
அந்த நாள்,
அங்கரந்து விட்ட
அவலமான கொட்டாவியில்,
"அஊது பில்லாஹியை" ஊதி,
அடைக்கலங் கோரிய
அடியார்களின்
ஆரோகண சுருதியே...
ஆண்டு தோறும்,
அனைத்துலக
முஸ்லிம்களாலும்
அசைபோட்டும்,
மீட்டப்படுகிறது!

அண்ணல் நபி நாயகரின்
அணிமார்பில் சவாரி செய்த
அலி - பாத்திமாவின்
அருமைக் கொழுந்துகளாம்
ஹஸன் - ஹுஸைனும்;
அவர்தம் குல வாரிசுகளும்
அராஜக எசீது வெறியரால்
அடியீறாகக் கருவறுக்கப்பட்டு;
அமர்களத்தில்
சஹீதாக்கப்பட்டனர்!

அந்த நாளே...
அல்லாஹ்வின் நேசரெல்லாம்
அழுது சலித்து நொந்த நாள்!
அகத்தால் புழுங்கி
வெந்தநாள்!
அன்றையத் தினம் -
அதிகாரத் திமிர் கொண்டு
அடர்ந்தேறிய எசீதுக்கும்;
அவனது கூலிப் படைக்கும்
அதிஷ்ட தினமாய்க் கூட
அமைந்திருக்கலாம்!

ஆனால்;
ஆளணியைப் பாராமல்,
ஆயுத பலத்தை ஓராமல்;
அல்லாஹ்வின் பலத்தையே
ஆன்மீகக் கேடயமாக
அகந்தாங்கிக்
கொண்டார்களே...
அந்த சுஹதாக்கள் தாம்
அல்லாஹ்வின் அன்பையும்
அனுக் கிரகத்தையும் பெற்ற
அதிஷ்டசாலிகள்!

அவர்கள் ஒருபோதும்
அபாக்கிய வான்களல்லர்!
அவர்களின் -
அருமை பெருமை தேராது,
ஆதிக்க வெறியோடும்
அடர்தேறிய...
அந்த யசீதுப் பரிவாரமே
அல்லாஹ்வின்
முனிவுக்குட்பட்ட
அபாக்கிய வான்கள்!

அண்ணலர் ஹுஸைனாரும்
அவர்தம் குலக் குருத்துகளும்
அப்படி என்னதான்...
அநியாயம் செய்துவிட்டார்கள்?

காத்தமுந் நபிகளார்
கட்டிக் காத்த கிலாபத்திலே,
கறைபடியக் கூடாது என்று
கருதியது குற்றமா? - அல்ல;
குடிதழுவிக் கோலோச்சும்
குடியரசுக் கொற்ற முறையே...
குவலயத்துக் கேற்ற தென்று
குரல் கொடுத்தது குற்றமா? -
அல்லது
குடும்ப உறவே
காலாதி காலமாகக்
கொலு வேற வேண்டுமென்று
குதியாட்டம் போட்ட எசீதின்
கொடுங் கோன்மையைக்
கண்டித்ததுதான் குற்றமா?
எது குற்றம்...? எது பிழை...?
எது எப்படியாயினும்,
எதேச்சாதிகாரம்
என்றுமே பால் வார்க்கா...
என்பதற்கு
எசீதின் பைத்தியக் கோல
அழிவே எமக்குச் சான்றாகும்!

சந்தாப்பம் சரிவுகளைச்
சாதகமாக்கி - அவற்றில்
சவாரி செய்யும்
சதிகாரச் சல்லடைகள்,
சாத்தானின்,
சரித்திர ஏட்டில் சயனிக்கும்
சமுதாய ஒட்டுண்ணிகள்...
என்பதற்கு
எசீதின் வரலாறு
எடுத்துக் காட்டாகும்!
சத்தியமே வெல்லும்!
சத்தியமாக -
சத்தியம் ஒன்றே வெல்லும்.

-ஏறாவூர் அனலக்தர்.

## அமைச்சரவையைதவறாக வழிநடாத்தி டோக்கியோ சீமெந்துக் கம்பனியிடமிருந்துஹக்கீம் 300 மில்லியன் ரூபாவை விழுங்கிவிட்டார்!

ஆதாரத்துடன் "இரிதா லக்மின" பத்திரிகையில் குற்றச்சாட்டு

கடந்த 02 மார்ச் 2003 ஆம் திகதி "லக்பின" ஞாயிறு இதழில் இக்குற்றச் சாட்டுடன் கூடிய கட்டுரை முழுப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவத்தின் மீது முன்வைக்கப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டுக்கு முஸ்லிம் அரசியல் தலைமை உடனடியாகப் பதில் சொல்ல வேண்டியுள்ளது. அப்படியொன்றும் நடைபெறவில்லை எனில் இக்குற்றச்சாட்டுக்கு எதிராக முஸ்லிம் தலைமை சட்ட நடவடிக்கை எடுக்க முழு உரித்துடையது. நம்மை பற்றி ஏற்கனவே ஊடகங்களுக்கூடாக பரப்பப்பட்டு வரும் அவதூறுகளுக்கு மத்தியில் இக்குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் முஸ்லிம் தலைமை மௌனமாக இருக்க முடியாது! நமது மக்களுக்கு உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக இக்கட்டுரையின் சுருக்கிய வடிவத்தை தமிழில் பிரசுரம் செய்கிறோம்! முஸ்லிம் தலைமை உடன் பதில் சொல்ல வேண்டும்!
பிரதம ஆசிரியர்

துறைமுக கப்பற்துறை அமைச்சர், அரசாங்கத்திற்கு ஆண்டுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகைப் பணத்தை தந்திரமாக இடைநிறுத்தி, பொருளாதார கொள்கைத் திட்ட உபகுழுவின் ஊடாக அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பித்து அனுமதி பெற்று, அமைச்சரவையை தந்திரமாக வழிநடத்தி உள்ளார்.

இவ்விடயத்திற்காக டோக்கியோ சீமெந்துக் கம்பனியிடமிருந்து 300 மில்லியன் ரூபாவை கொமிசனாகப் பெற்றுள்ளார். இப்பணத்தில் 100 மில்லியன் ரூபா முகம்மது ஹுசைன் முகம்மது பாரூக் என்பவரின் பெயரில் "ஹொங்கொங் முராசி வங்கியில்" வைப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்பும் 200 மில்லியன் ரூபாவும் வேறொரு விவகாரத்தில் கிடைத்த பணமும் சேமிக்கப்பட்டுள்ளது. இது திருமலை துறைமுக ஜெட்டி அபிவிருத்தி வேலைக் கொந்தராத்தை 300 கோடிக்கு டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு பெற்றுக் கொடுத்ததன் காரணமாக கிடைத்த தொகையாகும்.

இந்த ஒப்பந்தத்தை டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு கொடுத்ததன் ஊடாக துறைமுக அதிகாரசபையும் அரசாங்கமும் வருடமொன்றுக்கு 5550 கோடி ரூபாவை இழக்கின்றன.

துறைமுக தொழிலாளர் சங்கம் இது பற்றிக் கூறும் போது, அஷ்ரஃப் இறங்கு துறை கொந்தராத்தையும் இதே அடிப்படையில் டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு கொடுக்க ரவூஃப் ஹக்கீம் முனைகின்றார் எனவும் ஹக்கீமுக்கு அரசாங்கம் நஷ்டமடைவதும் துறைமுகத் தொழிலாளர்கள் இலாபம் ஈட்டுவதும் அக்கறைக்குரியதல்ல என்றும் அவருக்குக் கிடைக்கும் கொமிஷன் பணம்தான் முக்கியமானதாக உள்ளதெனவும் தெரிவிக்கின்றது. இப்படியான அதிகுறைந்த ஒப்பந்தங்கள் டோக்கியோ சீமெந்துக் கம்பனியுடன் தொடருமானால் அரசாங்கம் பெரும் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படலாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளது.



இப்போது துறைமுகத்தில் மஹாவெலி மெரயின், சீலோன் கிரோன், எனவோர்ட்டாஸ், அம்புஜா சீமெந்துக் கம்பனிகள் நீதிவழியில் பெற்ற குத்தகை ஒப்பந்தங்களை டோக்கியோ சீமெந்துக் கம்பனிக்கு கொடுப்பதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

சென்ற பொதுஜன முன்னணிக் காலத்தில் அரசாங்கம் இவ் ஒப்பந்தத்தை பிரீமா லங்கா கம்பனியுடன் செய்திருந்தது. இன்று பிரீமா லங்கா கம்பனியின் குத்தகை ஒப்பந்தத்திற்கும், டோக்கியோ சீமெந்து கம்பனியுடனான ஒப்பந்தத்திற்குமிடையில் பல கோடி ரூபா வித்தியாசமுள்ளது.

இம்மோசடிக்கு உதவிய அப்சால் மரிக்கார் என்பவர் டோக்கியோ சீமெந்து கம்பனியின் உரிமையாளர் ஜெயசீலன் ஞானமின் நண்பராவார். அப்சால் மரிக்கார் சமுத்திரா சீமெந்து கம்பனிக்கு துறைமுகத்தில் இடம் பெற்றுக் கொடுத்ததினால் அப்சால் மரிக்காருக்கு சமுத்திரா சீமெந்து கம்பனியின் 20 வீதப் பங்கு கொமிஷனாக ஜெயசீலன் ஞானத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

அப்சால் மரைக்கார் என்பவர் பொதுஜன முன்னணிக்காலத்தில் பிரீமா கொம்பனியுடன் செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தை நீடிப்பதற்காக 300 மில்லியன் ரூபாவைக் கேட்டுள்ளார். பிரீமா கொம்பனியுடனான இவ் ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு பிரீமா கம்பனியின் தவிசாளர் திரு. லிம் அவர்கள் அப்சால் மரைக்காரை சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று இது பற்றி பேசியுள்ளார். பீரிமா கம்பனியுடனான பேரம் சரிவரவில்லை. அதன் பின்னேதான் டோக்கியோ சீமெந்து கம்பனிக்கு இவ்வளவு தரகுப் பணத்துடன் குத்தகை ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.
தமிழில் எம்.இஸட். துவான்

## பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் கல்விக்கு காணி சுவீகரிப்பு என்ற பெயரில் மரண அடி!

கொழும்பு - பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடத் தொகுதிகளற்ற 55 போச் காணியை வீதி அபிவிருத்தி விஸ்தரிப்புக்கென, வீதி அபிவிருத்திச் சபை சுவீகரித்துள்ளது.

இக்கல்லூரியின் காலைக் கூட்டம், உடற் பயிற்சி போன்றவற்றிற்கு மைதானமாகவும் இக்காணி பாவிக்கப்பட்டு வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாற்றுக் காணி வழங்காத நிலையில் இக்காணி சுவீகரிப்பினை மேற்கொண்டிருப்பதினால் இக்கல்லூரியில் கல்வி கற்கும் 3500 மாணவிகளும் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இதுவிடயத்தில் நமது அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர் எனவும் பாடசாலை அபிவிருத்திசபை தனது விசனத்தைத் தெரிவித்துள்ளது.

பாடசாலைக்குப் போதிய காணிகள் இல்லாத போது அதனை அண்மிய காணிகளை அரசாங்கம் சுவீகரித்து கொடுத்துதவந்த முறைமைக்கு மாறாக கொழும்பு மாநகர வீதி விஸ்தரிப்பு என்ற பெயரில், இந்த அபகரிப்பு நடைபெற்றிருப்பது முஸ்லிம் மகளிர் கல்லூரி என்பதினாலா என்ற கேள்வியும் பெற்றோர்களிடமும், முஸ்லிம்களிடமும் காணப்படுகின்றன.

-ஏ.எல்.சலீம் , பம்பலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் : அஷ்ரஃப் எனும் அரசியல் விவேகி
நூலாசிரியர் : எம்.எல்.ஏ.காதர்
உபவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளியீடு : இலங்கை அரசியல் ஆய்வுக்கழகம்,
பேராதனை.
பக்கம் : 212
விலை : 250/=

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எம்.எல்.ஏ.காதர் அவர்களின் இரண்டாவது நூல் "அஷ்ரஃப் எனும் அரசியல் விவேகி" எனும் தலைப்பில் அண்மையில் வெளிவந்திருக்கிறது. மர்ஹூம் அஷ்ரஃபின் அரசியல் வாழ்வின் ஒருபகுதியினையும், அவரது தலைமைத்துவ பங்கினையும் இந்நூல் பேசுகின்றதென்பதை நூல் கொண்டிருக்கும் எட்டு அத்தியாயங்களின் தலைப்புக்கள் வெளிச்சமாக்கி வைக்கின்றன.

(1) இலங்கை அரசியலில் முஸ்லிம்கள், (2) அஷ்ரஃப்பின் அரசியல் எழுச்சி, (3) அஷ்ரஃப்பின் அரசியல் தளம், (4) அஷ்ரஃப்பும் கட்சித் தலைமைத்துவமும், (5) அஷ்ரஃப்பும் பாராளுமன்றமும், (6) அஷ்ரஃப்பும் தேர்தல் நடவடிக்கைகளும், (7) அஷ்ரஃப்பும் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையும், (8) தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் அஷ்ரஃப்பும் என்பன அவ் அத்தியாயங்களாகும்.

மேற்படி ஒவ்வொரு தலைப்புகளும் மர்ஹூம் அஷ்ரஃப்பின் அரசியல் வாழ்வை பிரதிபலிப்பனவாக அமைந்திருக்கின்றன. இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரும் மர்ஹூம் அஷ்ரஃப்பின் அரசியல் விவேகத்தினை துல்லியமாக மதிப்பீட்டுக் கொள்வதற்கு இந்நூல் துணை புரிவதை ஒப்புக் கொள்வர்.

இந்நூல் பல நிறைவான தகவல்களைப் பெறக்கூடியதாகவும், மர்ஹூம் அஷ்ரஃப்பின் அரசியல் வாழ்வு இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் எத்தகைய தடத்தையும், இடத்தையும் பெறத்தக்கது என்பதையும் புடம் போட்டுக் காட்டக்கூடியதாக அமைந்திருக்கின்றது. அதே நேரம் வரலாற்று ரீதியான தகவல்களில் சில பிறழ்வுகள் காணப்படுகின்றன. அவற்றினை நிவர்த்திக்கும் வகையில் சுட்டிக்காட்டுவது தவிர்க்க இயலாத ஒன்றாகவே உள்ளது.

பக்கம் 29 இல் இடம்பெறும் "கிழக்கிலங்கை அரசியலில் காரியப்பரின் குடும்பம் 1936 - 1994" எனும் தலைப்பிலான அட்டவணையில் காணப்படும் எம்.சீ.அஹமத்தின் அரசியல் வாழ்வு 1977இல் முற்றுப் பெறுவதாகக் காட்டப்படுவது 1989இல் என்று வந்திருக்க வேண்டும். மயோன் முஸ்தபாவின் அரசியல் பிரவேசம் 1989 எனக் காட்டப்பட்டிருப்பது 1994 என வந்திருக்க வேண்டும். பக்கம் 171-177 இல் இடம்பெறும் அஷ்ரஃப் அவர்களின் முக்கிய வாழ்க்கைக் குறிப்புக்கள் (1948-2000)" எனும் தலைப்பில் தரப்பட்டிருக்கும் தகவல்களில் பின்வரும் திருத்தங்கள் தேவையாகின்றது.

1976 இல் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் செயலாளராக அஷ்ரஃப் இருந்தார் எனச் சுட்டப்படுவது சட்டத்தரணி ஏ.எம்.சம்சுத்தீன் என்றிருக்க வேண்டும். 2000 இல் கல்முனைக்குடிக்கு பிரதேச செயலகம் பெற்றுக் கொடுத்தல் என்றிருப்பது சாய்ந்தமருதுக்கு என்றிருக்க வேண்டும்.

மர்ஹூம் அஷ்ரஃப்புடன் சம்பந்தப்படாத, விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் (எம்.ஐ.எம்.முகைய்தீன்) இடையில் எழுதப்பட்ட ஒப்பந்த விபரம் அஷ்ரஃப்பின் வாழ்க்கை வரலாற்றுக்குள் இடம் பெறாது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்நூல் 2002.06.08 இல் வெளிவந்திருப்பதினால் பக்கம் 13-15இல் இடம்பெற்றிருக்கும் "அஷ்ரஃப் அவர்களின் தலைமைத்துவத்தை தவிர்க்க முடியாததாக்கிய கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் 1984-1992" வரையான விடயம் குறைந்த பட்சம் 1984 இலிருந்து 2001 வரை சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

எப்படி இருப்பினும், முஸ்லிம்களுள் தனியான அரசியல் கட்சியின் தாகம் 1956, 1976களில் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அதனை நடைமுறையில் வெற்றி கொண்டு, அதன் அவசியத்தை வலியுறுத்திய வரலாற்றுத் தடம் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப்பிற்குத்தான் உண்டென்பதை இந்நூல் மிகவும் தெளிவாக்கி வைக்கின்றது.

பொதுவாக அஷ்ரஃப்பின் அரசியல் வரலாற்றை எடுத்துக் காட்டும் நோக்குடன் இந்நூல் ஆக்கப்பட்டிருப்பினும் இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றின் போக்குகளையும் ஓரளவு பேசி இருப்பதும் இந்நூலின் இன்னொரு பலமாகும். குறைகளை விட நிறைகள் மிகைத்து காணப்படும் இந் நூல் நூலாசிரியரையும் அடையாளப்படுத்தி வைக்கும் என்று துணிந்து கூறலாம்.

*-அபூபாத்திமா பர்வீன்*

**நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்**

*-பிரதம ஆசிரியர்*

# நெஸ்லே பால் கம்பெனி முன்னாள் தொழிலாளர் உண்மையை உடைத்தார்!

பிலிப்பைன்ஸில் உள்ள மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு பிறந்தவுடனேயே தாய்ப்பால் ஊட்டுமாறு பிரச்சாரம் மேற்கொண்ட சில காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கு 94சதவீதம் குறைந்துவிட்டது. தாய்மார்கள் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விடுகின்ற காரணத்தால் ஒவ்வொரு வருடமும் உலகம் முழுவதிலும் 10 மில்லியன் குழந்தைகள் சத்துக் குறைவினால் அவதிப்பட்டு வருகின்றனர்.

தாய்ப்பால் கொடுக்காத காரணத்தால் உலகம் முழுவதிலும் ஒவ்வொரு 30 வினாடியும் ஒரு குழந்தை இறக்கிறது. தாய்மார்கள் குழந்தைக்கு மீண்டும் தாய்ப்பால் கொடுக்கத் தொடங்கினால் ஒவ்வொரு வருடமும் 1.5 மில்லியன் உயிர்கள் காப்பாற்றப்படலாம் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

இருப்பினும் பாகிஸ்தானில் ஒன்றும் அறியாத ஒரு சிசுவின் உயிர் பறிபோன பிறகுதான் நெஸ்லே ஊழியர் ஒருவருக்கு தனது முதலாளியின் நிறுவனம் தாய்ப்பாலுக்கு மாற்றுப் பால் கொடுத்து, சிசு உணவில் செய்து வரும் ஏமாற்று நடவடிக்கையை, உலக அளவில் வெளிக் கொண்டு வந்தார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஷேட் அமார் ராசாவின் வேலை நெஸ்லே கம்பெனியின் குழந்தை பால் மாவுகளை மருத்துவமனைகளில் விளம்பரப்படுத்துவதாகும். அன்று நெஸ்லே பாலை விளம்பரப்படுத்துவதற்காக தனக்குத் தெரிந்த ஒரு மருத்துவரை மருத்துவமனையில் சென்று சந்தித்தார். ஆனால் அந்த மருத்துவரோ அமாரின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. நெஸ்லே கம்பெனி கொடுக்கும் பரிசுப் பொருட்களையும் நிராகரித்துவிட்டார். அமார் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே மருத்துவருக்கு வார்டுக்கு வருமாறு அழைப்பு வந்தது. மருத்துவர் வார்டுக்குச் சென்று திரும்பும் வரை அமார் மருத்துவரின் அலுவலகத்திலேயே காத்திருந்தார். மருத்துவர் வார்டில் பார்க்கப் போன குழந்தை இறந்து விட்டது. எதேச்சையாக அமார் ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

மருத்துவர் மிகவும் வெளிப்படையாகவே பதில் கூறினார். "உங்களைப் போன்றவர்களால்தான் இந்தக் குழந்தைக்குப் பால் மாவு கொடுக்குமாறு மருத்துவர் கூறியிருக்கிறார். அதேபோன்று மாவுப்பால் கொடுக்கப்பட்ட குழந்தை 2 மாதங்களுக்குப் பிறகு வயிற்றுப் போக்கினால் மெலிந்து போனது. 3 மாதத்திற்குப் பிறகு அதனுடைய உயிரே போய்விட்டது. இதற்கு உங்களைப் போன்றவர்கள் விளம்பரம் செய்யும் மாவுப்பாலே காரணமாகும்" என்று கூறினார்.

அமார் மருத்துவமனையை விட்டு வெளியே போகும் பொழுது இறந்து போன குழந்தையின் பெற்றோர் துயரம் தாளாது கதறி அழுவதைப் பார்த்தார், அவருடைய மன சாட்சி அவரை உறுத்தியது. அன்று முதல் அமார் புது மனிதனாகத் திரும்பினார்.

**கனவு பலித்ததா?**

புது மனிதனாகத் திரும்பிய அமார் சும்மா இருந்துவிடவில்லை. நெஸ்லே இவ்வளவு நாட்களாக மேற்கொண்டு வந்த வியாபார உத்திகளைப் பொதுமக்களுக்கு அம்பலப்படுத்தினார்.

மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகள் நெஸ்லே மாவுப் பாலை உபயோகிக்க வேண்டும் என்றால் முதலில் அந்த மருத்துவமனையின் மருத்துவரை இணங்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அமார் மருத்துவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்.

அதோடு மருத்துவர்களுக்கான உல்லாச சுற்றுப் பயண திட்டங்களையும் மேற்கொண்டார். மருத்துவர்களுக்கு நெஸ்லே பொருட்கள், வெளிநாட்டுக்குச் சென்று வர விமானச் சீட்டுக்கள் மற்றும் அவர்களுடைய மருத்துவமனைகளுக்குக் குளிர்சாதன வசதியையும் செய்து கொடுத்தார் அமார். தாதிகளுக்கோ விலை உயர்ந்த உதட்டுச் சாயங்களும் வாசனைத் திரவியங்களும் வழங்கப்பட்டன.



**நீங்களும் படிக்கலாம் சில குறிப்புகள்...**

இவ்வாறெல்லாம் மருத்துவர்களை இணங்க வைத்து நெஸ்லே பொருட்களை மருத்துவர்கள் தங்கள் மருத்துவ மனையில் பிறக்கும் குழந்தைகளுக்குச் சிபாரிசு செய்யும் வேலையை அமார் மிகவும் வெற்றிகரமாகவே செய்து வந்தார். இதற்கென இவருக்கு வழக்கமாக கிடைக்கும் மாத சம்பளத்தை விட கூடுதலான போனஸ்களை நெஸ்லே நிறுவனம் கொடுத்து வந்தது.

தான் சேவையில் புகுந்த 3 வருட கால கட்டத்தில் அமார் நிறைய மருத்துவமனைகளை, நெஸ்லே மாவுப் பொருட்களை வாங்கும் மருத்துவமனைகளாக மாற்றி அமைத்திருந்தார். ஆனால், இது மேலே குறிப்பிடப்பட்ட குழந்தை இறப்புச் சம்பவம் வரைக்கும்தான்.

அதற்குப் பிறகு அமார் நெஸ்லேவுடனான தன்னுடைய வேலையை ராஜினாமா செய்தார். தான் வேலைக்கு உபயோகித்த மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொடுத்து விட்டார். ஆனால், தன்னுடைய வேலை சம்பந்தமான தாஸ்தாவேஜுக்களை மட்டும் பத்திரமாக வைத்துக் கொண்டார். அவ்வேளையில் தாய்ப்பாலுக்குப் பதிலாக நெஸ்லே பாலை குடித்து இன்னும் நிறைய குழந்தைகள் இறப்பதைத் தடுப்பதே தன்னுடைய புதிய வேலை என்பதை அமார் உணர்ந்தார்.

**சட்ட நடவடிக்கை**

வேலையை ராஜினாமா செய்த 6 மாதங்களுக்குப் பிறகு 12.11.1997 இல் அமார், நெஸ்லே நிறுவனத்திற்கு சட்ட நோட்டீஸ் ஒன்றை அனுப்பினார். அதனோடு நெஸ்லே நிறுவனம் தன்னுடைய நெஸ்லே பால் பொருட்களை விளம்பரம் செய்ய மேற்கொள்ளும் ஏமாற்று வேலைகள் தொடர்பாக 80 பக்க அத்தாட்சிகளையும் அனுப்பிவைத்தார்.

அவருடைய நோட்டீஸ், நெஸ்லே நிறுவனம் பாகிஸ்தானில் மேற்கொண்டு வரும் குழந்தை பால்மாவு உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்றும், நோட்டீஸ் கிடைத்த 15 நாட்களுக்குள் பாகிஸ்தானின் சந்தையிலிருந்து நெஸ்லே உணவுப் பொருட்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதோடு நெஸ்லே பொருட்கள் விளம்பரப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை வேலையை விட்டு நீக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இப்பிரச்சினை தொடர்பாக அமார் உலக சுகாதார நிறுவனம், அகில உலக குழந்தை உணவு நடவடிக்கை இணைப்புக்குழு, மற்றும் இஸ்லாமாபாத் சுகாதார சங்கத்திற்கும் கடிதம் எழுதினார்.

உலக சுகாதார நிறுவனம், அவர்களுக்கு அறிவுரை கூறும் அதிகாரம் மட்டும்தான் தங்களுக்கு உள்ளது என்றும், நெஸ்லே நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு மட்டுமே உண்டு என்றும் அமாரின் கடிதத்திற்கு பதில் அளித்திருந்தது.

ஆனால், அகில உலக குழந்தை உணவு நடவடிக்கை இணைப்புக் குழு சும்மா இருக்கவில்லை. இவர்கள் பாகிஸ்தானில் உள்ள 33 நகரங்களில் தங்களுடைய சொந்த ஆய்வை மேற்கொண்டனர். ஆய்விலிருந்து அமாரின் குற்றச்சாட்டு உண்மை என்று தெரிய வந்தது. அவர்களுடைய ஆய்வையும் அமாரின் அறிக்கையையும் இணைத்து டிசம்பர் 1999 இல் "எப்படி நெஸ்லே குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பணயம் வைத்து பணம் கறக்கிறது" என்று கட்டுரை பிரசுரம் செய்யப்பட்டது. இது தொடர்பாக ஜெர்மனியப் பத்திரிகைகளும் அமாரைப் பேட்டி கண்டன.

உண்மை வெளியான பிறகு அமாருக்கு நெஸ்லே முதலாளிகள் லஞ்சம் கொடுத்து பிரச்சினையை மூடப் பார்த்தனர். இது சாத்தியப்படாது என்று தெரிந்ததும், அமாரின் குடும்பத்தாருக்கு மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டது. அவருடைய வீட்டைத் துப்பாக்கியால் சுட்டனர். ஆனால், நெஸ்லே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அறிக்கை விடுத்தது.

ஆனால் நெஸ்லேதான் பெரிய கம்பெனி ஆயிற்றே. தன்னுடைய சக்தியைப் பயன்படுத்தி அமாரின் அறிக்கைகளைப் பொய்யாக்கும் பொருட்டு அடுத்த மேயில் தன்னுடைய சொந்த அறிக்கையைத் தயார் செய்து வெளியிட்டது.

நெஸ்லே உலகத்திலேயே மிகப் பெரிய உணவு நிறுவனமாகும். உலகிலேயே சந்தைக்கு வரும் குழந்தைகள் உணவுகளில் 40 சதவீதம் நெஸ்லேவுடையதுதான். பாகிஸ்தானில் ஒவ்வொரு வருடமும் 10 வீதமான குழந்தைகள் ஒரு வயது ஆவதற்குள்ளாகவே இறந்துவிடுகின்றனர். பாகிஸ்தான் குழந்தை இறப்புக்கு மாவுப் பாலினால் ஏற்படும் வயிற்றுப் போக்கு மற்றும் சுவாசக் குழாய் தொற்றுநோயே முக்கிய காரணம் என்று குழந்தை நல நிபுணர்கள் கூறுகின்றனர்.

# ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது! கட்சியின் தீர்மானங்கள் வெறும் அறிக்கைகள்தானா?

**மு**ஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்தி அவர்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் இலட்சியத்துடன் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று இருவேறு அணிகளாகப் பிரிந்து நிற்பது நாமறிந்ததே.

பிரிந்த எஸ். சுபைர்தீன் அணியினர் அதிரடியாக கடந்த 25.12.2002 இல் அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பதினெட்டாவது பேராளர் மாநாட்டினை நடத்தியதும், அதனைத் தொடர்ந்து ஹக்கீம் அணியினர் கடந்த 12.01.2003இல் கொழும்பு முகத்துவாரம் மஹாபொல பயிற்சி நிறுவனக் கேட்போர் கூடத்தில் பதினெட்டாவது பேராளர் மாநாட்டினை நடத்தியதும் பகிரங்கமானது.

ஏட்டிக்குப் போட்டியாக செயற்படும் பாங்கில் இவ்விரு அணியினர்களும் தம்மைத் தயார்படுத்தி விட்டதை இது தெளிவாக எடுத்துக் காட்டினாலும் இவ்விரு அணியினர்களும் நடாத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பற்றிய ஓர் அரசியல் அலசல் இது....!

எஸ். சுபைர்தீன் அணியினரின் மாநாட்டு தீர்மானங்கள் பின்வருவனவாகும்.

+ வடக்கு - கிழக்கில் வாழும் சமூகங்கள் அனைத்திற்கும் சமவுரிமை வழங்கும் பொருட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஆதரவு வழங்கல்.

+ அரசு - புலிகள் பேச்சுவார்த்தையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில், முஸ்லிம் புத்திஜீவிகள் குழுவும் பங்குபற்றல் வேண்டும்.

+ இணைந்த வடக்கு - கிழக்கில் தமிழர்களுக்கு வழங்கப்படுவது போன்ற சுயாட்சி அமைப்பு முஸ்லிம்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

+ வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதுடன், அவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதமும் நட்டஈடும் வழங்கப்படல் வேண்டும். இதற்கு அரசு - புலிகள் ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

+ ஐம்பது வருட காலமாக போராடும் பாலஸ்தீன மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுடன், ஈராக் மீதான தாக்குதல்களைக் கண்டித்தல் என்பன அவர்களின் மாநாட்டுத் தீர்மானங்களாக உள்ளன.

அமைச்சர் ஹக்கீம் அணியினர் நடத்திய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

**எம்.எம்.எம். மிஹ்வார்.**

பின்வருவனவாகும்.

+ அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களை சமபங்காளராக நடத்த வேண்டுமெனவும், முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தனியான குழு அப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் இப்பேராளர் மாநாடு அரசைக் கோருகின்றது.

+ தென்கிழக்கை அடிப்படையாகக் கொண்டு வடகிழக்கின் ஏனைய பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கிய தனியான அதிகார அலகு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கட்சியின் தொடர்ச்சியான நிலைப்பாட்டை மீண்டுமொருமுறை வலியுறுத்துவதோடு, இத்தனியான அலகை இறுதித் தீர்வின்போது முஸ்லிம்களுக்கு வழங்குவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் இம்மாநாடு கோருகின்றது.

+ நிலையான சமாதானம் நிலவ முஸ்லிம்களின் அபிலாசைகள் இறுதித் தீர்வில் முழுமையாக உள்ளடக்கப்படுவதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பேராளர் மாநாடு சர்வதேச சமூகத்தைக் கோருகின்றது.

+ வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் ஆரம்பிக்க முன்னர் அவர்களது பாதுகாப்பிற்கான உறுதியான உத்தரவாதத்தை இலங்கை அரசும், எல்.ரி.ரி.ஈ.யும் சர்வதேச சமூகமும் இணைந்து வழங்க வேண்டுமென இப்பேராளர் மாநாடு கோருகின்றது.

+ இப்பேராளர் மாநாடு வாழைச்சேனை, மூதூர், பேருவளை, மாளிகாவத்தை, மாவனல்லை, காலி, புத்தளம் போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்குரிய இழப்பீடு வழங்குவதைத் துரிதப்படுத்த வேண்டுமெனவும், இவ்வாறான பாதிப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் எனவும் கோருகின்றது.

+ ஈராக்கில் பேரழிவு ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை களைய வேண்டுமென்ற போர்வையில் ஈராக்கை இராணுவ ரீதியாக நசுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையும் கைவிட வேண்டுமென்று இம்மாநாடு கோருவதோடு, பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்ற மிலேச்சத்தனமான இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவுவதை சகல சக்திகளும் நிறுத்த வேண்டுமெனக் கோருகின்றது.

+ வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்குரிய இழப்பீடுகள் அவர்களது மீள்குடியேற்றத்திற்கு முன் வழங்கப்பட வேண்டுமென இம்மாநாடு அரசைக் கோருகின்றது. எப்போது ஹக்கீம் அணியினரின் மசாநாட்டுத் தீர்மானமாக உள்ளது.

இவ்விரு மாநாட்டுத் தீர்மானங்களை ஒப்பு நோக்கும் போது முன்னெடுக்க முன்மொழியப்பட்டிருக்கும் தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு பிரயோசனப்படக் கூடியவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இது மட்டுமன்றி, இவற்றிற்கு முன்னரும், இதனை விட அரசியல் உறுதி நிறைந்த தீர்மானங்களை எடுப்பதிலும் அதனை பிரகடனப்படுத்துவதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் பின் நிற்பதில்லை என்பது அதன் வரலாறாகும். வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதன் மூலமோ, பிரகடனங்களை முன்மொழிவதனால் மட்டும் எந்தவிதமான முன்னேற்றங்களையும் நமது முஸ்லிம் சமூகம் அடைந்து விடப் போவதில்லை. மாறாக "ஏட்டுச் சுரக்காய்" கறிக்கு உதவாது என்பதில் வேறு அபிப்பிராயம் இல்லை.

கட்சியின் பேராளர் மநாட்டில் இரு அணிகளாலும் நிறைவேற்றப்பட்ட பல்வேறு அம்சங்கள் சமகாலத்திலும் நிறைவேற்றப்படாது இழுத்தடிக்கப்படும் போது, தீர்மானம் நிறைவேற்றியவர்கள் இதுவரை மௌனமாக இருப்பதே மாநாட்டுத் தீர்மானங்களை. அவர்களே காலில் போட்டு மிதிப்பதாக அமைகிறது.

உண்மையில் நமக்கு இன்று தேவையாக இருப்பது நமது சமூகத்தின் உரிமைகளை நிலைப்படுத்துவதிலும், சுயநிர்ணய உரிமையை பாதுகாப்பதிலும் முழு மூச்சாகத் தொழிற்படுகின்ற இயக்கத்தையே தவிர வெறும் மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றும் மாநாடுகள், தலைமைகள் அல்ல.

நமக்கு தேவையான செயற்திட்டங்களை சரியாக வகுத்து அதனை நடைமுறைக்கு கொண்டு வருவதில் காணப்படும் தடைகளை அகற்றி, செயல் வடிவம் பெறுவதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறையில் கொண்டு வரும் துணிவும், அதற்காகப் போராடும் தன்மையும் இன்றைய அவசரத் தேவையாக உள்ளது.

இதனையே நமது மக்களும் வேண்டி நிற்கின்றனர். இவ்வாறான ஆரோக்கிய மிக்க செயற்திட்டங்களில் மும்முரமாக இறங்குவதைப் பார்க்கிலும் இதுவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்து வந்த "கோஷ முன்னெடுப்பு" அரசியலுக்குள் முஸ்லிம் சமூகத்தை கட்டி வைத்து தமது அரசியல் லாபங்களை நிறைவு செய்து கொள்ளும் பாங்கே இன்னும் காணப்படுகின்றது.

நமது சமூகத்தில் "கோஷ முன்னெடுப்பு" அரசியல் போக்கினை எதிர்க்கவும், அதனை தூர விலத்தி விடவும் துணிகின்ற மக்களின் தெளிவான தன்மை வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தைச் சரியாக புரிந்து கொள்ள நமது தலைமைகள் எனச் சொல்லிக் கொள்வோர்கள் முன்வரவேண்டும்.

இந்நிலைப்பாட்டில் இவ்விரு அணிகளும் அக்கறை செலுத்தாது சமூகத்தை பணயம் வைத்து தம்மை உயர்த்திக் கொள்ளும் தொழிற்பாட்டில்தான் இன்னும் தொங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதையே இவ்விரு மாநாட்டுத் தீர்மானங்களும் வெளிப்படுத்துகின்றன. மக்கள் இவர்களிடம் வேண்டி நிற்பது தீர்மானங்களையல்ல, யாரும் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு மக்களுக்காக போராடுகிறோம் என சும்மா இருந்து விடமுடியாது. அப்படி கடந்த காலத்தில் சொன்னவர்களை நோக்கி இன்று மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டனர். ஆகவே, மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றிய இவ்விரு அணியினர்களும் அவற்றினை அடைந்து கொள்வதற்கு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளை அரசியல் அரங்கில் முன்வைத்து நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டுமெனவும் நமது சமூகம் கேட்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பேச்சுவார்த்தையில்

# முஸ்லிம்களின் தனித்துவத் தரப்பு!

தனித்துவத்தரப்பாக அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வோம் என நமது அரசியல்தலைமைகளால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொரு பேச்சுவார்த்தை கட்டத்தின் போதும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. மீண்டும் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையிலும் தனித்துவத் தரப்பு என்ற பேச்சு அண்மைக்காலத்தில் கேட்டு, அக்குரல் திடீரென அடங்கி அடுத்ததற்கு அடுத்த கட்டம் தனித்துவக் குழு என கேட்கத் தொடங்கியுள்ளது.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்பாடு செய்யப்பட்டு கடந்த பெப்ரவரி 22ம் திகதியுடன் ஒருவருடம் பூர்த்தியாகி விட்டது. சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுவதும் அப்பேச்சுவார்த்தையில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு, அமைதி திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சிங்கள தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம் மக்களுக்கும் இருக்கிறது.

புதிய அரசு பதவியேற்றதன் பின் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் சமத்துவமாக நடாத்தப்படவில்லை. முதலில் அரசுக்கும், புலிகளுக்குமிடையே உடன்பாடு காணப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலேயே "இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாதவர்கள் என முஸ்லிம்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். அதன் பின் முஸ்லிம் மக்களிடமிருந்து எழுந்த அரசியல் அதிருப்திகளை சமாளிப்பதற்காக வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்குமிடையில் ஒரு கூட்டறிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆனாலும் முஸ்லிம்கள் "இனப்பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாதவர்கள்" என்ற தோற்றப்பாட்டைத் தொடர்ந்தும் வலியுறுத்துவதற்கான அரசியல் நகர்வுகள் நடைபெற்றே வருகின்றன.

+ முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 16 செப்டம்பர் 2002 இல் தாய்லாந்து சட்டாஹிப் நகரில் நடைபெற்றது.

+ இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 31 ஒக்டோபர் 2002 இல தாய்லாந்து நாகொம்பதாம் நகரில் நடைபெற்றது.

+ மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 2 டிசம்பர் 2002 இல ஒஸ்லோவில் நடைபெற்றது.

+ நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை 05 ஜனவரி 2003 இல் தாய்லாந்தில் நடைபெற்றது.

+ ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 7 பெப்ரவரி 2003 இல் பேர்லினில் நடைபெற்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தை தொடங்கி 6 மாதங்கள் கடந்துவிட்டது. இக்காலப் பகுதியில் முஸ்லிம்களின் அரசியல், இனத்துவத் தனித்துவம் பேச்சுவார்த்தை அரங்கில் நிலை நாட்டப்படவில்லை.

ஒவ்வொரு கட்டத்திலும் அடுத்தகட்டம், அடுத்ததற்கு அடுத்த கட்டம் கதை தொடர்கிறது. ஒரு கட்டத்தில் நான் நினைக்கிறேன் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை என்று, பேச்சுவார்த்தைக்கு புறப்படுவதற்கு முதல் இரவு ரவூ·ப் ஹக்கீம் அவர்கள் தொலைக் காட்சியில் தோன்றி "நாங்கள் இப்பேச்சுவார் த்தைக்கு தனித் தரப்பாகவே செல்கிறோம்" என்று சொன்னார். நமது மக்களுக்கு மட்டில்லா மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியின் மீது அடுத்த அரைமணி நேரத்தின் பின் மண் அள்ளி வீசப்பட்டது பிரதம மந்திரியின் செயலக மறுப்பு அறிக்கையின் ஊடாக. ஹக்கீம் செல்வது தனித்தரப்பு அல்ல அரசாங்கத் தரப்பாகவே என்று மறுத்துரைத்தது அச்செய்தி! ஹக்கீமும் அவரது குழுவினரும் அரசாங்கத் தரப்பிலேயே கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் பேச்சுவார்த்தை அரங்கில் முஸ்லிம்களின் அரசியல் தனித்துவம் மறுக்கப்பட்டு வருவதானது, நமது மக்களின் அரசியல் உணர்வுகளையும் அரசியல் நிலைப்பாட்டினையும் கொச்சைப்படுத்தி மறுத்து நிற்பதையே காட்டுகிறது.

இப்போது 6ம் கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 18ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை டோக்கியோவில் நடைபெறவுள்ளது. இவ் ஆறாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு ஒரு தனிக்குழுவாக போவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏழாம் கட்டப்பேச்சு வார்த்தையில் தனிக்குழுவாக போவதற்கு ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் இணங்கியிருப்பதாக சொல்லப்படுகிறது. இவ்வாக்குறுதி நமது பாராளுமன்ற அரசியல் தலைமைகளினால் மீண்டுமொரு முறை நமது மக்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது!

7ம் கட்ட பேச்சுவார்த்தை வரை நாம் பொறுத்திருந்து பார்போமா இவர்களின் வீரப் பிரதாபங்களை? 15 வருடங்களை இவர்களுக்கு வழங்கிய நாம், இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் வரை நடைபெறுவதை அவதானித்து காத்து இருப்போம்!




பையூஸ் அஹமட்

# கைத்தொ[ல்]லை பேசிகள்




இன்று நம் நாட்டில் நடப்பது, கார் ஓட்டுவது, பொருட்கள் வாங்குவது, சாப்பிடுவது, வேலை செய்வது போன்ற அனைத்தையும் ஒரு கைத்தொலைபேசியைத் தங்கள் செவியில் அணைத்தவாறு தான் பலர் செய்து கொண்டிருக்கின்றனர்.

இன்றைய காலத்தில் பள்ளி மாணவர்கள் கூட கைத்தொலைபேசியைப் பயன்படுத்துகின்றார்கள். விளம்பரங்களும், பிள்ளைகள் இந்த நவீன காலத்து கருவியைப் பயன்படுத்துவதற்கு ஆாவமூட்டுகின்றன.

ஆசிய பசிபிக் கைத்தொலைபேசி சந்தையில் சீனா மற்றும் ஜப்பான், மலேசியா, அடுத்து இலங்கை என விரைவாக இடம்பிடித்து வருகின்றன.

இதனால் இத்தொழிற்துறை இளம்தலைமுறையினரை கவருவதற்கு மிகவும் அரும்பாடுபட்டு வருகின்றது. விளம்பரங்கள் இளைஞர்களை, பேஷன் விரும்பிகளை, குறைந்த வருமானம் பெறுபவர்களை குறிவைக்கிறது. உயரிய தொழில்நுட்பங்களின் அம்சங்களான இணையத் தொடர்பு, விளையாட்டு, உரையாடும் வசதி போன்றவைகளை காட்டிப் பயனீட்டாளர்களை இழுக்கப்பார்க்கின்றது.

ஆனால், பயனீட்டாளர்கள் நீண்டதொரு நோய்ப்பட்டியலை எதிர்நோக்குகின்றார்கள். கைத்தொலைபேசி அவசர வேளையில் உயிரை காக்கிறது என்று கம்பனிகள் பெருமையடித்துக் கொண்டாலும், அது ஒருவரின் ஆயுளைக் குறைக்கவல்லது.

தலைக்கு அருகே கைத்தொலைபேசி வைக்கப்பட்டு பேசும் பொழுது இந்தக் கருவி ஒவ்வொருவரின் உடல் நிலையைத் தாக்கக் கூடிய கதிர்வீச்சைக் கொண்டிருக்கிறது என்பதை அநேக கைத்தொலைபேசி பயனீட்டாளர்கள் தெரிந்து வைத்திருக்கவில்லை.

நீண்ட காலத்துக்கு கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதால் மறதி, பார்க்கின்சன் நோய், நோய் எதிர்ப்பாற்றல் குறைவு, சிறுநீரகக் கோளாறு, பிறப்புக் கோளாறு, புற்றுநோய் இன்னும் பல கோளாறுகளை ஏற்படுத்திவிடும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கைத்தொலைபேசியின் கதிர்வீச்சு, பெரியவர்களைவிட குழந்தைகளின் மண்டை ஓடு மற்றும் மூளையை ஊடுருவி செல்வதற்கு அதிக வாய்புக்கள் இருக்கின்றன.

கைத்தொலைபேசியினால் ஏற்படும் நோய்கள் பற்றி நாளுக்கு நாள் வலுவான சான்றுகளை அறிவியல் உலகம் கண்டுபிடித்து வருகின்றது.

உலக சுகாதார நிறுவனமும் கூட இப்பிரச்சினையைக் கடுமையாகக் கருதுகிறது. 2005 ஆம் ஆண்டுக்குள் உலகம் முழுவதிலும் 1.6 கைத்தொலைபேசி பயனீட்டாளர்கள் இருப்பார்கள் என்பதால், தலை மற்றும் கழுத்து புற்றுநோயுடன் இதற்கு இருக்கும் தொடர்பு பற்றி உலக சுகாதார நிறுவனம் குறைந்தது 10 நாடுகளில் சோதனை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

ஆனால், துரதிஷ்டவசமாக பொது மக்களுக்கு இந்த உண்மை தெரியவில்லை. உலக கதிர்வீச்சு நிபுணர்களில் பலர் இத்தொழிற்துறை, ஆய்வுகளின் கண்டுபிடிப்புகளை திட்டமிட்டு வியாபார நோக்கில் மூடி மறைக்கப்பார்க்கிறது எனக் கூறியுள்ளனர்.

# தேர்தல்

**(சீனச் சிறுகதை)**
**குவின் ஜாவோயாங்**

சீனப் புரட்சியின் ஐம்பதாவது ஆண்டு. புரட்சிக்குப் பின்னால் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் என்ற அரசமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தலை விளக்குகிறது இந்தக் கதை.

நமது ஜனநாயகத்தின் யோக்கியதையை நாம் புதிதாக அம்பலப்படுத்தத் தேவையில்லை.

சீனத்திலோ, மக்களுக்குத் தொண்டாற்றி, மக்களின் மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெறாத யாரும் வேட்பாளராகக் கூடப் போட்டியிட முடியாது என்பதையும், வேட்பாளரின் குறை நிறைகள் மக்கள் மத்தியில் அலசி ஆராயப்படும் என்பதையும் இச்சிறுகதை தெளிவுபடுத்துகிறது.

அனைத்துக்கும் மேலாக, குடும்ப, சமூக, அரசியல் அடிமைத்தனங்களை எதிர்க்கும் போராட்டம், உழைக்கும் மக்கள் மத்தியில் எப் படி நடத்தப்பட்டிருக்கிறது என்பதை அலங்காரங்கள் இன்றி மிகச் சாதாரணமாக விவரிக்கிறது இக்கதை.

\+ + + +

இதுவே சீனத்தின் முதல் தேர்தல், நாடு முழுக்க தேர்தல், யாரைத் தேர்ந்தெடுப்பது? அதற்காகத்தான் இன்றைய கிராமக் கூட்டம் ஒவ்வொரு பிராந்தியத்திலும் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதிகள் எவ்வளவு என்று தீர்மானித்திருந்தார்கள். அவர்களைப் பிராந்தியத்திலிருந்து தேர்ந்தெடுத்து மக்கள் பேராயத்துக்கு (மக்கள் காங்கிரஸ்) அனுப்ப வேண்டும்.

சியாங் பிராந்தியத்திலிருந்து மூன்று பேர் ஏற்கனவே வேட்பாளர்களாக நிற்கவைக்க முடிவு செய்யப்பட்டு விட்டது. முதல் நபர், குவின் ஷீ ஜூ. இவர் கிராமத்தின் கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளராககடந்த ஆறு வருசமாக இருந்து வருகிறார்; இரண்டாமவர், வாங்ஷுன் டே - பழைய பாரம்பரிய மருத்துவர், வட்டாரத்திலேயே மாதிரி மருத்துவ ஊழியர் என்று பெயரெடுத்தவர்; மூன்றாமவர், குவின் ஜியா குய் - இளைஞர், இருபதே வயது, பரஸ்பர உதவிக்குழுவின் தலைவர். ஆனால் பெண்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு வேட்பாளரை நிற்க வைக்க முடிவு செய்திருக்கிறார்கள் - வேறு யாருமல்ல; குவின்ஜியாகுய்யின் மனைவி, ஜாங் குயா ·பெங்.

கூட்டத்தில் லி குய்ஹுவா என்ற இளம் பெண் பேசுவதற்கு அனுமதி கேட்டாள். "ஒரு மாதத்துக்கு முன்னால் வட்டார மாதிரி தொழிலாளர் மாநாட்டுக்குப் பார்வையாளராகச் சென்றேன். அங்கே குவின் ஜியா குய்யின் அறிக்கையைக் கேட்டேன். அவர் பேசும் போது "கள வேலைகளுக்குச் செல்வதற்காகப் பெண்களை அழைத்து ஏற்க வைத்தேன்" என்றார். குழுவின் எல்லாச் சாதனைக்கும் தானே பொறுப்பு என்று பேசினார். சியாங்கில் ஒருமுறை, மாநாட்டில் ஒருமுறை, ஆக இரண்டு முறையும் அவர் பேசிய பேச்சு பச்சையான சுயதம்பட்டம். இங்கு திரும்பி வந்த பிறகு பெண்கள் கழகத் தலைவரோடு இதுபற்றிப் பேசினேன். அவர் மூலம் கிராமத்து தலைவர்கள் குவின்ஜியா குய்யிடம் இதுபற்றி விமர்சித்ததாகக் கேள்விப்பட்டேன்"

லி தொடர்ந்தாள் : "அப்போது தான் தவறு செய்துவிட்டதாக ஒப்புக் கொண்டார். ஆனால் வட்டாரக் கூட்டத்தில் மறுபடி தன்னைப் பற்றி மட்டுமே விளம்பரம் செய்து கொண்டார். இன்றைக்கு இதுபற்றி இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டும். குயா·பெங் என்ன உதவிகள் செய்தாள். அவள் பங்கு என்ன என்பது பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்"

ஜியா குய்யை ஒருமுறை பார்த்துவிட்டு பின்னலைப் பின்புறம் ஒதுக்கிக் கொண்டே அமர்ந்தாள் லி. சட்டென கூட்டம் அமைதியானது. எல்லோருடைய கண்களும் ஜியா குய்யை மொய்த்தன.

அவன் இதோ இப்போது கூட எழுந்திருந்து தன் மனைவிக்கும் பங்குண்டு என்று சொல்லிவிட்டு தன் குறைபாடுகளை ஒப்புக் கொண்டால் கூடப்போதும் என்பது போல அவர்கள் பார்த்தனர். அப்படியிருந்தால் வெற்றி அவன் பக்கம்தான். ஆனால் அவன் அப்படி செய்யவில்லை.

பதவிகளை அனுபவித்து அனுபவித்துப் பழகிவிட்டான் ஜியா. கிராமத்தார் தன்னை ஆதரிப்பார்கள்; கைதட்டி ஆதரித்துத் தேர்ந்தெடுத்து விடுவார்கள் என்று அவன் எண்ணியிருந்தான். தேர்தலுக்காகவே புதிதாக நீல மேல் கோட்டு கூட அணிந்து வந்திருந்தான்.

இப்போது அவனுக்கு உடம்பெல்லாம் கசகசத்தது; ஓரக்கண்ணால் மனைவியைப் பார்த்தான். தனக்கு ஆதரவாக ஏதாவது சொல்லமாட்டாளா? "சகோதர சகோதர்களே! ஜியா குய்யை காரணமில்லாமல் பழி சொல்லாதீர்கள்... நான் முன்னேறியிருக்கிறேன் என்றால் அதற்கு அவரது உதவியே முழுக்க முழுக்கக் காரணம்" இப்படி ஏதாவது பேசமாட்டாளா?

ஆனால் அவளோ வாயே திறக்கவில்லை; தலையைத் தொங்கப் போட்டிருந்தாள்; தலைமுடி அவள் கண்களைத் திரையிட்டிருந்தது. இதுபோல ஒரு கூட்டத்தில் அவள் எப்போதும் எழுந்து நின்று பேசியதுகூட இல்லை.

"சகோதர, சகோதரிகளே!" குயின் ஜியா குய் வெறுமனே முனகினான், வாய் உலர்ந்தது. குரல் தழுதழுத்தது. லி குய் ஹூவா இப்போது சொன்னது உண்மையல்ல..."

லி உடனே எழுந்து அதை மறுத்தாள். "நீங்கள் ஒரு நல்ல பரஸ்பர உதவிக்குழு தலைவர் என்பதை முழுக்க ஒப்புக் கொள்கிறேன்; நமது கிராமத்தில் உற்பத்தியை முன்னே தள்ளியதில் உங்களுக்குப் பங்கு உண்டு. நான் மறுக்கவில்லை. உங்களை ஒரு வேட்பாளராகக் கூட அங்கீகரிக்கிறேன். ஆனால் இன்றைய கூட்டம் மிக முக்கியமானது. குயாவ் ·பெங்கின் நல்ல அம்சங்களை நான் சொல்லியே தீரவேண்டும். அப்படி என்றால் உங்களது குறைகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. நான் உண்மையைத்தான் சொல்கிறேன்..."

அமைதி சூழ்ந்திருந்தது. பின் வரிசையில் அமர்ந்திருந்த ஒருசில முதியவர்கள் மட்டும் ரகசியக் குரலில் பேசிக் கொண்டனர். "இதப்போய் இந்தப் பொட்டச்சிங்க பெரிசாக்கறாங்களே. ஜியா குய்யுக்கு இதனால எவ்வளவு பெரிய அவமானம்? எதுவேணுமானாலும் இவளுக சொல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டுபேரும் புருசன் - பெண்சாதி தானே? யாரைத் தேர்ந்தெடுத்தாலும் ரெண்டும் ஒன்னுதானே?"

அன்றைய தேர்தலுக்கான கூட்டத் தலைவா குயாவ் ·பெங்கின் வேட்பு முன் மொழி தலை ஒட்டுக்கு விட்டார். எல்லோரும் அந்த வேட்பு மனுவை ஏற்றுக்கொண்டதற்காகக் கை உயர்த்தி ஆமோதித்தனர்.

தன் மனைவி பற்றி கிராமத்தார் இவ்வளவு ஒசத்தியாகப் பேசிக் கொள்கிறார்களே என்று குயின் ஜியா குய் யோசித்தான். அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது; பிறகு கோபமும்



கசப்புமாக மாறியது. அவனது குழுவிலிருந்த பெண்கள் மீது வெறுப்பு வந்தது. "நீங்கள் சற்று முன்னேறியது உண்மையே. ஆனால் நீங்கள் முன்னேறுவதற்கே என் தலைமையல்லவா காரணம்? இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? என் மீதே விமர்சனம் வைக்கிறீர்கள். உங்களுக்கு நாகரீகம் தெரியவில்லையே." அவன் மனத்தில் இப்படி எண்ணங்கள் ஓடின. உடனே அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறி விட நினைத்தான்.

கட்சி செயலர் பேசுவதைக் கேட்கக் கூட குவினுக்கு மனமில்லை. வாங் ஷுன்டேவைப் பேசச் சொல்லி கிராமத்தார் சிலர் கோரினார்கள். தலைவர் குவினைக் கூப்பிட்டார். எதுவும் அவன் காதுகளில் விழவில்லை. இரண்டாம் முறை அவர் அழைத்த போதுதான் சிறக்கத்திலிருந்து வெளியே வந்தான் குவின்.

மேடையை நோக்கி நடந்தான். இப்போது கூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. எனது மனைவி குய்யா ·பெங்கைத் தேர்ந்தெடுங்கள் என்று ஒரு சொல் கேட்டால் போதும், அவனைப் பற்றி எல்லோருமே ஒரு உயர்வான கருத்துக்கு வந்து விடுவார்கள். எப்படியாவது தன் கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவே அவன் நினைத்தான். முஸ்தீபுடன் அவன் பேச்சு ஆரம்பித்தது.

"சகோதர, சகோதரிகளே, என்னுடைய பரஸ்பர உதவிக்குழுதான் இந்தக் கிராமத்திலேயே முதலில் துவக்கப்பட்டதாகும்..." மறுபடி பழைய கதை, இரண்டு வருஷம் முன்னால், போன வருஷம், இப்போதைய நிலை என்று அவன் வரிசையாக நீட்டி வளைத்துப் பேசினான்.

"அடேய், எதுக்குடா பழைய கதை" என்று கிராமத்தார் பொறுமை இழந்தார்கள். "உன்னோட வேலைகள் பற்றி உன் ... மனப்பாடம் ஆகிவிட்டது" என்றார் மற்றொருவர்.

ஒரு வழியாக குவின் முடித்துக் கொண்டான். கைதட்டல் பலமாக மழைபோல் கொட்டியது. அது அவனுக்காக அல்ல. அடுத்து பேச அழைக்கப்பட்ட குய்யா ·பெங்குக்காக.

குவின், மனைவியைப் பார்த்தான். அவள் தலை சட்டென்று நிமிர்ந்தது; அவளது தோள்கள் உயர்ந்தன; அவளது கன்னங்கள் ஒளி சிந்தின; பெரிய கறுப்புக் கண்கள் சுடர்விட்டன; எல்லோரையும் விட சற்று உயரமாகக் கூட தெரிந்தாள். அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக அவள் தெளிவாக நிதானமாகப் பேசினாள்.

"சகோதர, சகோதரிகளே! நாம் செய்துள்ள வேலைகளைத் திரும்பிப் பார்க்கும் போது எனக்கே கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. முதலாவதாக, இந்த வருஷ அறுவடையின் போது குழு உறுப்பினர்களை ஒன்று திரட்டி சிறுவர் பள்ளி ஒன்றைத் துவங்கிவிட வேண்டும் என்று நான் எண்ணியிருந்தேன்; அப்படித்துவங்கியிருந்தால், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அங்கே விட்டு விட்டு கள வேலைகளுக்குப் போக வசதியாக இருந்திருக்கும். அது திட்டம். ஆனால் அந்த நேரம் எனக்கு உடம்பு சுகமில்லை. நான் அந்த வேலையை முடிக்கவில்லை. பிரச்சினைகள் வரும் போது அவற்றை எதிர்த்துப் போராடி காரியத்தைச் சாதிக்கும் மனஉறுதி என்னிடம் போதிய அளவு இல்லை. இது என்னுடைய தவறு. அடுத்ததாக, பரஸ்பர உதவிக் குழுவை நிறுவி மூன்றாண்டுகள் ஆகியும் இன்னமும் இது ஓர் கூட்டுறவுச் சங்கமாக வளரவில்லை. அதற்குத் தகுந்த முயற்சியை நான் மேற்கொள்ளவில்லை... நான் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் இல்லையென்றாலும் இந்த இரு விஷயங்களுக்காக நான் உழைக்கப் போகிறேன்."

கூட்டம் அவளது நேர்மையைப் பாராட்டியது; கைதட்டி அங்கீகரித்து ஆரவாரம் செய்தது.

லி குய் ஹுவா ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டாள். "நடந்ததை எண்ணிப் புலம்பாமல் வரப்போகிற காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்று குய்யா ·பெங் பார்க்கிறாள். இப்படித்தானே வேட்பாளர் இருக்க வேண்டும்?" அவள் கூட்டத்தைப் பார்த்துச் சொன்னாள்.

திடீரென குய்யாவின் மாமியார் எழுந்து நின்றாள். "இதென்னய்யா கொடுமை! நம்மூருக்கு மூணு பிரதிநிதிகள்தான் அனுப்ப முடியும். நீங்க நாலு பேரை வேட்பாளரா நிப்பாட்றீங்க. கட்சி செயலாளருக்கு எல்லாரும் ஓட்டு போட்டுப்புடுவாங்க; டாக்டரய்யாவுக்கு யாராவது ஓட்டுப் போடாம இருப்பாங்களா, அவருக்கும் போட்டுப் புடுவாங்க. கடைசில எம்மவனுக்கும் மருமவளுக்கும்தான் போட்டியா?" என்று வெளிப்படையாக அரற்றத் தொடங்கினாள்.

மாமியார்க்காரியின் பிரச்சினை என்ன என்று எல்லோருக்குமே தெளிவாகத் தெரிந்தது. மருமகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மகன் நிலைகுலைந்து போவான். ஏற்கெனவே கூட்டத் தலைவர் கூட்டம் முடிந்ததை அறிவித்துவிட்டார். மாலையில் தேர்தல் நடக்கும். மாமியாரின் பிரச்சினையைப் பற்றி யாரும் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

இது தேர்தல், பாரபட்சம் காட்ட முடியாது. யார் நல்லவர் என்றாலும் அவரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அதில் ஆண் என்ன, பெண் என்ன? மகனா, மருமகளா என்பதற்கெல்லாம் இங்கென்ன வேலை?

\+ + + +

குவின் ஜியா குய் நேரே வீடு சென்றான். ஒரு வார்த்தையும் சொல்லாமல் படுக்கையில் பொத்தென்று விழுந்தான்.

அவனது தாய்க்குச் சமையலில் உதவி செய்தவாறு குய்யா ·பெங் கலகலவென்று பேசிக் கொண்டிருந்தாள். குவினுக்கு அது பொறுக்கவில்லை.

"ஏய் இங்கே வா" அவன் கத்தினான்.

அவள் உள்ளே வந்தாள். அவள் கைகளில் மாவு, முகத்தில் சிரிப்பு.

"கூட்டத்தில் என்னவெல்லாம் பேசினே? பெரிய இவன்னு நெனப்போ?"

"ஏன், அப்படி என்ன தப்பாப் பேசினேன்?" குய்யா அதிர்ச்சி அடைந்தாள்.

"எதற்காக அப்படிப் பேசினாய்? நம் குழு மூன்று வருஷத்தில் கூட்டுறவுச் சங்கமா வளரல்லேன்னு பேசினியே, எதற்காக அப்படிச் சொன்னே?"

"சே நீ எப்படிப்பட்ட ஆளுன்னு தெரிஞ்சி போச்சு" குய்யா பொங்கிவிட்டான். அவள் நேர்மையானவள், சூதுவாது தெரியாதவள். குவின் அப்படிக் கேட்டது அவளுடைய ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது.

அப்படியே தொடுத்துத் தொடுத்து சண்டை வளர்ந்தது. இரண்டு பேரும் சாப்பிடவில்லை.

மாமியார்க்காரியும் திணறினாள். மருமகள் மீது தப்புச் சொல்ல முடியாது; மகனைத் திட்டவும் முடியாது. கையைப் பிசைந்தாள்; பெருமூச்சு விட்டாள்; முனங்கினாள். கொதிக்கும் மனதை யாரிடமாவது கொட்டி ஆற்ற வேண்டும் போல அவளுக்குத் தோன்றியது. அதன் விளைவு என்ன ஆகும் என்று அவள் யோசிக்கவில்லை.

வெளியே சென்றாள். பெண்கள் கழகத் தலைவர் முதலில் அகப்பட்டார். "தலைவரே, முதலலேயே தலைப்பாடா அடிச்சுகிட்டேன். ரெண்டு பேரையும் நிக்க வெக்காதீங்கன்னு. கல்யாணம் கட்டினதுலேருந்து இப்படி அவுங்க அடிச்சுகிட்டு நின்னதில்லே அவங்க ரெண்டு பேரும் சாப்பிடக்கூட இல்லே..."

அடுத்து லி குய் ஹுவா, அதற்கடுத்து மருமகளை வேட்பாளராக முன்மொழிந்த 'யின்' என்ற பெண்... எல்லோரிடமும் வீட்டில் நடந்த சண்டையை வரிவிடாமல் கொட்டித்தீர்த்தாள்.

'யின்' பக்கத்து வீடுதான். சண்டையின் உச்சத்தில் அவன் கத்தியதெல்லாம் அவளுக்கும் காதில் விழுந்தது. கேட்டு உள்ளுக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்தாள்.

செய்தி கேள்விப்பட்டு அநேகமாக கிராமத்தில் பெண்களும் ஆண்களுமாய்ப் பலர் கூடிவிட்டார். "இவ்வளவு மோசமானவனா குவின்?" எல்லோர் மனத்திலும் அந்தக் கேள்வி எழுந்தது.

மூலம் : சீனச் சிறுகதைத் தொகுப்பு

# ஈராக் தாக்கப்படக் கூடாது! ஒன்று திரண்ட உலகின் குரலும் இதுதான்!

உலக நாடுகள் அனைத்தினதும் கவனம் இன்று வளைகுடாப் பிராந்தியத்தின் பக்கம் திரும்பியுள்ளது. ஈராக் எந்த நேரத்திலும் அமெரிக்கா தலைமையிலான நேசப் படைகளினால் (நாசப் படைகளினால்) தாக்கப்படலாம் என்பது பெரும்பாலும் ஊர்ஜிதமாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அங்கீகாரம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, ஈராக்கைத் தாக்கியே தீருவது என்ற இரத்த வெறியோடு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தொடர்ந்தும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமைதான் இன்றைய பதற்ற நிலைக்கு முக்கிய காரணமாகும்.

அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்களால் ஐக்கிய நாடுகள் சபை என்ற ஒரு அமைப்பு உலகில் அவசியம் தானா? என்ற கேள்வியும் நடு நிலை சிந்தனையாளர்களிடம் எழுந்துள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் நாடுகளுக்கிடையிலான பிணக்குகளை சமரசமாகத் தீர்த்துவைக்கும் ஒரு சமாதான அமைப்பாகத் தான் ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்றது. உலகில் பல நாடுகள் அங்கம் வகிக்கும், பொதுநல வாய அமைப்பு, அணிசேரா அமைப்பு என்று சர்வதேச அமைப்புக்களும், பல பிராந்திய மட்ட அமைப்புக்களும் இருந்த போதிலும், சகல நாடுகளாலும் மிகவும் மரியாதையாக நோக்கப்படும் ஒரு சர்வதேச அமைப்புதான் ஐக்கிய நாடுகள் அமைப்பு. ஆனால் இன்று அதன் மரியாதை கேள்விக்குறியாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்டு அதில் 15 நாடுகளுக்கு பெயரளவில் சுழற்சி முறை அங்கத்துவத்தை வழங்கிவிட்டு ஐந்து நாடுகள் மட்டும் நிரந்தர உறுப்புரிமையை கொண்டுள்ள நிலை என்று உருவாக்கப்பட்டதோ அன்றே அதன் செயற்பாடுகள் வலுவிழந்து விட்டன. மேலும் இந்த ஐந்து நாடுகளுக்கும் வீட்டோ அதிகாரம் வழங்கப்பட்டு எந்த ஒரு தீர்மானத்தையும் தனது வீட்டோ அதிகாரத்தின் மூலம் வலுவிழக்கச் செய்யும் முறை என்று தோற்றுவிக்கப்பட்டதோ அன்றே அதன் செயற்பாடுகளும், நோக்கங்களும் கேள்விக்குரியவை ஆகிவிட்டன.

ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கான தீர்மானமொன்றை பெயரளவில் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்கா பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. இன்று வரை இந்த விடயத்தில் அமெரிக்க மேற்கொண்ட சகல இராஜதந்திர முயற்சிகளும் தோல்வியைத் தழுவியுள்ளன. பாதுகாப்புச் சபையில் பொதுவாக உலக வல்லரசுகள் எனக் கூறப்படும் ஐந்து நிரந்தர நாடுகளும் கருத்தொற்றுமையுடனேயே இதுவரை பெரும்பாலான விடயங்களில் செயற்பட்டு வந்துள்ளன. சிலவேளைகளில் கருத்துவேறுபாடுகளும் தோன்றியுள்ளன. ஆனால் இன்றைய நிலைமை மிகவும் மோசமானது. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை கொண்ட நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்துள்ளன.

ஈராக்கைத் தாக்க வேண்டும் என்ற பிரேரணை கொண்டுவரப்பட்டால் தமது வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து அதனை வலுவிழக்கச் செய்யப் போவதாக சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளன. ஆனால், இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதில் பிரிட்டனும், அமெரிக்காவும் மட்டும் ஓரணியில் உள்ளன. ஏதாவது ஒரு தீர்மானத்துக்கு ஒரு நாடு தனது வீட்டோவை பாவித்தாலே போதும். அது செயலற்றதாகிவிடும். ஆனால் மூன்று நாடுகள் வீட்டோவை பாவித்தாலும் பரவாயில்லை, அதையும் மீறி தாக்குதலை நடத்தியே தீருவோம் என அமெரிக்கா அடம் பிடிக்கின்றது. அப்படியாயின் பாதுகாப்புச் சபை என்ற அமைப்பு எதற்கு? அதில் வீட்டோ அதிகாரம் எதற்கு? ஏன் ஐக்கிய நாடுகள் சபைதான் எதற்கு? என்ற கேள்விகள் எழுவது நியாயமாகிவிட்டது.

இதில் இன்னொரு விடயத்தையும் கருத்திற் கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சாசனப்படி ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடோ அல்லது நாடுகளோ தாக்குதல் நடத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்க முடியாது என்பதும் அண்மைக் காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை எமது நாட்டைச் சேர்ந்த நீதித்துறையில் புகழ் பூத்த நீதியரசர் வீரமந்திரி வலியுறுத்தியுள்ளார். சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றிய அறிவும் அனுபவமும் மிக்க நீதியரசர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பு உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு. சமாதானமான முறையில்தான் அங்கு பிரச்சினைகளுக்கான தீர்வு எட்டப்பட வேண்டுமே தவிர, சண்டைகள் மூலம் அல்ல என்ற கருத்தை நீதித்துறை வல்லுனர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆனால், இந்தக் கருத்துக்களை எல்லாம் புறந்தள்ளிவிட்டு இதுவரை ஐக்கிய நாடுகள் சபையை தவறான வழியில் இட்டுச் சென்றது போலவே, இன்று ஈராக் விடயத்திலும் ஐக்கிய நாடுகள் சபையை தவறான ஒரு பாதையில் திசை திருப்ப அமெரிக்கா முறப்பட்டுள்ளது.


இந்த முயற்சிகள் பலனளிக்காவிட்டால், சர்வதேச சட்டங்களையும், மரபுகளையும், மக்களின் அபிலாஷைகளையும் ஒட்டுமொத்தமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு தனது வெறித்தனத்தை அரங்கேற்றப் போவதாக அமெரிக்கா சூளுரைத்து வருகின்றது. ஈராக் விவகாரம் தொடர்பாக மேற்கு நாடுகள் பலவற்றில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் ஈராக் தாக்கப்படக் கூடாது என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தாக உள்ளது. ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் 80 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் அமெரிக்காவின் வெறித்தனத்துக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்துள்ளனர். பல நாடுகள் தாக்குதல் திட்டத்துக்கு எதிராக திட்டவட்டமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளன.

இது மட்டுமன்றி உலகில் ஒரே நேரத்தில் 60க்கும் மேற்பட்ட நகரங்களில் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி அமெரிக்காவின் தாக்குதல் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவின் நியூயோர்க் வாஷிங்டன் ஆகிய முக்கிய நகரங்களிலும் கூட இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம் பெற்றுள்ளன. வரலாறு காணாத அளவுக்கு மக்கள் வெள்ளம் இந்த ஆர்ப்பாட்டங்களில் அலைமோதியுள்ளது. அமெரிக்காவின் வரலாற்றில் ஒரு நிர்வாகத்துக்கு எதிராக பெருந்திரளான மக்கள் அணி திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியமை இதுதான் முதற்தடவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே நிலைதான் பிரிட்டனிலும், பிரிட்டனின் வரலாற்றில் ஆட்சியில் உள்ள ஒரு கட்சியின் முடிவுக்கு எதிராக இந்தளவு மக்கள் வெள்ளம் திரண்டதில்லை என்று லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை நேரடியாகக் கண்ணுற்ற வரலாற்றியலாளர்கள் கருத்துத் தெரிவித்தனர். ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று பெரும்பான்மை கருத்துக்கு மதிப்பளிப்பது. உலகில் தன்னை தலைசிறந்த ஜனநாயகநாடாக உருவகித்துக் காட்டிவரும் அமெரிக்கா ஈராக் விடயத்தில் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைப்பது ஏன்?

ஈராக்கை அமெரிக்கா தாக்குவதற்கான வலுவான காரணங்கள் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் சோதனை நடத்த வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டது. ஈராக் அதற்கு இணங்கியது. தன்னிடமுள்ள ஆயுத இரகசியங்களை ஈராக் வெளியிட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு இணங்கி 12 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட அறிக்கையை எழுத்து மூலமாகவும், ஈராக் வெளியிட்டது. ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த ஆவணங்களை அமெரிக்கா திருடிச் சென்றது. ஆனால், எந்த ஒரு நாடும் இது பற்றி வாய் திறக்கவில்லை.

ஈராக்கில் சோதனையிட்ட அதிகாரிகள் சந்தேகத்துக்கு இடமான முறையில் அமெரிக்கா கூறுவதுபோல் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் எதுவும் ஈராக்கிடம் இல்லை என்று அறிக்கை சமர்ப்பித்தனர். இதனை ஏற்க அமெரிக்கா மறுத்தது. பதிலுக்கு அமெரிக்கா தன்னிடம் இதற்கான சான்றுகள் இருப்பதாகக் கூறி பாதுகாப்புச் சபையில் அவற்றைச் சமர்ப்பித்தது. கொலின்பவல் இந்த ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவை என்பதை நிரூபிக்க தனக்குத் தெரிந்த வித்தைகள் அனைத்தையும் பாதுகாப்புச் சபையில் அவிழ்த்துவிட்டார். ஒன்றும் பலிக்கவில்லை. அமெரிக்காவையும் அதன் நேசநாடுகளையும் தவிர வேறு ஒரு நாடும் இந்த ஆவணங்கள் நம்பகத் தன்மை வாய்ந்தவை என ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் விளைவாக ஆயுத பரிசோதகர்களை பக்தாத் அனுப்ப வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அவர்களும் அங்கு சென்றார்கள். சதாம் ஹுசைனின் தனிப்பட்ட மாளிகை உட்பட சந்தேகத்திற்குரிய சகல இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. கடைசியாக ஈராக்கிடம் 'அல் சமூத்' ஏவுகணை இருப்பதாகவும் அதன் வீச்சுதூரம் கூடியது என்றும், இந்த வீச்சு தூரம் குறைக்கப்பட வேண்டும், அல்லது அந்த ஏவுகணைகள் முற்றாக அழிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவுக்கும் ஈராக் இணங்கியது. பாதுகாப்புச் சபையில் ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர்கள் இரண்டாவது அறிக்கையையும் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையில் ஈராக் பெருமளவுக்கு ஆயுதக் களைவை மேற்கொண்டுள்ளதாகவும், இதில் தமக்கு பூரண திருப்தி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். அது மட்டுமன்றி ஈராக் நைகர் நாட்டிலிருந்து யுரேனியத்தை கொள்வனவு செய்து பதுக்கி வைத்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்த குற்றச்சாட்டை ஆயுதப் பரிசோதனைக் குழுவின் தலைவர் ஹேன்ஸ் பிலிக்ஸ் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இதற்கும் மேலாக இந்த விடயத்தில் அமெரிக்கா சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என்றும் அவர் கூறிவிட்டார். இதன் மூலம் சர்வதேச ரீதியில் அமெரிக்காவின் சாயம் வெளுத்து விட்டது.




அமெரிக்கா ஈராக்கைச் சுற்றிப் படைகளைக் குவித்து வைத்துள்ள நிலையிலும், ஏற்கனவே அந்த நாட்டின் வடபகுதி மீது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விமான சூனியப் பிரதேசத்தின் மூலம் அவ்வப்போது சிறு அளவிலான தாக்குதல்களைத் தொடுத்து வருகின்ற நிலையிலும் பாரிய அளவிலான இராணுவத் தாக்குதலுக்கான சர்வதேச ஆதரவையும், இராஜதந்திர அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதில் அடுத்தடுத்து தோல்விகளையே தழுவி வருகின்றது. அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஐக்கிய நாடுகள் ஆயுதப் பரிசோதகர்களின் முடிவை ஏற்றுக்கொள்ளவும் அது தயாராக இல்லை. ஈராக்கைத் தாக்க வேண்டும் என்பது அமெரிக்கா ஏற்கனவே எடுத்துள்ள திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான காரணிகளைத்தான் அது தேடி வருகின்றது. அந்தக் காரணிகள் கிடைக்காவிட்டாலும் கூட தனது திட்டத்தை நிறைவேற்றியே தீருவது என்ற வெறியோடு அமெரிக்கா சகல ஆயத்தங்களையும் செய்து வருகின்றது. இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்காமல், சர்வதேச சட்ட ஒழுங்குகளை அமெரிக்கா பிடிவாதமாக மீறினால் அதற்கெதிராக உலக நாடுகள் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன? அமெரிக்க வெறித்தனத்துக்குப் பலியாகப்போகும் அப்பாவி ஈராக் மக்களுக்கு சர்வதேச சமூகம் வழங்கப் போகும் உத்தரவாதம் என்ன?

---




அன்று,
அதி உத்தமரைச்
சந்திக்கப் போனது போல்
சிலர் வன்னிக்குப் போனார்கள்!
போய்வந்து,
'கண்டதே பாக்கியம்!
காணக் கிடைத்தது
பெரும் பாக்கியம்!!"
என்று, கதை அளந்தார்கள்!

'மட்டின் புரியாணி
முழுக் கோழி பொரிச்சி..
ஆக்கியிருந்தார்கள்!

அடேயப்பா...!
அதை, சொல்லி வேவையில்லை!
என்ன....கவனிப்பு...!"
என்று
"காணாமல் கண்டதுபோல்"
கதைத்துத் திரிந்தார்கள்.

"நான் முந்தி நீ முந்தி"
என்று
கமராவுக்கு போஸ் கொடுத்து
ரீவிக்கும் தலையைக்
காட்டினார்கள்.
ஹுதைபிய்யா

உடன்படிக்கை போன்றது
எங்கள் ஒப்பந்தம்
என்றும் புளுகினார்கள்!
கொட்டை எழுத்துக்களில்
செய்தியும் வந்தது!

எழுதிய மை காயவில்லை!
வாழைச்சேனையிலும்
மூதூரிலும்
எழுதிய எழுத்தும் அழிந்து...
பேனாவின்
கூரும் உடைந்தது!

இன்று,
என்ன நடக்கிது...?
என்று கேட்டால்
'காலம் கனியட்டும்'
என்றார்கள்!
காலம் கனியும்வரை
காத்திருந்தால்...
காகமும் வௌவாலும்
தின்றதுபோக
கொட்டைதான் மிஞ்சும்!
உதக்காயாப் பார்த்து
ஆய்ஞ்சி
பழுக்க வைத்தால் என்ன...?'
என்றால்,
மரத்தில் நின்றே
பழுக்கட்டும்!' என்கிறார்கள்.

"மக்கா வெற்றி எப்பவோ...?"
என்று கேட்டால்...
"வழியில் அபூஜஹில்...?"
என்று,
வாய் உளறுகிறார்கள்!
வேதம் ஓதி
விளக்கம் தருவதில்
சாத்தானை மிஞ்சி...
சரித்திரம் படைக்கிறார்கள்!
குப்புற விழுந்தாலும்
மீசையில்
மண்படவில்லையென்று
மார்பு தட்டுகிறார்கள்!
செவிடனுக்கு செவிடன்
சங்கூதி...
கச்சேரி நடத்துகிறார்கள்!

கேட்பதற்கு ஆளிருந்தால்...
இதுவும் சொல்வார்கள்!
இன்னமும் சொல்வார்கள்!

நல்லாயிருக்குதென்று
நாலுமனிசர்
'ருசித்து' உண்ணும்படியாக
'பேரெடுத்த நளபாகன்,'
'நாலடிச்சீர்' சாப்பாடு
சமைத்து வைத்தான்!
பதறி அடித்து ஓடிப்போய்...
பந்தியில்
'முந்திக்குந்தி' என்ன பயன்?

'சகனுக்குள்' இருந்த....
'பொரிச்ச கோழி'யையும்
காணவில்லை!
கூடவே இருந்த...
'ஆட்டுக் கறியையும்'
காணவில்லை!
வெள்ளச் சோறும்
பருப்பும் கிழங்கும்தான்
மிச்சம்!
காணாத்த கோழி...
'எங்கோ' போய் நின்று
தூரத்தில்...
கூவுவது கேட்டது!
ஆட்டுக்கிடாய்
'எங்கோ'போய் நின்று
தூரத்தில்...
கத்துவது கேட்டது!

ஒட்டு மொத்தத்தில்..
முந்திப் போய் குந்தியவர்
முழிசாட்டம்!?
கோழிக்கும் குருடு!
ஆட்டுக்கும் குருடு!
குருட்டுக்கு,
குருடு வழிகாட்டி
'ஊர் போய் சேரலாமோ?

- மருதூர்க்கனி

முஸ்லிம் குரலில்
செய்தியாளராக விரும்புகிறீர்களா?
முஸ்லிம் குரலின் வளர்ச்சியின்
பங்குதாரராக பங்களிக்கத் தயாரா?
நீங்கள் செய்ய வேண்டியது.....
உங்கள் எழுத்தாற்றலை நிரூபிக்கும்
வகையில் உங்கள் பிரதேச செய்திகளை,
அரசியல் அவதானங்களை, தெளிவுடன்
எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் முழு விபரத்துடன்!
ஆதாரத்துடன்
செய்திகள் எழுதப்படுவதோடு
நீதிமன்ற, பொலிஸ்,
அடக்குமுறை செயற்பாடுகளை
எதிர் கொள்வதற்கும் நெஞ்சுரத்துடன்
இருப்பதே சிறந்த தகுதி!
நமது பத்திரிகையின் பங்குதாரராக
விரும்புவர்கள் நமது பத்திரிகையின்
பிரதிகளை மக்கள் மத்தியில் விநியோகம்
செய்து நமது மக்களுக்கும்
பத்திரிகைக்குமான
உறவினை பலப்படுத்த வேண்டும்.
சமூகப் பங்களிப்புக்கு தயாரானவர்கள்
முன்வரலாம் முன் மாதிரியாகவும்
செயற்படலாம்!
அதிக ஆவலுடன் உள்ளோம்!

---

சுவடு - 04
முஸ்லிம் குரல்
Muslim Kural
මුස්ලිම් කුරල්
14 மார்ச் 2003    10 - முஹர்ரம் - 1424
Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

## கறுப்புத்துரைகளினதும் வெள்ளைத்துரைகளினதும் அகங்காரமிக்க ஆதிக்கக் கருத்துக்கள் கண்டிக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் வீசியெறியப்படவேண்டியவையுமாகும்.

மூடி மூடி மறைத்து வைத்து வந்த முஸ்லிம்கள் தொடர்பான ஆதிக்கக் கருத்துக்கள், மீண்டும் அரசியல் திரைவிலக்கி அம்பலத்துக்கு வந்துவிட்டது. சொந்த மக்களின் அரசியல் தலைமைகளுடன் சேர்ந்து ஆடிய அரங்கையே முஸ்லிம்கள் நிராகரித்துவிட்டதன் பின் - "இனி இது சரிப்பட்டு வராது" என்ற நிலையில் தங்களாலேயே திரையை விலக்கி வைக்கவேண்டிய அவசியம் விடுதலைப்புலிகளுக்கும் நோர்வேக்கும் வந்துவிட்டது.

முஸ்லிம் மக்களின் அரசியல் தலைமைகளையும் ரணில் விக்ரமசிங்கவின் ஆளும் குழுமத்தையும் வைத்து "சமாதானத்தின் பெயரால் முஸ்லிம்களுக்கு நிரந்தர அடிமைச்சாசனம்" எழுதக் கண்ட கனவு, முஸ்லிம் மக்களுக்குள் இருந்த தன்னியல்பான அரசியல் விழிப்புணர்ச்சியினால் கைகூட முடியாத போது, விடுதலைப்புலிகளும் நோர்வேயும் தனது சொந்தக்குரலால் ஆதிக்கத் தொனியுடன் இப்போது பேச முற்பட்டுள்ளன.

இவ்வாதிக்கக் குரல்களின் பின்னால் இருக்கும் அடக்குமுறைச் சிந்தனைக்கூறுகளும், அரசியல் அடாவடித்தனமும் வெறுமனே கண்டிக்கப்படவேண்டியவை மட்டுமல்ல, சுதந்திரமிகு மானுட விடுதலையின் வரலாற்றின் குப்பைக்கூடைக்குள் வீசியெறியப்படவேண்டியவையுமாகும் என்பதை சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளும் உணர்வர்.

"முஸ்லிம் மக்களுக்கான அதிகார அலகை ஏற்றுக்கொள்ள முடியாது" என அரசியல் உறுதியுடன் விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமையும் தமிழ் கூட்டமைப்பினரும் கிளிநொச்சியில் வைத்து பகிரங்கமாகவே வெளிப்படுத்தி விட்டனர். இதற்கு மறுதினமே, நோர்வேயின் பிரதிநிதி திருவாளர் எரிக்சொல்ஹெய்ம், முஸ்லிம்கள் நடைபெற்றுவரும் அரசியல் பேச்சுவார்த்தையில் தனிக்குழுவாக பங்குபற்றுவதைக்கூட அரசும் விடுதலைப்புலிகளுமே முடிவு செய்ய வேண்டும் என "நோர்வேக்குரிய ஜனநாயகத்துடன் கூடிய" கருத்தினை வெளிப்படுத்தியுமுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்குள், முஸ்லிம்களால் சுயாதீனமாக எடுக்கப்பட வேண்டிய அரசியல் தீர்மானங்களையும் அரசியல் நிலைப்பாடுகளையும் மறுத்து, ஆதிக்க நோக்கில் விடுதலைப்புலிகளும் நோர்வேயும் "தங்கள் வீட்டுச்சொத்தாக" முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை ஏக போகமாக்கி - முஸ்லிம்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை தொடர்ந்தும் மறுத்து நிற்கின்றனர்.

சுதந்திரமிக்க ஒரு தேசிய இனத்தின் அரசியல் இறைமைக்குள் எதேச்சதிகாரமாக கை வைத்து மோசடித்தனமாக ஆடும் அரசியல் நாடகத்தினை, தீர்க்கமான அரசியல் உறுதியுடன் நமது அரசியல் தலைமைகள் இதுவரை நிராகரிக்கவில்லை. மக்களுக்காக உறுதியுடன் போராட வருமாறு குரல் எழுப்பிய புதிய, இளம் தலைவர்களைக்கூட இப்போது நமது அரசியல் அரங்கில் காணக்கிடைக்கவில்லை.

1990களிலிருந்து விடுதலைப்புலிகள் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்த பாசிசத்தின் வடுக்கள் இன்னும் மறையவில்லை. பலஸ்தீன சுதந்திரத் தாயகத்தில் சமாதானத்தின் பெயரால் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு துணைபோன நோர்வேயின் ராஜதந்திரப்பணிகள் பலஸ்தீன மக்களை நிரந்தர அடிமைகளாக அரசியல் சகதிக்குள் தள்ளியுள்ள வரலாறு இன்னும் மறக்கப்படவில்லை. யஸீர் அரபாத்தை துரோகத்தனத்தின் ஏவலாளாக மாற்றிய நோர்வேயின் கைங்கரியம் இங்கும் பலித்துத்தான் விட்டது.

நடைபெற்றுவரும் அனைத்தையும் நமது மக்கள் அரசியல் உணர்வுடன் மிக உன்னிப்பாக பார்த்துக்கொண்டே வருகின்றனர். நமது மக்களின் சுயநிர்ணய உரிமத்தின் மீதும் சுதந்திர தாயகத்தின் மீதும் ஆக்கிரமிப்பு செய்வதை நமது மக்கள் ஒருக்காலும் அனுமதிக்கவே மாட்டர். இவ்வரலாற்று உண்மையை ஆதிக்க அடக்குமுறை சக்திகள் புரிந்துகொள்ளவேண்டும்.

உன்னத சமாதானமே முஸ்லிம்களின் வாழ்வும் பணியுமாகும்.

-அன்புடன்
பிரதம ஆசிரியர்.

இப்பத்திரிகை 143, முகாந்திரம் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org